

## ஞாபக மறதி

இறந்துப்போன
அப்பாவை
மண்ணுக்குள்
வைக்கும்போதுதான்
ஞாபகம் வந்தது...
மூன்று மாதமாய்
அப்பா அவசரமாய்
கேட்டுக்கொண்டிருந்த
போர்வை!

—ச. கிருத்திகா,
திருவாரூர்.

# குயில்கள்



## முதிர்கன்னி

கவலையில்
கறுத்துக்கொண்டிருக்கும்
முகத்திற்கு
வெள்ளையாய் பவுடரையும்...
வேதனையால்
வெள்ளையாகிக்கொண்டிருக்கும்
கூந்தலுக்கு கறுப்பாய்
சாயத்தையும் பூசுபவள்!

—கு. வைரச்சந்திரன், திருச்சி.

## சுமைகள்

நேற்று தூக்க மறுத்தேன்
பாடச் சுமையை!
இன்று முதுகில் கனக்கிறது
மூடைச் சுமை!

—வெ. ஜானகி,
அய்யம்பேட்டை.





# இயற்கை பரிசு



**க**ணவனை இழந்த கண்ணம்மாள், மாங்காய் சீசன் என்பதால் கிலோ 3 ரூபாய் வீதம் 50 கிலோ வாங்கி, கிலோ 4 ரூபாய்க்கு விற்கலாம் என்ற ஆசையில் வீட்டில் இறக்கி வைத்தாள். அப்போது, "கண்ணம்மா, என் மகளுக்கு பிரசவ நேரம், பக்கத்து டவுன் ஆஸ்பத்திரியில் சேர்க்கணும், 4 நாள் தங்குற மாதிரி வாயேன்" என்றாள், பக்கத்து வீட்டு கமலம்.

'காசு முக்கியமில்லை. மனுசாள்தான் முக்கியம்' என்று நினைத்தவள், வாங்கின மாங்காயை வீட்டு மூலையில் கொட்டிவிட்டுப் புறப்பட்டாள், மருத்துவமனைக்கு.

அந்தப் பெண்ணுக்கு சுகப்பிரவசம். மூணாம் நாளே புறப்பட்டனர். வீட்டுக்கு வந்து பார்த்தாள், கண்ணம்மாள். மாங்காய் எல்லாம் பழமாக சிரித்தது. பழக்கடையில் கொடுத்தாள். கிலோ 10 ரூபாய் போட்டு எடுத்துக்கொண்டார், கடைக்காரர்.

'தன்னலமில்லாமல் உதவியதற்கு கடவுள் கொடுத்த பரிசு, இது' என்று மகிழ்ந்தாள், கண்ணம்மாள்.

**-வீர. செல்வம், பூம்புகார்.**









# ஒரு ஜனவரி இரவு

## ராஜேஷ்குமார்

### 1

**அ**டர்த்தியான நீலநிறத்தில் கடல் பரப்பு மாதிரி தெரிந்த அந்த 'வெல்வெட்' திரை உயர்த்தப்பட்டதும், அரங்கம் முழுவதும் கைத்தட்டலால் ஒரு நிமிடத்துக்கு அதிர்ந்தது.

மேடையின் மையத்தில் ஒரு சின்ன ஒளிப்புள்ளியாய் நின்று கைகளைக் குவித்த கார்த்திகா தன் சலங்கை கட்டிய பாதங்களை ஒரு சிலிர்ப்போடு அசைத்தாள்.

"ஜல்ல்ல்... ஜல்ல்ல்..."

மேடையின் முன்புற ஓரமாய் இருந்த வெகு துல்லியமான

மைக்குகள் அந்த 'ஜல்ஜல்' சத்தத்தைக் கிரகித்து– அரங்கச் சுவர்களில் பதிந்திருந்த சதுர வானொலிப்பெட்டிகளின் வழியே– பெரிதான உற்சாகத்தோடு வழிந்தது. மேடையின் பக்கவாட்டில் ஒளிந்திருந்த மிருதங்கம், தன் ஒற்றையடியைத் தொடங்க– அது உச்சரித்த சங்கீத பாவங்களுக்குக் கட்டுப்பட்டுக் கால்களை லாவகமாகப் பெயர்த்து நடந்தாள், கார்த்திகா.

அரங்கம் மறுபடியும் கடலாய் ஆர்ப்பாட்டம் பண்ணியது. மேடைக்கு முன்புறம் இருந்த ஊதா, பச்சை நிற விளக்குகள்– மஞ்சள் நிற விளக்குகளோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு– புதிது புதிதான நிறங்களை உற்பத்தி செய்து கார்த்திகாவை நனைத்தது.

கார்த்திகா சுழன்றாள்.

தொடக்கத்தில் மெதுவாய்... பிறகு, கொஞ்சம் கொஞ்சமாய் வேகத்தைக் கூட்டி– உடம்பில் மொழி பேசி, மேடை பூராவும் துள்ளித் துள்ளி வந்தாள். மிருதங்கமும், பாட்டும் உச்சநிலைக்கு வந்த அதே விநாடி– அவள் பார்வையில்–

அரங்கத்தின் மைய நாற்காலியில் இருந்து அவன் எழுந்தான். உயரமாய் இருந்தான். கறுப்புப் பேண்ட், கறுப்பு சட்டையில் கனமாய்த் திணித்துக் கையில் நீளமாய்...

அதென்ன?

ஆடிக்கொண்டிருந்த கார்த்திகா அதிர்ந்துபோய் ஜதி தப்பினாள்.

மறுபடியும் அவனுடைய கையைப் பார்த்தாள். ராஜாக்கள் வைத்திருந்ததைப் போன்ற சற்றே வளைவான நீண்ட கத்தி, அரங்கத்தில் கவிழ்ந்திருந்த அந்த மெல்லிய இருட்டிலும் தீர்க்கமாய் மின்னியது. அவன் யாரையும் லட்சியம் பண்ணாமல் தைரியமாய் நேர்ப்பார்வை பார்த்துக்கொண்டு மேடையை நோக்கி நடந்தான்.

கண் இமைக்கும் நேரத்தில் மேடை மீது தாவினான்.

அவளுடைய தொடைப் பாகங்களுக்கு கீழே– பார்வையைத் தாழ்த்திக்கொண்டு– பக்கவாட்டில் வலமிருந்து இடமாக 'வீய்ய்ய்ங்கென்று' காற்றில் கத்தியை வீசினான்.

சலங்கை கட்டிய இரண்டு கால்களும் ரத்தப்பெருக்கோடு எகிறிப்போய் விழ–

'க்றீச்ச்ச்ச்...'சென்று அலறிக்கொண்டே படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தாள், கார்த்திகா.

"என்ன கார்த்தி..." என்று அவள் அருகே படுத்திருந்த புவனேஷ்– அவளுடைய அழகான கணவன், விருட்டென்று எழுந்தபடி கேட்டான்.



கார்த்திகாவின் உடம்பு மெலிதாய் நடுங்கிக்கொண்டிருந்தது. பின்னங்கழுத்தும், முகமும் சொதசொதப்பான வியர்வையில் இருந்தன.

"ஒ...ஒண்ணுமில்லீங்க... ஏ...ஏ...ஏதோ கனவு..."

"இப்படி வீறிட்டுக் கத்தற மாதிரி என்ன கனவு?"

கனவைச் சொன்னாள், கார்த்திகா. "நான் நடனம் ஆடிகிட்டு இருக்கும்போது மேடை மேல் யாரோ ஒருத்தன் ஏறி– கையில் வைச்சிருந்த நீளமான கத்தியாலே என்னோட ரெண்டு காலையும் வெட்டுறான்... சலங்கை கட்டின என் ரெண்டு காலும் ரத்தத்தைக் கொட்டிகிட்டே எகிறிப்போய் விழுகுது..."

"கொடூரமான கனவு" என்றான், புவனேஷ்.

"எனக்கு பயமா இருக்குங்க... மணி எவ்வளவு...?"

புவனேஷ் கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு சொன்னான்: "மணி அஞ்சு பத்து. விடியப்போகுது."

"விடிகாலையில கனவு கண்டா பலிக்கும்னு சொல்லுவாங்க."

புவனேஷ் சிரித்தான். "பைத்தியம் மாதிரி பேசாதே கார்த்தி. நீ உண்மையாவே ஒரு டான்ஸர். நீ நடனம் ஆடற மாதிரி கனவு வந்தா அதிலென்ன ஆச்சரியம் இருக்கு? உன்னோட அடிமனசுல புதைஞ்சி இருக்கிற ஒரு பயம், அந்தக் கனவுக்கு ஒரு பயங்கரமான கற்பனையைக் கொடுத்திருக்கு. அவ்வளவுதான். விடிகாலை நேரத்துல எனக்கு எத்தனையோ கனவுகள் வந்திருக்கு. ஒண்ணுகூடப் பலிச்சதே இல்லை. உதாரணத்துக்கு ஒண்ணு சொல்லட்டுமா?"

"ம்..."

"போன ஆண்டு தேர்தல் நேரம். டி.வியில் செய்தி பார்த்துவிட்டுப் படுத்துட்டேன். ஒரு கனவு. கனவுல நம்ம பங்களாவுக்கு முன்னாடி கார் வந்து நிக்குது. குல்லா போட்டுகிட்டு மெய்க்காப்பாளர்களோடு கவர்னர் இறங்கி வர்றார்.

'எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்காததினாலே குலுக்கல் முறையில் ஒருவரை முதலமைச்சரா தேர்ந்தெடுக்க முடிவுபண்ணி, தமிழ்நாட்டில் இருக்கிற நாலு கோடி பேரோட பெயர்களையும் குலுக்கிப்போட்டு ஒரு சீட்டை எடுத்தோம். சீட்டில் உங்க பேர் இருந்தது. பதவிப்பிரமாணம் எடுத்துக்க வர்றீங்களா?'ன்னு கவர்னர் கேட்டார்.

அதே விநாடி, கடிகாரத்தின் அலார அலறல். எழுந்திருச்சிப் பார்க்கிறேன், விடிகாலை அஞ்சேகால் மணி. தெருவுல பட்டாசு சத்தம். ஏதோ ஒரு கட்சிக்கு மாறாக மெஜாரிட்டி கிடைச்சிருக்கு

விடிகலையில கண்ட கனவு பலிக்கிறதா இருந்தா நான் இன்னிக்கு முதலமைச்சர் ஆயிருக்கணும். ஆகலியே!"

சேலைத் தலைப்பால் வியர்வையை ஒற்றிக்கொண்டு, கார்த்திகா புன்னகைத்தாள். "விடிகாலையில் வர்ற நல்ல கனவுகளுக்குப் பலன் இருக்காதாம். கெட்ட கனவுகளுக்குத்தான் பலன் இருக்குமாம். இன்னிக்குச் சாயந்திரம் அகாடமி அரங்கத்துல நடக்கப்போற என்னோட நடன நிகழ்ச்சி நல்லபடியா முடியணுமேன்னு கவலையா இருந்த" சொல்லிக்கொண்டே படுக்கையில் இருந்து இறங்க முயன்ற கார்த்திகாவின் கையைப் பற்றினான், புவனேஷ்.

"எங்கே போறே, கார்த்தி?"

"நான் சீக்கிரம் குளிச்சு தயாராகணும்."

"என்ன விசேஷம்?"

"டி.வி. நிலையத்தில் இருந்து பேட்டிக்காக வர்றாங்க. ஏழு மணிக்கெல்லாம் காமிராவும் கையுமா வந்துடுவாங்க. அவங்க வர்றப்ப நான் தயாரா இருக்க வேண்டாமா?"

அவங்க ஏழு மணிக்குத்தானே வருவாங்க. இப்போ மணி அஞ்சேகால். அஞ்சேமுக்கால் வரைக்கும் எனக்குக் 'கால்ஷீட்' கொடு."

"எதுக்கு?"

"கல்யாணமாகி ஆறு மாசமாகப்போகுது. நான் 'கால்ஷீட்' கேட்டா எதுக்குன்னு உனக்குத் தெரியாதா?"

"சீச்சி... உங்களுக்கு நேரம் காலமே கிடையாது."

"அதுக்கெல்லாம் நேரம் காலம் பார்க்கிற மாதிரி இருந்தா... இந்தியாவோட ஜனத்தொகை இப்படிப் பெருகி இருக்காது. ட் 'கால்ஷீட்' கிடைக்குமா கிடைக்காதா?"

"மன்னிக்கணும், என் அருமைக் கணவரே."

கார்த்திகா அவனது கையை உதறிக்கொண்டு குளியலறையை நோக்கி நடந்தாள். அப்படி நடந்த கார்த்திகாவுக்கு கொன்றைப்பூ நிறம். கொன்றைப் பூவைப் பற்றித் தெரியாதவர்கள் செண்பகப் பூவை ஞாபகத்துக்குக் கொண்டுவந்து ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். சற்று நீள்வட்டமான முகத்தில் நீலச்சுடர்கள் அசைகிற மாதிரி இரண்டு விழிகள். விசேஷமான விசேஷம், ராதாவின் நாசிப் பிரதேசம், சதைப்பிடிப்பான சின்ன உதடுகளுக்குக் கீழே- பீங்கான் பாத்திரமாய் வழவழக்கும் மோவாய். அப்புறம்... மற்றப் பிரதேசங்களைப் பற்றி வர்ணிப்பதற்குள் அவள் குளியலறைக்குள் நுழைந்துவிட்டதால்-

இப்போது நம் கண்களில் தென்படுபவன், புவனேஷ். அவன் மாநிறமானாலும் அந்த நிறத்தில் ஒரு 'பாலிஷ்'தனம்



தெரிந்தது. அடர்த்தியான கிராப்பும், மேல் உதட்டுப் பரப்பில் செழித்திருந்த மீசையும் அவனுக்கு ஒரு 'ஹீ-மேன்'தனத்தைத் தந்துகொண்டிருந்தன.

ஒரு கம்பெனிக்கு 'எம்டி.'யாய் இருக்கும் புவனேஷ், கொஞ்சம் வித்தியாசமானவன். அவனுடைய முக்கிய குறி தொழில். அது அமோகமாய் நடக்கிறபட்சத்தில் கார்த்திகாவைச் சுற்றி சுற்றி வந்து கொஞ்சுவான். சாலையோரமாய் காரை நிறுத்தி, அங்கே உட்கார்ந்திருக்கும் பிச்சைக்காரனைக் கூப்பிட்டு, ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்து, 'பிரியாணி சாப்பிடு போ' என்பான். அதே புவனேஷ் தொழிலில் குழப்பமென்றால், மதுகோப்பையை கையில் உருட்டிக்கொண்டு மவுனமாய் டி.வி. பார்ப்பான்.

ராத்திரி படுக்கையில் கார்த்திகா அவனை நெருங்கினாலும், உற்சாகம் காட்டாமல், 'அந்த அகர்வால் ரெண்டு லட்ச ரூபாய் ஆர்டரை இப்படித் திடீர்னு ரத்து பண்ணிட்டானே. எதுக்கும் அகமதாபாத்துக்கு நேரிலேயே ஒரு தடவை போய்ப் பார்த்துட்டு வந்துடுறது நல்லது'ன்னு எனக்குத் தோணுது கார்த்திகா. நீ என்ன நினைக்கிறே?' என்று பெருமூச்சோடு கேட்பான்.

பரதநாட்டியத்தில் கார்த்திகாவுக்கு கிடைத்திருக்கும் பேரும், புகழும் பற்றி அவன் என்றைக்குமே பெருமிதமாக எண்ணிக்கொண்டதில்லை. கதை- கட்டுரை எழுதுபவர்கள், பாட்டுப் பாடுகிறவர்கள், நடனம் ஆடுபவர்கள் இவர்கள் எல்லாருமே சோம்பேறிகள் என்பது புவனேஷ் கணிப்பு. "எண்பது வயசானாலும் நான் தொழிலை கவனிப்பேன். அந்த வயதில் உன்னால் நடனம் ஆட முடியுமா?" என்று கார்த்திகாவிடம் கேட்பான்.

**கா**லை ஏழு மணி.

குங்கும நிறப் பட்டுச்சேலையிலும், மூச்சை அடைக்கிற ஜாதிமல்லிப் பந்திலும் அமர்க்களம் பண்ணின கார்த்திகா- எதிரே உட்கார்ந்திருந்த 'டி.வி.' நிருபருக்குப் புன்னகையோடு அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு இருந்தாள்.

நிருபர் கேட்டார்: "திருமணம் ஆனபிறகு பரதநாட்டிடம் ஆடுவது தப்பு என்று ஒருசாரார் சொல்வதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க கார்த்திகா? ஒரு குறிப்பிட்ட வயசுக்குமேல் பரதநாட்டியம் ஆடக்கூடாதுன்னு ஏதேனும் வரைமுறை உண்டா?"

கார்த்திகா புன்னகைத்தாள்.

"உடம்புல தெம்பும், ஆடுற லாவகமும்; உடல்வாகும் இருந்தா எந்த வயசிலும் நடனம் ஆடலாம். உலகப் புகழ்பெற்ற மேல்நாட்டு நடனக்

கலைஞர் மார்த்தா கிரகாமுக்கு எழுபது வயசு இருக்கலாம். அப்பவும் நடனம் ஆடினாரே! அவரைப் பார்க்கவும் கூட்டம் வந்ததே."

டி.வி. காமிராவின் கோணம் மாற்றப்பட- நிருபர் அடுத்த கேள்வியைக் கேட்டார். "ஆறுகாலம் ஆடணும்; ஆறுகாலம் பாடணும்ங்கிறது பொதுவா நாட்டியத்திலேயும், இசையிலேயும் உள்ள ஒரு விஷயம். ஆனால், இது நடைமுறையில் யாரும் பண்ணுறதில்லையே?"

"இந்தச் சாஸ்திரத்தை இப்போ யாரும் பின்பற்றுவதே இல்லை. மூன்று காலம் பாடி, மூன்று காலம் ஆடினாப் போதும்னு நினைக்கிறாங்க. நானும் அப்படித்தான் ஆடுறேன்.

"கதக் பாணி சுழற்சிகள், ஒடிசி பாணி திரிபங்கிகள் இதெல்லாம் நல்லா ஆடுறீங்களே! இதுக்கெல்லாம் உங்க குரு யாரு?"

"குரு யாருமில்லை. நானா கத்துக்கிட்டேன்."

"நாட்டியப்பள்ளி ஏதாவது தொடங்குகிற எண்ணம் உண்டா, உங்களுக்கு?"

"இப்போதைக்கு இல்லை."

"இதுவரை எத்தனைத் தடவை மேடையேறி ஆடி இருப்பீங்க?"

"இன்னிக்கு சாயந்தரம் அகாடமி அரங்கத்துல நடக்கிப்போகிற என்னோட நிகழ்ச்சியையும் சேர்த்து அறுபத்தெட்டு தடவை."

"உங்களுக்கு சமீபத்துல நடந்த கல்யாணம் உங்க கலைப் பணிக்கு முட்டுக்கட்டையா இருக்கா?"

"அந்தக் கேள்விக்கு நான் ஒரு கசப்பான பதிலைக் கொடுத்துத்தான் ஆகணும். நான் பரதநாட்டியம் ஆடுறதுல என் கணவருக்கு உடன்பாடு இல்லைதான். எனனோட ஆர்வத்துக்கு மதிப்புக் கொடுத்து, சில நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் ஒத்துக்கச் சொல்றார். நான் காலில் சலங்கையைக் கட்டுறதும், கட்டாததும் அவரோட எண்ணத்தைப் பொறுத்துத்தான்."

"ஊரே பாராட்டிக் கொண்டாடுற உங்க பரதநாட்டியக் கலையில் அவருக்கு ஏன் நாட்டமில்லை?"

"அவருக்கு அவரோட தொழில்தான் பிரதானம்."

மேலும் சில கேள்விகளோடு பேட்டி முடிந்தபோது, மாடியில் புவனேஷ் கழுத்து 'டை' பறக்கக் கீழே இறங்கிக்கொண்டிருந்தான். கையில் 'பிரீப்கேஸ்.'

தொலைக்காட்சி நிலைய ஆட்களை அனுப்பிவிட்டு- புவனேஷை நெருங்கினாள் கார்த்திகா.

"என்ன... இந்த நேரத்துக்கு புறப்பட்டுட்டீங்க?"



"இன்னிக்கு டெல்லியிலிருந்து தொழில் மேம்பாட்டு தலைவர் அனுமந்தா வர்றார். ஆளை எப்படியாவது மடக்கி 'ஆர்டர்' வாங்கிடணும். லட்ச லட்சமா லாபம் பார்த்துடலாம். நான் மத்தியானம் சாப்பாட்டுக்குக்கூட வரமாட்டேன்."

"சாயந்தரம் என்னோட நடன நிகழ்ச்சி இருக்கு. மறந்துட்டு நீங்க பாட்டுக்கு எங்கேயாவது போயிடாதீங்க..."

"சேர்மன் டெல்லி கிளம்பிப் போயிட்டார்ன்னா நான் நிகழ்ச்சிக்கு வருவேன்... இல்லேன்னா வரமாட்டேன்."

"எப்படியாவது வரப் பாருங்க."

"ம்..."

'போர்டிகோ' வாசலில் நின்றிருந்த காரை நோக்கிப் போனான், புவனேஷ். காரை ஒரு சின்ன இரைச்சலோடு கிளப்பிக்கொண்டு போனான்.

மத்தியானம் ஒரு மணி.

சாப்பாட்டு மேசையை நோக்கிப்போன கார்த்திகா- தொலைபேசி சத்தம் கேட்டு- பக்கத்து அறைக்குள் நுழைந்து ரிசீவரை எடுத்தாள். மறுமுனையில் கணவனின் குரல். "அலோ... கார்த்தி... நான் புவனேஷ் பேசுறேன்."

மலர்ந்தாள். "என்னங்க... மதியம் சாப்பாட்டுக்கு வர்றீங்களா?"

"என்னோட சாப்பாடு முடிஞ்சாச்சு."

"இதைச் சொல்லத்தான் போன் பண்ணினீங்களா?"

"இல்லே... வேறொரு விஷயத்துக்காக..."

"என்னவாம்?"

அரை நிமிட நேரத்தில் விஷயத்தைச் சொன்னான், புவனேஷ்.

அவன் சொல்லச் சொல்ல- கார்த்திகா முகம் இருண்டாள். அதிகம் கோபப்பட்டு, உடம்பு பூராவும் ரத்தம் உஷ்ணமாய் ஓடியது.

## 2

கோபத்தில் பேச்சு வராமல், ரிசீவரைக் காதோடு உரசவிட்டபடி அப்படியே நின்றாள், கார்த்திகா. மார்புகள் விம்மி ஏறித் தாழ்ந்துகொண்டிருந்தன.

"கார்த்தி... என்ன பதிலையே காணோம்...?"

"......."

"கார்த்தி..."

"ம்..."

"என்னாச்சி உனக்கு?"

"நீங்க சொன்னது சரிதானான்னு நான் யோசிச்கிட்டிருக்கேன்... உங்க சேர்மனுக்கு என்னோட நடனத்தைப் பார்க்கணும்னு ஆசையிருந்தா... சாயந்தரம் ஏழு மணிக்கு அகாடமி அரங்குக்கு வரச் சொல்லுங்க... அதைவிட்டுட்டு, மத்தியானம் மூணு மணிக்கு அவரை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வரப்போவதாகவும், அந்த நேரத்துல நான் அவருக்கு ஒரு மணி நேரம் ஆடிக் காட்டணும்னு சொல்றீங்களே... இது உங்களுக்கே நியாயமா படுதா...?"

"கார்த்திகா... அவர் இன்னிக்கு சாயந்தரம் ஏழு மணி விமானத்திலே டெல்லி போகப் போறார். அவர் உன்னோட பேரைக் கேள்விப்பட்டு இருக்காராம். சொந்த மாநிலம் கர்நாடகமா இருந்தாலும், தமிழ் நல்லா பேசறார். நடனத்தில் ரொம்பவும் ஆர்வம் காட்டுறார். முக்கியமா, இந்த பரதநாட்டியத்துல...

நீ என்னோட மனைவின்னு தெரிஞ்சதும் அவர் பட்ட மகிழ்ச்சி இருக்கே... சொன்னா புரியாது. நீ நேர்ல பார்த்திருக்கணும்..."

"அவருக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தா... இன்னிக்குத் தங்கிட்டு, நாளைக்குப் போகட்டுமே..."

"அப்படியெல்லாம் அவரை நான் கட்டாயப்படுத்த முடியாது கார்த்தி. ஏற்றுமதிக்கான 'ஆர்டர்' வாங்குறதுக்காக அந்த மனுஷனை எதை வெச்சு மடக்கலாம்னு நான் திணறிட்டிருந்தப்போ... உன்னோட பரதநாட்டியத்து மேல அவர் காட்டுற ஆர்வம் எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு. சும்மா அவர் முன்னாடி கொஞ்சமா நடனம் ஆடு... போதும். அவர் மகிழ்ச்சி ஆயிடுவார். அப்புறம் விமான நிலையம் போறதுக்குள்ளே நான் தொழில் பற்றி பேசிக்கிறேன்..."

"இப்ப நீங்க எங்கிருந்து பேசுறீங்க...?"

"நம்ம ஆபீசில் இருந்துதான்..."

"நான் ஒரு கேள்வி கேட்டா நீங்க தப்பா நினைக்க மாட்டீங்களே?"

"என்ன கேக்கப்போறே?"

"அந்தச் சேர்மன்கிட்டே இருந்து ஏற்றமதி ஆர்டரை வாங்கறதுதானே உங்கக்குறி...?"

"ஆமா..."

"அதுக்காக நீங்க என்ன வேண்டுமானாலும் செய்வீங்க?



அப்படித்தானே...?" மறுமுனையில் புவனேஷ் மவுனம் சாதிக்க, தொடர்ந்தாள் கார்த்திகா:

"அந்த சேர்மன் என்னோட நடனத்தைப் பார்க்கிறதுக்காக நம்ம வீட்டுக்கு வர்றார். நானும் அவர் முன்னாடி நடனம் ஆடுறேன். என்னோட நடனத்தை ரசிச்சவர் என்னோட உடம்பையும் ரசிக்கிறதா வெச்சுக்குவோம்... அதையும் அவர் கேட்டா நீங்க தலையை ஆட்டிடுவீங்களா...?"

"கார்த்தி..." ரிசீவர் துள்ளிவிழக் கத்தினான், புவனேஷ். "வர்ற சேர்மன் அப்படிப்பட்டவர் இல்லை. உன் வயசுலே அவருக்கு ஒரு பொண்ணு இருக்கா தெரிஞ்சுக்கோ. நீ அநாவசியமா எதைஎதையோ கற்பனை பண்ணி மூளையைக் குழப்பிக்காதே... நானும், அவரும் சரியா மத்தியானம் மூணு மணிக்கு நம்ம வீட்டுக்கு வருவோம். நீ தயாரா இரு..."

"நான் சொல்றதைக் கொஞ்சம்..."

"நான் உன்னோடு விவாதம் பண்ண விரும்பல" ரிசீவரை மறுமுனையில் 'டொக்'கென்று வைத்தான், புவனேஷ். கையிலிருந்த ரிசீவரை சில விநாடிகள் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, மெதுவாய் அமர்த்திப் பெருமூச்சுவிட்டாள், கார்த்திகா.

நிமிடங்கள் அவதியாய் நகர்ந்து, மூன்று மணியைத் தொட்டபோது– போர்டிகோவில் கார் வந்து செருகிக்கொள்ளும் சத்தம் கேட்டது.

ஹாலின் உள்ளே சோபாவில் உட்கார்ந்திருந்த கார்த்திகா எழுந்துபோய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

புவனேசும், கண்ணாடி அணிந்த அந்த வழுக்கைத் தலைக்காரரும் காரைவிட்டு இறங்கி உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். கறுப்பாய், குள்ளமாய் இருந்த 'சேர்மன்' அனுமந்தா, தங்கப்பல் தெரிய சிரித்தார்.

வலுக்கட்டாயமாய்ப் புன்னகையை உதட்டில் ஒட்ட வைத்துக்கொண்டு வேக வேகமாய் வாசலை நோக்கிப் போனாள், கார்த்திகா.

"சார்... இவங்கதான் என் மனைவி, கார்த்திகா..." புவனேஷ் சொல்ல, கையைக் குவித்தாள், கார்த்திகா.

அனுமந்தா சிரித்தார். "ஒருதரம் உன்னோட நிகழ்ச்சியை 'டி.வி.'யில் பார்த்தேன்மா... அற்புதம்... மிஸ்டர் புவனேசுக்கு மனைவியா நீ இருப்பேன்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை...

உன்னைச் சந்திச்சதுல எனக்கு ரொம்ப சந்தோஷம்..."

அனுமந்தாவின் உதடுகள் சம்பிரதாயமாய் வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டிருந்தாலும், அவருடைய பார்வை தன் உடம்பின் மேல் தப்பான இடங்களில் படுவதை உணர்ந்தாள், கார்த்திகா. அந்த வயோதிகத்திலும் அனுமந்தாவின் கண்களில் வண்டி வண்டியாய் காமம் வழிந்தது.

"உள்ளே வாங்க சார்..." வெகு பவ்வியமாய் அவரை நடத்திக்கொண்டு போய்சோபாவில் உட்கார வைத்தான், புவனேஷ். அதே வேகத்தில் உள் அறைக்குள் போய்ப் புகுந்துகொண்ட கார்த்திகாவிடம் வந்தான்.

"என்ன கார்த்தி, தயாரா...?"

"எதுக்கு...?"

"விளையாடுறியா...? நடனம் ஆட வேண்டாமா...?"

"இதோ பாருங்க... பரத நாட்டியம்ங்கிறது வித்தை காட்டுற மாதிரி இல்லீங்க... அது ஒரு தெய்வீகக் கலை. நினைச்ச நேரத்துல ஆடிட முடியாது. அதுவுமில்லாம இவரைப் பார்த்தா நாட்டியத்தை ரசிக்க வந்தவர் மாதிரித் தெரியலை. பார்க்கிற பார்வையிலேயே நிறையத் தப்பு பண்ணுறார்."

"சரி... சரி... அவரை எப்படியோ கூட்டிட்டு வந்துட்டேன். பேருக்கு ஏதாவது ஒரு நடனம் ஆடிக் காட்டிடு. ரொம்பக் கஷ்டப்பட்டு மனுஷனை என்னோட வழிக்குக் கொண்டாந்திருக்கேன். வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்துல தாழியை உடைச்சுடாதே."

"எனக்கு என்னமோ மாதிரி இருக்குங்க. உங்க முன்னாடி நான் நடனம் ஆடலாம். ஒரு அந்நிய ஆம்பிள்ளை முன்னாடி ஆட எப்படியோ இருக்கு."

"ஆயிரம் பேருக்கு முன்னாடி ஆடுறியே, அது?"

"அது சபைங்க..."

"முடிவா நீ என்னதான் சொல்றே?"

"என்னை மன்னிச்சுடுங்க... நான் ஆடமாட்டேன்."

"நீ இங்கே ஆடலைன்னா... இன்னிக்கு சாயந்திரம் ஏழு மணிக்கு நீ அகாடமி அரங்கத்துல போய் நிகழ்ச்சியை நடத்த முடியாது."

'திக்'கென்று கண்களில் ஏராளமாய் அதிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"அப்படிச் சொல்றது உங்களுக்கே நல்லா இருக்கா?"

"அவர் எவ்வளவு பெரிய மனுஷன். உன்னோட நடனத்தைப் பார்க்கிறதுக்காகவே நம்ம வீட்டுக்கு வந்திருக்கார். அவரை மகிழ்ச்சிபடுத்தினாத்தான் எனக்கும் தொழில் கிடைக்கும். நான்



இப்போ அவர்கிட்டே போறேன்... இன்னும் பத்தே நிமிடத்துல ஆடுறதுக்கு தயாரா ஹாலுக்கு நீ வரணும்."

ஆட்காட்டி விரலைக் காட்டி எச்சரித்துச் சொல்லிவிட்டு, 'விடுவிடு' என்று ஹாலுக்குப் போனான், புவனேஷ்.

அவன் போவதையே வெறித்த விழிகளோடு பார்த்துக்கொண்டிருந்த கார்த்திகாவை... அருகிலிருந்த 'டெலிபோன்' கூப்பிட்டது.

ரிசிவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள். நைந்துபோன குரலில், "அலோ" என்றாள்.

"அம்மா, நமஸ்காரம். நான் அகாடமி செயலாளர் பேசுறேன்."

"சொல்லுங்க..."

"அகாடமி நிறுவனங்களில் ஒருத்தர் ஈஸ்வரமூர்த்தின்னு பேரு. அவர் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மாரடைப்பில் காலமாயிட்டார். உங்க நடன நிகழ்ச்சியை பத்து நாள் தள்ளிவச்சிருக்கு."

"ஈஸ்வரமூர்த்தி யாரு...? செவப்பா... ஒடிசலா... உயரமா இருப்பாரே... அவர்தானே?"

"அவரேதான்."

"அவர் வீடு எங்கே?"

"தியாகராயநகர்ல தீனதயாளு வீதியில்..."

"நான் இப்போ புறப்பட்டு வர்றேன்."

ரிசிவரை வைத்துவிட்டு வெளியே வந்த கார்த்திகா, சோபாவில் உட்கார்ந்து எதையோ சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அவர்களை நோக்கிப் போனாள்.

புவனேஷ் பேச்சை நிறுத்திவிட்டு அவளைப் பார்க்க, அவள் அனுமந்தாவை ஒரு பவ்வியப் புன்னகையுடன் பார்த்து சொன்னாள்:

"உங்க முன்னாடி நடனம் ஆடணும்ன்னு ரொம்பவும் ஆர்வமா இருந்தேன் சார்... எதிர்பாராதவிதமா ஒரு மரணச் செய்தி..."

"மரணச் செய்தியா?"

"ஆமா சார். அகாடமி நிறுவனர்களில் ஒருத்தர் காலமாயிட்டதா ஒரு நிமிஷத்துக்கு முன்னாடி தகவல் வந்தது. நான் உடனடியாகப் போயாகணும்..."

"இப்பவேவா போறே?" கோபமாய் எழுந்தபடி கேட்டான், புவனேஷ்.

"ஆமா. அவங்க வழக்கப்படி பிரேதத்தை சீக்கிரமா அடக்கத்துக்கு கொண்டுபோயிடுவாங்க."

"நீ அவசியம் போயாகணுமா?"

"போகாமலும் இருக்கலாம். அது மரியாதை இல்லை."

அனுமந்தா எழுந்தார்.

"நீ போயிட்டு வாம்மா.. புவனேஷ்! என்னைக் கொண்டுபோய் ஓட்டல்ல இறக்கிவிட்டுடுங்க."

"சரிங்க சார்."

கார்த்திகாவை முறைத்துக்கொண்டே அவரைக் கூட்டிக்கொண்டு காருக்குப் போனான், புவனேஷ். 'ராத்திரிக்கு வந்து உன்னைக் கவனித்துக்கொள்கிறேன்' என்கிற வன்மம் உறைந்துபோயிருந்தது. கார்த்திகாவின் இதயம் ஒருமுறை உதறிக்கொண்டது.

சண்முகா மருத்துவமனை.

வெயிலின் உக்கிரம் தணிந்துகொண்டிருந்த சாயந்திரம் நான்கு மணி. டாக்டர் நடரர்ஜனின் அறை தள்ளு கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான், அந்த இளைஞன். கூடவே அந்த ஏழு வயதுச் சிறுமி.

சக டாக்டர் கிருஷ்ணாவோடு பேசியபடி மருத்துவ பத்திரிகை ஒன்றை புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் நடராஜன், அந்த இளைஞனைப் பார்த்ததும் புன்னகைத்தார். பத்திரிகையை 'டப்'பென்று மூடினார்.

"வாங்க அரவிந்தன். ராணிக்கு இப்போ எப்படி இருக்கு? நல்லா சாப்பிட்டுத் தூங்கறாளா?"

"சாப்பிடுறதேயில்லை டாக்டர்."

"இப்படி வாம்மா ராணி" நடராஜன் கூப்பிட்டார்.

குச்சி மாதிரி கையும் காலுமாய் உலர்ந்துபோயிருந்த அந்தச் சிறுமி, பலவீனமான பார்வை பார்த்துக்கொண்டே டாக்டரை நெருங்கினாள்.

"ஏம்மா ராணி சாப்பிடறதில்லை?"

"சா..சாப்பிட முடியலை டாக்டர். நெஞ்செல்லாம் வலிக்கிற மாதிரி இருக்கு. உள்ளுக்குள் படபடன்னு ஏதோ அடிச்சிக்குது."

"மாத்திரையெல்லாம் ஒழுங்காச் சாப்பிடுறியா?"

"ம்.. அப்பா வேளை வேளைக்குத் தர்றாரே."

"அரவிந்தன்..."

"டாக்டர்?"

"நீங்க 'லேப்'புக்கு போய் 'ஈ.சி.ஜி.' ரிப்போர்ட் வாங்கிட்டு



வந்திடுங்க. பார்த்துடலாம்."

"சரி டாக்டர்."

கலைந்துபோன தலையோடும், சிவப்பேறிய விழிகளோடும் தலையாட்டிய அரவிந்தன் ராணியை மெல்ல நடத்தி வெளியே கூட்டிக்கொண்டு போனான்.

அவன் போனதும் டாக்டர் கிருஷ்ணா தன் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டே மெல்லிய குரலில் கேட்டார்: "அந்தக் குழந்தைக்கு என்ன பிரச்சினை நடராஜன்?"

"சொன்னா உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும் கிருஷ்ணா. அந்தக் குழந்தைக்கு இதயக் கோளாறு."

டாக்டர் கிருஷ்ணா அதிர்ந்தார்.

"அந்தச் சிறுமிக்கா?"

"ம்... கொஞ்ச நேரம் ஓடியாடினால் போதும், அந்தக் குழந்தையோட உடம்பு நீலநிறத்திற்கு மாறிடும்."

"அப்போ குழந்தை முடிஞ்ச மாதிரிதான். இதய மாற்று அறுவை சிகிச்சை பண்ணணும். அது இங்கே முடியாதே!"

"அந்த சிகிச்சைக்காகத்தான் ராணியும், அரவிந்தனும் அடுத்த வாரம் அமெரிக்கா போகப் போறாங்க."

"எப்படி... ஏகப்பட்ட செலவாகுமே?"

"வேண்டிய பணம் சேர்ந்துடுச்சு டாக்டர். ஆனா, எம்மனசுக்குள்ளே ஒரு உதறல்."

"எதைப்பற்றி?"

"அமெரிக்கா புறப்பட்டுப் போகிறவரைக்கும் அந்தக் குழந்தை ராணி தாங்குவாளான்னு எம்மனசுக்குள்ளே ஒரு நெருடல்."

## 3

டாக்டர் நடராஜன் தன் சுழல்நாற்காலியில் சுழன்று பின்பக்கம் தெரிந்த கண்ணாடி அலமாரியிலிருந்த அந்த ஆவணத்தை எடுத்து டாக்டர் கிருஷ்ணாவிடம் கொடுத்தார்.

"அந்தக் குழந்தை ராணியைப் பத்தின ஆவணம் இது, கிருஷ்ணா. போன மாசம்தான் முதல் தடவையா என்கிட்ட வந்தாங்க. அந்தக் குழந்தையோட அப்பா அரவிந்தன் ஏதோ ஒரு தனியார் கம்பெனியில

வேலை பார்த்தார். சொற்ப சம்பளம். குழந்தை ராணிக்கு ரெண்டு வயசா இருக்கும்போதே அவ அம்மா இறந்துட்டா. இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கிட்டால், தனக்கு மனைவியா வரப்போறவள் குழந்தைகிட்டே எப்படி நடந்துக்குவாளோங்கிற பயத்துல அரவிந்தன் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கவேயில்லை. குழந்தை ராணி மேலே மனுஷனுக்கு அப்படியொரு பாசப்பிடிப்பு. குழந்தைக்கும் அதேமாதிரிதான்... அரவிந்தன்கிட்டே அபாரமான ஒட்டுதல். ஒரு நிமிடம்கூடப் பிரிஞ்சிருக்கமாட்டா.

போன மாசத்துல ஒருநாள் அரவிந்தன் அந்தக் குழந்தையை என்கிட்ட கூட்டிட்டு வந்தார். 'ஈ.ஸி.ஜி.' எடுத்துப் பார்த்ததுல ஒரு மணி நேரத்துல எல்லாமே துல்லியமாத் தெரிஞ்சிடுச்சு. அமெரிக்கா போனால்தான் ராணி பிழைக்க முடியும்னு சொல்லிட்டேன். அரவிந்தன் ஆடிப்போயிட்டார். சட்டைப் பையில இருந்து அம்பது ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டி இதுதான் தன்னோட தற்போதைய ஆஸ்தின்னு சொல்லி அழுதார்."

டாக்டர் கிருஷ்ணா ஆச்சரியமாய் கேட்டுக்கொண்டிருக்க, நடராஜன் தொடர்ந்தார். "அழுதுகிட்டே போன அரவிந்தன் ஒரு வாரம் கழிச்சு என்கிட்டே வந்தார். சில சமூக அமைப்புகளும், பிரபல நடனக் கலைஞர் கார்த்திகாவோட கலைநிகழ்ச்சி முயற்சிகளும் குழந்தை ராணியோட மாற்று இருதய ஆபரேஷன் செலவை ஏத்துக்க முன்வந்திருப்பதாகவும், அமெரிக்கா புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியாகவும் அரவிந்தன் என்கிட்ட சொன்னார். நானும் ராணியோட தகவல்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைச்சேன். ஆபரேஷன் தேதியை டாக்டர் பெஞ்சமின் உறுதிபண்ணி எனக்குக் கடிதம் எழுதியிருக்கார்."

"ஆபரேஷன் என்னிக்கு?"

"அடுத்த வாரம் புதன்கிழமை."

டாக்டர் கிருஷ்ணா ஆவணத்தை மேலோட்டமாய்ப் புரட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னார்: "பாதிப்பு நிறையத் தரம் வந்திருக்கும் போலிருக்கே?"

"அதுமட்டுமில்லை. அந்தக் குழந்தை மாடிப்படி ஏறினாலோ, வேகமா ஓடிவந்தாலோ மூக்கு நுனியும், காதுகளும் நீலநிறமாயிடுது. குழந்தை படுற சித்திரவதையைக் கண்கொண்டு பார்க்க முடியாது."

"பாவம்."

டாக்டர் நடராஜன் ஏதோ சொல்ல வாயைத் திறந்த நேரம்– அரவிந்தன், ராணியைத் தூக்கிக்கொண்டு கையில் 'ஈ.ஸி.ஜி.'



அறிக்கையோடு உள்ளே வந்தான். டாக்டர் அதை வாங்கி ஒரு நிமிட நேரம் அதில் பார்வையைப் போட்டுவிட்டு சொன்னார்:

"லேசா முன்னேற்றம் தெரியுது."

"டாக்டர்" –குரல் உடைய சொன்னான், அரவிந்தன்.

"ஆமா" டாக்டர் அவனைப் பார்த்தார்.

அவன் சொன்னான்: "டாக்டர்! ராத்திரி நேரங்களில் ராணி மூச்சுவிடுறதுக்கு ரொம்பவும் சிரமப்படுறா. அமெரிக்கா புறப்பட்டுப் போறதுக்குள் அவளுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு எனக்குப் பயமாயிருக்கு."

டாக்டர் நடராஜன் புன்னகைத்தார். "பயப்படாதீங்க அரவிந்தன். ராணியோட உயிருக்கு எந்த ஆபத்தும் வந்துடாது. மருந்தை மட்டும் வேளை தவறாமே கொடுத்துட்டு வாங்க. வேகமா ஓடி வரவோ, விளையாடவோ விடாதீங்க. குழந்தையோட மனசைப் பாதிக்கும்படியான விஷயங்களைச் சொல்லாதீங்க. டி.வி.யையோ, சினிமாவையோ பார்க்க அனுமதிக்காதீங்க. அதுல வர்ற திடுக்கிடும் சம்பவங்கள் குழந்தையோட இருதயத்தை இன்னமும் பலவீனப்படுத்தும். எண்ணெய் கொட்டின மொசைக் தரையில கண்ணாடி தம்ளரை எடுத்திட்டு போகும்போது எவ்வளவு ஜாக்கிரதையா நடந்து போவீங்களோ, அந்த அளவுக்குக் குழந்தை விஷயத்துல ஜாக்கிரதை வேணும்."

தன் தோளின் மேல் சோர்வாய்ப் படுத்துக்கிடந்த ராணியைக் கண்களில் நீர் மின்ன– வலக்கையில் இறுக அணைத்தபடி தலையாட்டினான், அரவிந்தன்.

"பாஸ்போர்ட், விசா எடுக்கிறதுல எந்தப் பிரச்சினையும் இல்லையே?"

"இல்ல டாக்டர்."

"ரெண்டு நாள் கழிச்சு குழந்தையை ஆஸ்பத்திரியில் சேர்த்திடுங்க அரவிந்தன். குழந்தைக்குச் சில முதல்கட்ட பரிசோதனைகள் செய்யவேண்டியிருக்கும்."

"சரி டாக்டர்."

கைகளைக் குவித்துவிட்டு ராணியோடு வெளியே வந்தான். அந்தக் காலை நேரத்தில் ஆஸ்பத்திரியின் வராந்தாக்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

அரவிந்தன் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே வந்து, ஏதாவது ஆட்டோ கிடைக்குமா என்று சாலையின் இரண்டு பக்கத்தையும் பார்த்தான்.

எதுவும் தட்டுப்படவில்லை.

தட்டுப்பட்ட இரண்டொரு ஆட்டோக்களிலும் ஆட்கள் நிரம்பி இருந்தார்கள். அந்தத் தெருமுனைக்குப் போனால் ஏதாவது ஆட்டோ கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் மெதுவாய் நடைபோட்டவனின் அருகே அந்த கார் லேசாய் உரசியபடி வந்து நின்றது.

ஒரு சின்ன திடுக்கிடலோடு திரும்பிப் பார்த்தான், அரவிந்தன். ஓட்டுநர் இருக்கையில் உட்கார்ந்திருந்த கார்த்திகா புன்னகை நிலவின் முகத்தோடு, காரில் இருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தாள்.

அரவிந்தனின் முகம் ஒரு குட்டி சூரியனாய் மாறியது. தோளின் மேலிருந்த ராணியைத் தட்டிக் கீழே இறக்கிவிட்டுக் கைகளைக் குவித்தான். "நமஸ்காரம்மா."

"என்ன அரவிந்தன்- இந்த வெயிலில் குழந்தையை எடுத்துக்கிட்டு எங்கே போயிட்டு வர்றீங்க?"

"டாக்டர்கிட்டே போயிட்டு வர்றேம்மா."

"அமெரிக்காவுக்கு எப்போ பயணம்? வர்ற புதன்கிழமையா?"

"இல்லேம்மா. திங்கட்கிழமை காலையில சென்னையில் இருந்து புறப்படுறோம். புதன்கிழமை ஆபரேஷன். நீங்களெல்லாம் பெரிய மனசு பண்ணி உதவி செஞ்சிருக்காட்டி நான் எங்கேம்மா அமெரிக்காவுக்குப் போகப்போறேன்? என் குழந்தை கொஞ்ச கொஞ்சமா என் கண் முன்னாடி சாகிறதைப் பார்த்துட்டே இருந்துட வேண்டியதுதான்."

கார்த்திகா மெல்லச் சிரித்து, குழந்தை ராணியின் சதைப் பிடிப்பில்லாத கன்னத்தைத் தட்டினாள். "அப்படியெல்லாம் ராணியை விட்டுடுவோமா? நீங்க இப்போ எங்கே போகணும் அரவிந்தன்?"

"வீட்டுக்குத்தாம்மா."

"காரில் ஏறுங்க. வீட்டுல இறக்கிவிட்டுட்டு போறேன்."

"வேண்டாம்மா... நீங்க எங்கேயோ அவசரமாப் புறப்பட்டுப் போறீங்க போலிருக்கு. நானும், ராணியும் ஆட்டோவில் போயிடுறோம்."

"இல்ல. கார்ல ஏறுங்க. தலையில 'ஆசிட்' பட்ட மாதிரி வெயில் பொசுக்குது. இந்த வெயில்ல ராணியை வைச்சுக்கிட்டு ஆட்டோவைத் தேடிக்கிட்டு இருக்கப்போறீங்களா? எனக்குத் தலைப்போற காரியம் எதுவுமில்ல. கன்னிமாரா போய் புத்தகத்தை மாத்திட்டு வரப்போறேன். அவ்வளவுதான். ஏறுங்க."

காரின் பின் இருக்கைக் கதவைத் திறந்துவிட்டாள், கார்த்திகா.



குழந்தை ராணியோடு அரவிந்தன் உள்ளே ஏறிக்கொண்டதும் கதவைச் சாத்திவிட்டு, ஓட்டுநர் இருக்கைக்கு வந்து காரைக் கிளப்பினாள். கண்ணாடியில் பார்த்து ராணியைக் கூப்பிட்டாள்.

"ராணி!"

அரவிந்தனின் மடியில் உட்கார்ந்திருந்த குழந்தை ராணி, 'உம்' கொட்டினாள்.

"எம்பக்கத்துல முன் இருக்கைக்கு வர்றியாம்மா?"

"ஊகூம்..."

"ஏம்மா?"

"அப்பாவ விட்டுட்டு வரமாட்டேன்."

"அப்பான்னா உனக்கு ரொம்பப் பிடிக்குமா?"

"ம்..."

"எவ்வளவு பிடிக்கும்?"

"நெறய்யா" கைகளை முடிந்தவரைக்கும் விரித்துக் காட்டினாள், ராணி.

கார்த்திகா சிரித்துக் காரை மார்ஷல் சாலையில் நுழைத்தாள்.

"அரவிந்தன்."

"என்னம்மா?"

"ஆபரேஷன் முடிஞ்சு அமெரிக்காவிலிருந்து திரும்ப எத்தனை நாளாகும்?"

"ரெண்டு மாசமாயிடும்."

"சொன்னபடி எல்லா அறக்கட்டளையும் பணம் கொடுத்துடுவாங்களா?"

"கொடுத்துடுவாங்கம்மா."

"பணம் போதலையானா, நான் இன்னொரு நடன நிகழ்ச்சி பண்ணித் தர்றேன். அம்பதாயிரம் வசூலாகும்."

"வேண்டாம்மா. ஆபரேஷன் செலவுக்குத் தேவையான பணம் சேர்ந்திருக்கு. நீங்க ஒரு தடவை எனக்காகச் சிரமம் எடுத்துக்கிட்டதே போதும்."

"அன்னிக்கு மழை நாள். வசூல் கொஞ்சம் குறைஞ்சிடுச்சு. இல்லேன்னா இன்னும் ஒரு அஞ்சாயிரம், பத்தாயிரம் கூடுதலா வசூலாகி இருக்கும்."

"அன்னிக்கு நீங்க வசூல் பண்ணிக் கொடுத்த பணம் குறைச்சலா இருந்தாலும் அந்த நிகழ்ச்சிதாம்மா என்னையும், ராணியையும் மத்த அறக்கட்டளைகளுக்கு அடையாளம் காட்டிச்சு. அதுக்குப் பின்னாடிதானே அவங்க உதவ முன்வந்தாங்க!"

கார்த்திகா பெருமூச்சுவிட்டபடி ராணியைத் திரும்பிப் பார்த்தாள். "எவ்வளவோ சிரமப்பட்டுப் பணம் சேர்த்திருக்கீங்க. ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சு, ராணியும் மத்தக் குழந்தைங்க மாதிரி விளையாடணும்.பள்ளிக்கூடத்துக்குப்போகணும். அதான் என்னோட ஆசை" அவள் தழுதழுப்போடு சொல்லிக்கொண்டிருக்கும்போதே பின் இருக்கையில் இருந்து ராணியின் குரல் கேட்டது.

"ஆன்ட்டி..."

"என்னம்மா?"

"எனக்கு உடம்பு நல்லானதும் நான் உங்ககிட்டே நடனம் கத்துக்கப்போறேன். எனக்குக் கத்துத்தருவீங்களா ஆன்ட்டி?"

"கண்டிப்பா."

"அப்படி நீங்க கத்துத்தந்தா உங்க மாதிரியே நான் நடனம் ஆட முடியுமா ஆன்ட்டி?"

"கண்டிப்பா ஆடலாம்மா."

கார், ராஜரத்தினம் ஸ்டேடியத்துக்குக் கொஞ்சம் தள்ளி- வெண்ணிறத்தில் குளித்திருந்த அடுக்குமாடி குடியிருப்பு முன்னால் போய் நின்றது.

அரவிந்தனும், ராணியும் இறங்கிக்கொண்டார்கள். அரவிந்தன், காரின் கதவருகே குனிந்து சொன்னான்:

"வீட்டு வாசல்வரைக்கும் வந்துட்டீங்க. உள்ளே வந்துட்டுப் போகலாமேம்மா?"

கார்த்திகா புன்னகைத்தாள். "ராணி குணமாகி வீட்டுக்கு வரட்டும். வந்து உங்க வீட்டுல விருந்து சாப்பிடுறேன். ராணி! ஆன்ட்டிக்கு 'டாட்டா' சொல்லும்மா."

ராணி கையை அசைக்க, கார்த்திகாவும் கையை அசைத்துவிட்டுக் காரைக் கிளப்பினாள். வயிற்றுக்குள் ராணியைப் பற்றிய கவலை ஒரு கனமான பொருள் மாதிரி உருண்டது.

**நா**ன்கைந்து கார்கள் மத்தியில் வாகான ஓர் இடம் பார்த்து தன் காரைச் செருகி நிறுத்தினாள், கார்த்திகா.

உச்சந்தலையில் ஏராளமாய் சிவப்பாய்ப் பூத்திருந்த மரம், ஒரு கல்யாணப் பெண்ணை ஞாபகப்படுத்த- மரத்தடியில் அந்த நான்கு பேர் நின்றிருந்தார்கள்.

"மச்சி.. ஆளைக் கவனிச்சியா?"

"யாரு? எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு?"

"சொல்லு பார்க்கலாம்."

"பரதநாட்டிய கலைஞர் கார்த்திகா மாதிரித் தெரியுது."



"அவளேதான்."

"கண்ணைச் சுண்டுறா."

"அவ நடக்கிறதே நடனம் மாதிரித்தான் இருக்கு."

"இடுப்பைப் பாருடா மச்சி. உனக்குக் கிள்ளணும் மாதிரித் தோணலை?"

"தோணுது. கிள்ள முடியுமா என்ன? கழுத்துல பார்த்தியா? எவனோ 'லைசென்ஸ்' வாங்கி இருக்கான்."

நூலக கட்டிடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த கார்த்திகா, சட்டென்று நின்று திரும்பினாள்.

"நீங்க மாணவர்களா?"

"ஆமா."

"இதுக்கு முன்னாடி உங்கள்ல யாராவது எந்தப் பொண்ணு கிட்டயாவது செருப்பால் அடி வாங்கி இருக்கீங்களா?"

## 4

"**டே**ய்... செருப்பைக் கழட்டுறாடா..."

ஒருவன் பயத்தோடு குரல் கொடுக்க, இரண்டு பேர் நிறம் தப்பிப்போன முகங்களோடு பின்னுக்கு நகர- நான்காவது பேர்வழி மட்டும் கார்த்திகாவையே பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றான். உதட்டுக்கு ஒரு புன்னகையைக் கொடுத்தபடி கேட்டான்.

"அடிப்பியோ?"

கோபமான கார்த்திகா- கையிலிருந்த செருப்பை உயர்த்தினாள். "உயர்த்தின கை கீழே தாழ்வதற்குள், அவளுடைய மணிக்கட்டைச் 'கப்'பென்று பற்றினான், அவன். "செருப்பு கால்லதான் இருக்கணும். கைக்கு வரக்கூடாது."

"ராஸ்கல்... கையை விடுடா."

"நீ மொதல்ல உன்னோட கையில இருக்கிற செருப்பை கீழே போடு."

கார்த்திகா கையை அவனுடைய பிடியில் இருந்து உருவ முயன்று தோற்றுப்போக, முகம் ஏராளமாய்ச் சிவந்தாள். "நீ படிக்கிற மாணவன்தானா?"

"பாராட்டுக்கு வந்தனம் தாயே. செருப்பைக் கீழே போடு"

சொல்லிக்கொண்டே மணிக்கட்டை முறுக்கினான், அவன்.

கார்த்திகாவின் கண்களில் நீர் திரண்ட அதே விநாடி–

"மிஸ்டர்..."

ஆண் குரல் கேட்டுத் திரும்பினான், அவன்.

அந்த இளைஞன் நின்றிருந்தான். அமிதாப்பின் காதைத் தொடக்கூடிய சாத்தியத்தில் உயரம். தோல் சீவிய பப்பாளிப்பழ நிறம். மெலிதான மீசை வைத்த பிரகாசமான முகத்திற்கு அந்த வெளிர் நீல நிறக் குளிர்க் கண்ணாடி கூடுதல் அழகைக் கொடுத்திருந்தது. கழுத்து 'டை' காற்றில் வலப்புஜம் பக்கமாய் பறந்தது.

சொன்னான்: "நான் முன் பின் பார்த்திருக்காத என் நண்பனே! தயவுசெய்து அந்தப் பொண்ணோட கையை விடு."

கார்த்திகாவின் பிடித்த கையை விடாமல் புன்னகைத்த அந்த மாணவ இளைஞன், "மொதல்ல அவ தன்னோட கையில் இருக்கிற செருப்பைக் கீழே போடட்டும்" என்றான்.

"அப்போ... நீ கையை விடமாட்டே?"

"உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ."

"என்னோட வேலையே இதுதான்டா ராஜா..." –ஒரு விநாடி சிரித்து, மறுவிநாடியே முகம் மாறின அந்த இளைஞன் தன் முஷ்டியை மடக்கினான்.

மாணவ இளைஞன் சுதாரிப்பதற்குள்–

அந்த வேகமான குத்து– அவன் முகத்தின் மையப் பிரதேசத்தில் விழுந்தது. மூக்கில் ரத்தம் வழிந்தது.

கார்த்திகாவின் கையை விட்டுவிட்டு அந்த இளைஞனின் மேல் பாய்ந்தான், கல்லூரி மாணவன்.

விலகிய இளைஞன் சிரித்தான். "வீர இளைஞனே! வருங்கால நவ இந்தியாவைச் செதுக்கப்போகும் சிற்பியே! உன் மூக்கில் ரத்தம்."

"டேய்..."

"பார்த்தியா, நான் உனக்கு எவ்வளவு மரியாதை தர்றேன். ஆனா, நீ என்னை 'டேய்'ன்னு கூப்பிடுறே. எம்பேர் கோபிநாத். முழுப் பேரையும் உன்னால் கூப்பிட முடியலைன்னாலும், கோபின்னே கூப்பிடு."

மாணவ இளைஞனின் கண்களில் சின்னத் சின்னத் தீப்பொறிகள்.

ஆவேசமாக பாய்ந்தான்.



தன் மேல் வந்து விழுந்த அந்த இளைஞனைக் கோபிநாத் அலட்டிக்கொள்ளாமல் கையாண்டான். வலது முழங்கையை உயர்த்தி அவனுடைய அடிவயிற்றின் முக்கியப் பிரதேசத்தில் இடித்து– இடக்கையின் முஷ்டியால் அவன் தாடைப் பிராந்தியத்தில் அடித்தான். வெள்ளை விழி தெரியக் கண் சோர்ந்தவனை, அப்படியே மெதுவாக மரத்தில் சாய்ந்து உட்கார வைத்துவிட்டுத் திரும்பினான்.

தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அந்த மூன்று மாணவர்களையும் கூப்பிட்டான்.

"சகோதரர்களே..."

அவர்கள் கண்களில் ஏராளமான பயத்தை நிரப்பிக்கொண்டே வந்தார்கள். கோபிநாத் புன்னகையோடு பார்த்தான். "உங்க நண்பனுக்கு லேசா ஒரு தற்காலிக மயக்கம். முடிஞ்சா சோடா, இல்லேன்னா தண்ணியை மூஞ்சியில அடியுங்க" சொல்லிவிட்டு– தன் கார் அருகே பிரமித்துப்போய் நின்றிருந்த கார்த்திகாவிடம் வந்தான், கோபிநாத்.

"நன்றி."

"பரதநாட்டியம் ஆடுறவங்க எப்பவுமே ரொம்ப மென்மையா இருப்பாங்கன்னு சொல்லுவாங்க. உங்களுக்கு இவ்வளவு கோபம் வருதே, மிஸஸ் கார்த்திகா?"

ஆச்சரியமாய் அவள் பார்க்க– கோபிநாத் தொடர்ந்தான்.

"என்னதான் கோபம் வந்தாலும் செருப்பைக் கழற்றலாமா?"

"அவங்க என்ன பேசினாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"அவங்க பேசறதைப் பொருட்படுத்தாமல் போயிட்டே இருக்கலாம். எப்படியோ நான் வந்தேன். பிரச்சினை தீர்ந்தது."

"நீங்க?"

"என் பேர் கோபிநாத். என்னைப் பத்தி உங்களுக்குத் தெரிய நியாயமில்லை கார்த்திகா. ஆனா, உங்க கணவருக்கு என்னைப் பத்தித் தெரியும்."

வியப்பானாள், கார்த்திகா.

"அவருக்கு உங்களைத் தெரியுமா?"

"கண்டிப்பா. உங்க கணவர் புவனேசுக்கு என்னைத் தெரியும். அவர் தன்னோட தொழிலில் என்ன பொருள் தயார் பண்ணுறாரோ அதே பொருளைத்தான் நானும் தயார்பண்ணுறேன். சொல்லப்போனா அவரோட தொழில் போட்டியாளரே நான்தான். மிஸ்டர் புவனேசுக்கும், எனக்கும் எத்தனையோ தடவை தொழில்ரீதியா மோதல் ஏற்பட்டிருக்கு."

“அப்படியா?” நெற்றியில் ஆச்சரியம் காட்டிய கார்த்திகா, “அவர் இந்த ஆறு மாசத்துல ஒருநாள்கூட உங்களைப் பத்திச் சொன்னதில்லையே?” என்றாள்.

தோள்களைக் குலுக்கிக்கொண்டு சிரித்தான், கோபிநாத்.

“புவனேஷ் சொல்லமாட்டார். ஆறு மாசத்துக்கு முன்னாடி வரை நானும்கூட அவரை என்னோட போட்டியாகவே நினைச்சிட்டிருந்தேன். நீங்க அவரைக் கல்யாணம் பண்ணின நாளிலேருந்து எனக்குள்ளே அந்த எண்ணம் அடிபட்டுப்போச்சு.”

“காரணம்?”

“நீங்கதான்.”

“நானா?”

“ஆமா. நான் உங்க விசிறி. உங்க நடன நிகழ்ச்சி சென்னையில் எங்கே நடந்தாலும் சரி, முதல் வரிசையில் வந்து உட்கார்ந்திட்டிருப்பேன்.”

“நான் எப்படி உங்களைக் கவனிக்காமல் விட்டேன்?”

“சரி! நூலகத்துக்குத்தானே வந்தீங்க?”

“ஆமா, நீங்க?”

“நானும் நூலகத்துக்குத்தான் ஆடைகள் சம்பந்தப்பட்ட புதிய புத்தகம் ஏதாவது இருக்குமான்னு பார்க்க வந்தேன்.”

“வாங்க, போகலாம்.”

போகும்போது திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தக் கல்லூரி மாணவன் மயக்கம் தெளிந்து உட்கார்ந்து, சோடா குடித்துக்கொண்டிருந்தான். பார்வையில் பயமும், நாசியோரம் உறைந்துபோன ரத்தமும் தெரிந்தன.

“பாவம், ரொம்பவும் பலமா அடிச்சுட்டீங்க போலிருக்கு.”

“அப்படித் தட்டலையின்னா அவன் ரொம்பவும் துள்ளி இருப்பான்.”

நூலகத்தை நோக்கி நடந்தார்கள். படிகளில் ஏறும்போதே கேட்டான். “சென்னையில் நீங்க எங்கே இருக்கீங்க மிஸ்டர் கோபிநாத்?”

“எழும்பூர்.”

“எங்கே?”

“மார்ஷல்ஸ் ரோடு.”

“மார்ஷல்ஸ் ரோடா?”

“மார்ஷல்ஸ் ரோடான்னு ஏன் ஆச்சரியமாக் கேட்கிறீங்க?”

“இல்லே... அங்கே எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் இருக்கார்.”

“அவர் யாருன்னு எனக்குத் தெரியும். நீங்க அரவிந்தனைச் சொல்றீங்க.”

“அட... உங்களுக்கும் அவ்ரைத் தெரியுமா?”

“உங்க மூலமாகத்தான் எனக்குத் தெரியும்.”

“என் மூலமாவா?”

“ஆமா, அவரோட குழந்தை ராணிக்கு அமெரிக்காவில் நடக்கப்போற ‘ஆபரேஷன்’ செலவு நிதிக்காக நீங்க ஒரு நடன நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தீங்களே... அந்த நிகழ்ச்சிக்கு நானும் வந்திருந்தேன்.”

“அப்படியா?” அவள் ஆச்சரியப்பட்டுக்கொண்டு இருக்கும்போதே, நூலக அறை வர, நிசப்தம் காத்தார்கள்.

கண்களால் விடைபெற்றுக்கொண்டு கார்த்திகா கலை பகுதிக்கு நகர, கோபிநாத் ஆடைகள் பிரிவுக்குப் போனான்.

**கா**ரை ‘போர்டிகோ’வில் செருகிவிட்டு, புத்தகங்களோடு கார்த்திகா உள்ளே நுழைந்தபோது, புவனேஷ் யாரையோ மூன்று பேரை உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருந்தான். கார்த்திகாவைப் பார்த்ததும் அவர்கள் எழுந்தார்கள்.

“வணக்கம்மா...”

கொஞ்சம் அருகே நெருங்கியபோது அவர்கள் யார் என்பது அவளுக்குப் புரிந்தது. சாலிக்கிராமம் காளியம்மன் கோவில் விழாக் குழுவைச் சேர்ந்தவர்கள்.

கார்த்திகா கைகுவித்தாள். “வாங்க, வணக்கம். ரொம்ப நேரமா காத்திட்டிருக்கீங்களா?”


“அரை மணி நேரமாச்சும்மா.”

“நான் நூலகம் வரைக்கும் போயிட்டு வந்தேன். உட்காருங்க. என்ன விஷயம்?”

“போன தை மாசம் நம்ம கோவில் விழாவில் உங்க நடனத்தை வெச்சோம். அதே மாதிரி இந்தத் தடவையும்...”

அவர்கள் பேசப் பேச– தலைக்கு மேல் கைகளை உயர்த்தி ஒரு கும்பிடு போட்டாள், கார்த்திகா. “மன்னிக்கணும். போன தடவையே நீங்க ரொம்பவும் வற்புறுத்தினதினால நான் கோவில் விழாவில் வந்து ஆடினேன். ஆனா, நடனம் முழுமையா நடக்கலே. நடுவில் ஏகப்பட்ட கலாட்டா. என்னை சினிமா பாட்டுக்கு நடனம் ஆடச் சொல்லி ஒரே விசில் மயம். அந்த ‘ஏரியா’வைச் சேர்ந்தவங்களுக்கு என்னோட பரதம் சரிப்பட்டு வராதுங்க. நீங்க அவங்களோட ரசனைக்கு மாதிரி ஆட்களை அழைச்சு வந்து நிகழ்ச்சி பண்ணுங்க.”

“இல்லீங்கம்மா. போன தடவை நடந்த மாதிரி இந்தத் தடவை



இல்லே நிறைய போலீஸ் போட்டிருக்கோம். எவனாவது கலாட்டா பண்ணினான்னா போலீஸ் தள்ளிவிட்டுப் போயிடுவாங்க."

"அதெல்லாம் சரிப்பட்டு வராது வேண்டாங்க."

"நீங்க அப்படிச் சொல்லக்கூடாதும்மா. போனதடவை நாங்க உங்களுக்குக் கொடுத்ததைவிட பத்தாயிரம் ரூபா அதிகமா தர்றோம்."

"நான் பணத்துக்காகச் சொல்லலை."

கார்த்திகா சொல்லிக்கொண்டிருக்கும்போதே புவனேஷ் நாற்காலியில் இருந்து எழுந்து வந்தான். "அவங்கதான் சொல்றாங்களே கார்த்திகா.. போலீஸ் பாதுகாப்பு நிறைய தர்றோம்னு. போக வேண்டியதுதானே?"

"அதுக்கில்லீங்க நான் என்ன சொல்றேன்னா..."

புவனேஷுக்கு அவள் 'சோம்பல்' முன்னால் ஆடாத கோபம் மனசுக்குள் நீறுபூத்த நெருப்பாய் இருந்தது. இப்போது கன்று கொண்டாட்டு விழா அமைப்பாளர்களிடம் திரும்பினான்.

"நீங்க முன்பணம் கொடுத்துட்டுப் போங்க. நான் அனுப்பி வைக்கிறேன்."

"ரொம்ப நன்றிங்க."

கையில் வைத்திருந்த பணத்தை புவனேஷிடம் கொடுத்துவிட்டு, இருவருக்கும் ஒரு பொதுவான கும்பிடைப் போட்டுவிட்டு நகர்ந்தார்கள்.

அவர்கள் 'போர்டிகோ'வைத் தாண்டியதும்— கண்களில் கோபம் மின்ன புவனேஷைப் பார்த்தாள், கார்த்திகா.

"நீங்க ஏன் இந்த விஷயத்தில் எல்லாம் தலையிடுறீங்க?"

"நீ என்னோட மனைவி. அதனாலதான் தலையிடுறேன். தலையிட உரிமை இல்லேன்னு சொல்லு. நான் இனிமே எந்த விஷயத்திலேயும் தலையிடலை."

"நீங்க ஏன் என்னைத் தப்பாவே புரிஞ்சுக்கிட்டுப் பேசுறீங்க. இப்போ வந்துட்டு போனவங்க பரதம் ஆடுற அளவுக்கு வசதியான மேடை போடமாட்டாங்க. பரதத்தை ரசிக்கிறதுக்குப் பொறுமை வேண்டும். அந்தப் பொறுமை அந்த ஜனங்களுக்குக் கிடையாது. நடனம் பண்ணப் பண்ண மட்டமான கேலிகள் வேற. போனதடவை படாதபாடு பட்டுட்டேனுங்க."

"ரெண்டு மணி நேர நடனத்துக்கு இருபதாயிரம் ரூபா தர்றேன்னு சொல்றாங்க. நீ சபாவில போய் மூணு மணி நேரம் ஆடினாலும் பதினைந்தாயிரம் ரூபாதானே தர்றாங்க."

"சபாவிலே போய் ஆடுறதுக்கும், கோவில் விழாவிலே போய் ஆடுறதுக்கும் வித்தியாசம் இல்லீங்களா?"

புவனேஷ் குபீரென்று கோபத்துக்குப் போனான். "உம் மனசிலே நீ என்னதான் நினைச்சுட்டிருக்கே? நான் சொல்ற எதையுமே கேட்கிறதில்லைன்னு முடிவு பண்ணி இருக்கியா? 'சேர்மன்' முன்னாடி ஆடுன்னு சொன்னேன். மாட்டேன்னு சொல்லிட்டே! இதிலும் பிடிவாதம் பண்ணுறே. என்னை அவமானப்படுத்தணும்னே கங்கணம்கட்டி இருக்கியா?"

கண்களில் நீர் மின்ன கணவனைப் பார்த்தாள், கார்த்திகா. மெல்லிய குரலில் கேட்டாள். "நான் எதுக்காக உங்களை அவமானப்படுத்தணும்?"

"அப்படி நீ நினைக்கிறவளா இருந்தா, இந்தக் கோவில் விழாவுக்கு நீ நடனம் ஆடப்போகணும்."

"சரி... போறேன். விழா என்னிக்கு?" குரலில் அழுகை தெறித்தது.

"வர்ற ஞாயிற்றுக்கிழமை."

"எத்தனை மணிக்கு?"

"ராத்திரி எட்டு மணி."

"போறேன். இப்போ மகிழ்ச்சிதானே, உங்களுக்கு?" ஆத்திரம் வெடிக்கக் கேட்ட கார்த்திகா, விருட்டென்று திரும்பி தன்னுடைய அறையை நோக்கிப் போனாள்.

புவனேஷ் அவள் போவதையே புன்னகையோடு பார்த்தான்.

## 5

வெள்ளிக்கிழமை கொஞ்சம் அழுக்குப் பிடித்த மேகங்களோடும், பிளம்ஸ் பழ நிறச் சூரியனோடும், சோம்பலாய் விடிந்துகொண்டிருந்தது. ஜனவரி மாதத்துக்குச் சொந்தமான பனிப்புகை சென்னையை மூடி வைத்திருந்தது. ஜனங்கள் விழித்துக்கொண்டு அந்த நாளை தொடங்கி இருந்தார்கள்.

கார்த்திகா குளியலை முடித்துக்கொண்டு, ஈரத் தலைக்கு டவலைச் சுற்றிக்கொண்டு குளியல் அறையில் இருந்து வெளிப்பட்டாள். புவனேஷ் உதட்டிடுக்கில் புகையும் சிகரெட்டோடு தொலைபேசியில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தான்.



"சரி... சரி! சாயந்திரம் நம்ப கம்பெனிக்கு வாங்க. வர்றப்பவே பழைய பாக்கிக்கு ஒரு 'செக்' கொண்டாந்துடுங்க. ரொம்பவும் பணத் தட்டுப்பாடு."

ரிசீவரை அதனிடத்தில் அமர்த்திவிட்டுத் திரும்பியவன், கார்த்திகாவைப் பார்த்ததும், "வாரே... வா..." என்றான். "இந்த வெள்ளிக்கிழமை வந்தாலே நீ அமர்க்களம் பண்ணுறே கார்த்திகா! நிஜமாவே நீ மகாலட்சுமி மாதிரி இருக்கே?"

"நீங்க மகாலட்சுமியைப் பார்த்திருக்கீங்களா?" சிரிப்போடு கேட்டாள்.

"பார்த்திருக்கேனே!"

"எங்கே?"

"நம்ம கம்பெனியில் இருக்கிற 'டைப்பிஸ்ட்' பேர் மகாலட்சுமிதான். நான் தினமும் அவளைப் பார்த்திட்டிருக்கேனே!"

கார்த்திகா புன்னகையோடு புவனேஷை ஏறிட்டாள். மனசுக்குள் அந்த எண்ணம் ஓடியது. "இவ்வளவு அன்பாய்– சிரிப்பாய் பேசும் கணவன் சில நேரங்களில் மட்டும் ஏன் அப்படி வக்கரித்த மாதிரி நடந்துகொள்ள வேண்டும்?"

"என்ன கார்த்திகா அப்படிப் பார்க்கிறே...?"

"ஒண்ணுமில்லே."

"சரி வா... இப்படி வந்து உட்காரு."

"எதுக்கு?"

"சொன்னாத்தான் உட்காருவியா...?"

"சரி... உட்கார்றேன்" என்று சொல்லிக்கொண்டே சோபாவில் போய் அமர்ந்தாள்.

"நான் அங்கேயா உட்காரச் சொன்னேன்?"

"பின்னே?"

"இங்கே!" தன்னுடைய மடியைக் காட்டினான், புவனேஷ். சோபாவில் சாய்ந்தபடியே, அவனைப் பொய்க் கோபமாகப் பார்த்தாள், கார்த்திகா. "இன்னிக்குக் காலங்கார்த்தாலேயே அய்யா மூடுல இருக்கிற மாதிரி தெரியுது. நான் அம்பேல்..."

அவள் எழுந்து பூஜை அறையை நோக்கி ஓட்டமும், நடையுமாய் ஓட–

போர்டிகோவில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. போய்க்கொண்டிருந்த கார்த்திகா நின்றாள்.

"என்னங்க, யாரோ வர்றாங்க போலிருக்கு..."

புவனேஷ் தன் கையிலிருந்த சிகரெட்டை, டீபாயின் மேலிருந்த 'ஆஷ்ட்ரே'யிலிட்டு நசுக்கிவிட்டுப் போர்டிகோவை நோக்கிப் போனான். கார்த்திகா அவனைத் தொடர்ந்தாள்.

போர்டிகோவில் 'சாக்லெட்' நிற கார் நின்றிருக்க– இரண்டு கைகளாலும் ஒரு பூங்கொத்தை எடுத்துக்கொண்டு– உதட்டில் ஒட்டவைத்த புன்னகையோடு கோபிநாத் காரில் இருந்து இறங்கிக்கொண்டிருந்தான்.

புவனேஷ் நெற்றியைச் சுருக்க–

கார்த்திகா முகம் மலர்ந்தாள். சொன்னாள்: "வாங்க மிஸ்டர் கோபிநாத்."

புவனேஷ், 'இவன் எதற்காக வந்திருக்கிறான்?' என்கி பார்வையோடு அவனைப் பார்த்துக்கொண்டே வேண்டா வெறுப்பாய், "அலோ" என்றான்.

கோபிநாத் படியேறி வந்தான். பூங்கொத்தை இரண்டு கைகளாலும் ஏந்திக்கொண்டு கார்த்திகாவை நெருங்கியவன்–

"வாழ்த்துகள்" என்றான்.

"எதற்கு வாழ்த்து?"

கோபிநாத் முகத்தில் வியப்புக் காட்டினான். "இன்னு உங்களுக்கு தகவல் கிடைக்கலையா?"

"தகவலா? என்ன தகவல்..."

"நானே பத்திரிகை பார்த்துத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்."

"என்னான்னு சொல்லுங்க மிஸ்டர் கோபிநாத்!" ஆர்வமாய் கேட்டாள், கார்த்திகா.

கோபிநாத் மெல்லிய குரலில் சொன்னான்: "சிறந்த நடன கலைஞராக உங்களைத் தேர்ந்தெடுத்து இருக்காங்களே?"

"அப்படியா?" உடம்பு பூராவும் உற்சாகத்தைப் பூசிக்கொண் புவனேஷ், அதுவரை பிரித்துப் பார்க்காமல் கிடந்த பத்திரிகையை தேடிப் போனான்.

கோபிநாத் மறுபடியும் வாழ்த்து சொல்லி அந்த பூங்கொத்தை நீட் ஒரு நன்றியை உதிர்த்தபடியே சிரிப்போடு வாங்கிக்கொண்டா பூங்கொத்தை மார்போடு அணைத்துக்கொண்டு, "உள்ளே வாங் என்றாள்.

கோபிநாத் உள்ளே வந்தான்.

புவனேஷ் நாளிதழைப் புரட்டி மூன்றாம் பக்கத்தில் வெளியா இருந்த அந்தச் செய்தியின் மேல் கையை வைத்தபடி முக்கியத்து



கொடுத்துப் போட்டிருக்காங்க கார்த்திகா..." என்றான், சிரிப்போடு.

கார்த்திகா, கோபிநாத்தை ஏறிட்டாள். "உட்காருங்க கோபிநாத். இவ்வளவு காலை நேரத்துல பெய்கிற பனியையும் பொருட்படுத்தாம பாராட்ட வந்ததுக்கு ரொம்ப நன்றி... எங்களுக்கு இதுவரை தகவலே வரலை."

"தகவல் கொடுத்திருப்பாங்க– அது சாவகாசமா வரும். அப்போ நான் புறப்படுறேன் மிஸஸ் புவனேஷ்..."

புவனேஷ் மடித்த பத்திரிகையோடு கோபிநாத்தை நெருங்கினான். "அட! என்ன அதுக்குள்ளாற புறப்பட்டுட்டீங்க. எவ்வளவு மகிழ்ச்சியான விஷயத்தை எங்களுக்காகக் கொண்டுவந்திருக்கீங்க. தயவு செய்து ஒரு காப்பியாவது குடிச்சிட்டு போங்க."

"இல்ல– நன்றி மிஸ்டர் புவனேஷ்– நான் உங்க மனைவியின் பரத கலைக்கு அடிமை. அதனால அவங்களுக்கு ஒரு கவுரவம் கிடைச்ச செய்தியை பத்திரிகையில் பார்த்ததும் என்னால மகிழ்ச்சியை அடக்க முடியலை. தொழில்ரீதியா நீங்களும், நானும் போட்டியாளரா இருந்தாலும்– உங்க மனைவிகிட்டே இருக்கிற கலைக்காக முதல்தடவையா உங்க வீட்டுக்கு வந்தேன்..."

"நன்றி– நன்றி..." என்று போலியாய் மகிழ்ச்சியடைந்த புவனேஷ்– மெல்லிய குரலில், "ரெண்டு நாளைக்கு முன்னாடியே உங்க வீட்டுக்கு போன்' பண்ணணும்ன்னு நினைச்சிட்டிருந்தேன்" என்றான்.

"என்ன விஷயம்?"

"கன்னிமரா நூலகத்துக்கு முன்னாடி நடந்த சண்டையில ரவுடி மாணவர்கள்கிட்டே இருந்து கார்த்திகாவை காப்பாத்தினீங்களாமே...? அதுக்காக...!"

கோபிநாத் சிரித்து, "என்ன இது, சாதாரணம்" என்று சொல்லிவிட்டு, கார்த்திகாவின் பக்கமாய்த் திரும்பினான். மீண்டும் இதயம் கனிந்த வாழ்த்துகள்."

கார்த்திகா தலையசைக்க, கிளம்பினான். அவன் போர்டிகோவைத் தொட்டு, காரைக் கிளப்பிக்கொண்டு போகும்வரை மவுனம் காத்த புவனேஷ்– பிறகு வந்து, அவளைத் தூக்க முயன்றான்.

"சீச்சீ... விடுங்க..."

"நான் இதை கொண்டாடப்போறேன். நீ ஒண்ணும் பசக்கூடாது!"

"எப்படி...?"

"மத்தியானம் ஓட்டலில் சிறப்பு விருந்து."

"அப்புறம்...?"

"அப்புறம்... சாயந்தரம் ஏதாவது ஒரு நல்ல தியேட்டர்ல சினிமா... அப்புறம் ராத்திரி..."

"போதும்" என்று கையமர்த்தினாள்.

"நான் மத்தியானம் சரியா பன்னிரண்டு மணிக்கு தொழிற்சாலையில் இருந்து வீட்டுக்கு வருவேன். நீ புறப்பட்டு தயாரா இருக்கணும்."

"உத்தரவு" என்றாள், கார்த்திகா.

பதினொரு மணி வரைக்கும் கார்த்திகாவுக்கு வாழ்த்துகள் சொல்லி ஏகப்பட்ட தொலைபேசி அழைப்புகள். 'போன்' இருந்த இடத்துக்கும், சோபாவுக்கும் அலைந்து அலைந்து வியர்த்து, விறுவிறுத்துப் போனாள். 'அகாடமி' செயலாளர் நேரிலேயே புறப்பட்டு வந்து– அடுத்த வாரத்தில் ஒரு பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

தொழிற்சாலையில் இருந்து 11.30 மணிக்கு புவனேஷ் தொலைபேசியில் கூப்பிட்டான். இன்னும் அரை மணி நேரத்துலே புறப்பட்டு வர்றேன். நான் வர்றப்ப போர்டிகோவில நீ தயாரா நிக்கணும்..."

"இப்பவே நான் தயார்தான். நீங்க எப்ப வேணும்னாலும் புறப்பட்டு வரலாம்."

"நான் சரியா பன்னிரண்டு மணிக்கு வர்றேன்..."

"வாங்க."

ரிசீவரை வைத்துவிட்டு, ஆடை மாற்று அறைக்குள் நுழைந்தாள் கார்த்திகா.

மணி 11.45.

காம்பவுண்டு வாசலுக்குள் அந்த ஆட்டோ வேகமாய் நுழைந்தது.

'யார்?' –நெற்றியைச் சுருக்கிக்கொண்டு கார்த்திகா பார்த்த நிமிடம், அந்த ஆட்டோ தடதடத்துக்கொண்டு 'போர்டிகோ'வில் வந்து நின்றது.

ஆட்டோவில் இருந்து அரவிந்தன் இறங்கினான். கலைந்த தலை. வியர்வை பொங்கின முகம், அழுது சிவந்து போயிருந்த விழிகள்.

"அரவிந்தனா? வாங்க...!"

"அம்மா..." கண்களில் குப்பென்று நிறைந்துவிட்ட நீரோடு கைகளைக் கூப்பிக்கொண்டே 'போர்டிகோ' படியேறினான் அரவிந்தன்.

கார்த்திகாவின் முகம் மாறியது.



"என்ன அரவிந்தன்... ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க...?"

அரவிந்தனின் தொண்டைக்குழி அவதியாய் ஏறி இறங்கியது.

"அம்மா... ரா... ராணிக்கு உடம்பு ரொம்பவும் முடியாமே போயிடுச்சு... ஆஸ்பத்திரிக்குக் கொண்டுட்டு வந்தேன்... வர்றதுக்குள்ளே உடம்பு பூராவும் நீலம் பூத்தமாதிரி ஆயிடுச்சு... டாக்டர் பார்த்துட்டு நம்பிக்கையில்லாம பேசுறாரம்மா. எனக்கு பயமா இருக்கு... ஆஸ்பத்திரி வரைக்கும் கொஞ்சம் வரமுடியுமாம்மா?"

பதற்றமானாள், கார்த்திகா.

"எந்த ஆஸ்பத்திரி?"

"சண்முகா ஆஸ்பத்திரி."

"இதோ புறப்படலாம்" என்றவள், பின்பக்கமாய்த் திரும்பிப் பார்த்து, "மருது" என்று கூப்பிட்டாள்.

சமையல் ஆள் மருது உள்ளே இருந்து ஓடிவந்தான்.

"அம்மா..." பவ்வியம் காட்டி நின்றான்.

"அய்யா இன்னும் கொஞ்ச நேரத்துல வருவாரு... நான் சண்முகா ஆஸ்பத்திரி வரைக்கும் போயிருக்கிறதா சொல்லு... சீக்கிரமா வந்துடுறேன்னு சொல்லுங்க..."

"சரிம்மா..."

"வாங்க அரவிந்தன், போலாம்..."

போர்டிகோவில் காத்திருந்த ஆட்டோவுக்குள் ஏறிக் கொண்டார்கள்.

ஆட்டோ பறந்தது.

சண்முகா மருத்துவமனை.

தன்னுடைய பிரத்தியேக அறையில் டாக்டர் நடராஜன் மோவாயை வலக்கையால் தாங்கி இருந்தார். உச்சந்தலை வழுக்கையில் வெள்ளமாய் வியர்வை.

எதிரே–

கார்த்திகாவும், அரவிந்தனும் திகில் அப்பின முகங்களோடு உட்கார்ந்து இருந்தார்கள். டாக்டர் நடராஜன் சொல்லிக் கொண்டிருந்தார்.

"குழந்தை ராணியோட ரத்த வகை ரொம்ப அரிது. ரத்த வங்கியில் அந்தவகை ரத்தம் தற்போது கைவசம் இல்லை. நகரில் இருக்கிற எல்லா ஆஸ்பத்திரிலேயும் கேட்டுப் பார்த்துட்டேன். அந்த ரத்தம் கிடைக்கலை... ஒரு பாட்டில் ரத்தமாவது உள்ளே போனாத்தான் குழந்தைக்கு ஆபத்து இல்லை..."

தன்னுடைய ரத்த வகையைச் சொன்னாள், கார்த்திகா.

"அது பயன்படாது..." உதட்டைப் பிதுக்கினார், டாக்டர்.

புவனேஷின் ரத்தவகையைச் சொன்னாள். டாக்டர் மறுத்தலாய்த் தலையாட்டினார். "ராணியோட ரத்த வகை ரொம்பவும் அபூர்வம். நானும் எல்லா வகையிலேயும் முயற்சி பண்ணிப் பார்த்துட்டேன். இன்னும் ஒரு மணி நேரத்துலே ராணிக்கு ரத்தம் கொடுத்தாகணும். ரத்த வகையோட விபரம் தர்றேன். வெளியே எங்கேயாவது முயற்சி பண்ணிப் பாருங்க."

அரவிந்தனும், கார்த்திகாவும் திகிலோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

## 6

**க**ண்களில் ஏகப்பட்ட அதிரல்களை நிரப்பியபடி டாக்டரை ஏறிட்டாள், கார்த்திகா. முகம், இருட்டு நிறத்துக்குப் போய்க்கொண்டிருந்தது. மெல்லிய குரலில் சொன்னாள்:

"டாக்டர், ராணியோட ரத்த வகை விவரங்களை கொடுங்க. நான் வெளியிலே முயற்சி பண்ணி ஒரு மணி நேரத்துல அந்த ரத்தம் கிடைக்க ஏற்பாடு பண்ணுறேன்."

டாக்டர்நடராஜன்,காகிதம்எடுத்து,சின்னச்சின்ன வாக்கியங்களா ராணியின் ரத்த வகை விபரங்களை எழுதிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு அவள் வேகமாய் வெளிப்பட்டாள். அரவிந்தன் கன்னங்களில் வழியும் நீர்க்கோடுகளோடு அவளைத் தொடர்ந்தான். குரல் தழுதழுக்கக் கேட்டான்.

"ரத்தம் கிடைச்சுடுமாம்மா?"

ஒரு சின்ன புன்னகையோடு அரவிந்தனை ஏறிட்டாள் கார்த்திகா. "நீங்க தைரியமா இருங்க அரவிந்தன். இன்னும் அரை மணி நேரத்துல ராணியோட ரத்த வகையைச் சேர்ந்த ஒருத்தரை இங்கே கூட்டிட்டு வர்றேன்."

"உங்களைத்தாம்மா நம்பிட்டிருக்கேன்."

"போய் ராணிக்குப் பக்கத்துல இருங்க. நான் இ வந்துடுறேன்."

வெளியே வந்து ஆஸ்பத்திரி வாசல் அருகே காலியாய் நின்றிரு ஒரு ஆட்டோவை அமர்த்திக்கொண்டாள், கார்த்திகா.

"எங்கம்மா போகணும்?"

"பவளக்காரத் தெரு."



**ப**த்தே நிமிடம்.

'ஆட்டோ' குறுகலான பவளக்காரத் தெருவில் ஓடி, கார்த்திகா சுட்டிக்காட்டின அந்த வீட்டின் முன்னால் தன் சத்தத்தை நிறுத்திக்கொண்டது.

கார்த்திகா இறங்கினாள். "ஒரு அஞ்சு நிமிடம் காத்திருப்பா. இப்ப வந்துடுறேன்" –சொல்லியபடியே அந்த வீட்டின் முன்புறமாய் 'எஸ்' போட்டுக்கொண்டு மேலே போன மாடிப்படிகளில் ஏறி, வராந்தாவில் தென்பட்ட முதல் அறைக் கதவைத் தட்டினாள்.

அரை நிமிட அவகாசத்திற்குப் பின் அந்த அழுக்கான மரக்கதவு திறந்தது.

பூப்போட்ட லுங்கி, 'டீ ஷர்ட்', கலைந்த தலை, தூக்கம் கலைந்ததில் சிவப்பான கண்கள்– இந்தக் கோலங்களோடு அந்த இளைஞன், "ஹாய்" என்று ஆச்சரியப்பட்டான். "வா... வா. உள்ளே வா. உன்கூட ஒண்ணா படிச்ச இந்த வேலையில்லாப் பட்டதாரியை ஞாபகம் வைச்சிட்டு வந்திருக்கியே? ரொம்ப ரொம்ப நன்றி."

"இதோ பாரு கிருபாகரன், உள்ளே வர எனக்கு நேரமில்லை. ...ன்னால் எனக்கு ஒரு உதவியாகணும்."

அந்தக் கிருபாகரன் கீழ்வரிசைப் பற்கள் தெரிய அழகாய்ச் ...ரித்தான். "ஏகப்பட்ட புகழோட இருக்கிற நீ என்கிட்டே உதவி ...கட்டு வந்திருக்கியா? செம ஆச்சரியம். எனக்கும் ஒரு நேரம், ...களு கேளு."

"நான் ஒரு தடவை உன்னை ஒரு திருமணத்தில் சந்திச்சுப் ...பசினேன், ஞாபகமிருக்கா?"

"ம்... இருக்கு."

"நீ இப்போ என்ன பண்ணிட்டு இருக்கேன்னு நான் உன்னை ...ட்டப்ப, கவிதை எழுதறதாச் சொன்னே. அப்புறம்அரிய வகை ...ந்த தானம் செய்வோர் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, முகாம்கள் ...த்தறதாச் சொன்னே?"

"ஆமா, சொன்னேன்."

"அந்த அமைப்பு இன்னும் இருக்கா கிருபாகரன்?"

"ஊகூம்... அவ்வளவு சரியாய் நடக்கலை. ரத்தம் ஒரு ...வை கொடுத்தாலே செத்துப்போயிருவோம்ன்னு நினைக்கிற ...ங்ககிட்டே எங்க உறுப்பினர்களால் மாரடிக்க முடியலை. எனக்கு ...கெனவே வேலையில்லை. கைக்காசு செலவழிச்சு எவன் முகாம் ...த்துவான்? நான் கழண்டுக்கிட்டேன். இப்போ அந்த அமைப்புல

சீனிவாசராகவன்னு பாங்கி மானேஜர் ஒருத்தர். அவர்கிட்டே
போயிடுச்சு. ஆமா, இதையெல்லாம் எதுக்காகக் கேக்கிறே?”

கார்த்திகா அந்த மருந்துச் சீட்டைக் காட்டி, ராணியின் ரத்த
தேவையைப் பற்றிச் சொன்னாள்.

கிருபாகரன் தன் ஆட்காட்டி விரலால் நெற்றியை
கீறிக்கொண்டே- கையிலிருந்த ரத்த வகை விபரங்களை
பார்த்தபடி கேட்டான்.

“இன்னும் ஒரு மணி நேரத்துல அந்தக் குழந்தைக்கு ரத்த
செலுத்தியாகணுமா?”

“ஆமா.”

“இப்போ நீ எதுல வந்தே?”

“ஆட்டோ.”

“இந்நேரம் போனா சீனிவாசராகவன் வீட்டுல இருப்பா
அவர்கிட்டே இந்த விபரங்களை காட்டினா இந்த ரத்த வ
ஆசாமியைப் பிடிச்சிடுவார்.”

“தயவுசெய்து சீக்கிரம் வா, கிருபாகரன்.”

“வந்தேன்.”

மேசை மேலிருந்த பூட்டையும், சாவியையும் எடுத்து அறை
பூட்டி, மாடிப்படியில் தடதடத்து ஆட்டோவுக்கு வந்தார்கள்.

“எல்லீஸ் ரோடு” என்றான், கிருபாகரன்.

ஆட்டோ புறப்பட்டது.

“அந்த ரத்தம் கொடுப்போர் அமைப்புல மொத்தம் எத்தனை
பேர் இருப்பாங்க?”

“ரொம்பக் குறைவு. முதலில் இருந்தவங்க ரொம்பப்
விலகிட்டாங்க.”

“அந்தக் குழந்தை ராணியைப் பத்தி மனசுக்குள்ளே ஒரே திகி
இருக்கு. அந்தக் குழந்தையோட ரத்த வகை கிடைக்குமா?”

“நிச்சயமாக் கிடைக்கும். அமைப்போட தலை
சீனிவாசராகவன் சாமானியப்பட்டவரில்லை. நீ விஷயத்
சொன்னதும், அவர் உறுப்பினர் பட்டியலை எடுத்துப் பார்
அந்தக் குழந்தையோட ரத்த வகை யாருக்கு இருக்கு
தெரிஞ்சுகிட்டு- ஆள் எங்கிருந்தாலும் உன்கூட அனு
வைப்பார்.”

ஆட்டோ எல்லீஸ் சாலையில் நுழைந்தது.
கிருபாகரன் அடையாளம் காட்டின வீட்டுக்கு முன்னால்
அந்த வீட்டின் வாசற்படி ஏறினார்கள். பச்



பட்டாணி அளவில் இருந்த அழைப்புமணி பொத்தானை கிருபாகரன் அழுத்த, சீனிவாசராகவனே வந்து கதவைத் திறந்தார்.

அவர் நடுத்தர வயதைத் தாண்டி இருந்தார். ஒடிசலான- சிவப்பு முகம். மூக்குக் கண்ணாடிக்குள் தெரிந்த கண்களில் கூர்மை. லேசாய் நரைத்த கிராப் தலை, கலைந்துபோயிருந்தது.

“அட, கிருபாகரன் வாங்க” என்றார்.

உள்ளே போனார்கள்.

வீடு ‘பளிச்’சென்று இருந்தது. மூன்று பேரும் நாற்காலிகளில் சரிந்ததும், கிருபாகரன் சொன்னான்:

“சார், இவங்களை உங்களுக்குத் தெரியுதா?”

சீனிவாசராகவன் திரும்பி கார்த்திகாவை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, “இவங்களை நான் எங்கோ பார்த்திருக்கிறேன்” என்றார்.

“எங்கே?”

“சொல்லத் தெரியலை. ஆனால், தெரிந்த முகம்.”

“இவங்க கார்த்திகா. புகழ்பெற்ற பரதநாட்டிய கலைஞர்.”

சீனிவாசராகவன் மகிழ்ச்சியாகி, “அப்படியா? உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி” என்று கைகளைக் குவித்தார்.

கார்த்திகாவும் கைகளைக் குவிக்க- கிருபாகரன் சொன்னான்: “நீங்க சந்தோஷப்பட்டா மட்டும் போதாது சார். அவங்களுக்கு நீங்க ஒரு உதவியும் பண்ணணும்.”

“சொல்லுங்க.”

கார்த்திகா விபரம் சொன்னாள். கையில் இருந்த காகிதத்தையும் அவரிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிப் பார்த்த சீனிவாசராகவன் மெல்லச் சிரித்தார்.

“என்ன சார் சிரிக்கிறீங்க?”

கேட்ட கிருபாகரனுக்குப் பதில் சொல்லாமல், தான் உட்கார்ந்த நாற்காலியைவிட்டு எழுந்தார், அவர். “வாங்க. ஆஸ்பத்திரிக்குப் போகலாம். குழந்தை ராணியோட ரத்த வகை கிடைச்சிடுச்சு.”

“சார்...”

“ம்... வாங்க. ராணியோட ரத்த வகைதான் எனக்கும்.”

**ச**ரியாய் ஒரு மணி நேரம்.

**சீனிவாசராகவனின் ரத்தத்தை வாங்கிக்கொண்ட ராணியின் உட மெல்ல மெல்லப் பழைய பிரகாசத்துக்குத் திரும்பிக்கொண்டிரு**

அரவிந்தனின் கைக்கூப்பலையும், "நல்லதொரு காரியம் பண்ணி இருக்கீங்க மிஸஸ் கார்த்திகா" என்கிற டாக்டரின் பாராட்டையும் புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டு வெளியே வந்து– பக்கத்து அறையில் அசதியாய்ப் படுத்திருந்த சீனிவாசராகவனுக்கும், அவருகே உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்த கிருபாகரனுக்கும் நன்றி சொல்லிவிட்டு, நெற்றியில் துளித்த வியர்வையோடு ஆட்டோ பிடித்துத் தன் பங்களா போய்ச் சேர்ந்தபோது–

மணி 1.50.

புவனேஷ் வீடு திரும்பினதுக்கு அடையாளமாய்ப் போர்டிகோவில் கார் நின்றிருந்தது. அறையிலிருந்த சோபாவில் புவனேஷ் உட்கார்ந்து, எதிர்புறச் சுவரைப் பார்த்தபடி ஒருவித எந்திரத்தனமாய்ச் சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருந்தான்.

வேகவேகமாய் அவனை நெருங்கினாள், கார்த்திகா.

"மன்னிக்கணும்."

அவன் திரும்பிக்கூடப் பார்க்காமல், கண்களில் கோபத்தோடு புகைவிட்டான்.

"ரொம்பக் கோபம் போலிருக்கு."

சோபாவைச் சுற்றிக்கொண்டு அவனுக்கு எதிராக வந்து உட்கார்ந்தாள், கார்த்திகா. "பாவங்க அந்தக் குழந்தை. திடீர்னு ரத்தம் செலுத்தணும்னு சொல்லிட்டாங்க. குழந்தையோட அப்ப அரவிந்தன் பதறிக்கிட்டு வந்து சொல்றப்போ நான் எப்படிங்க போகா இருக்க முடியும்? அந்தக் குழந்தை 'ஆபரேஷன்' முடிஞ்சு குணமா வரணும்னுதானே நான் நடன நிகழ்ச்சி பண்ணினேன்."

"சமூக சேவை முடிஞ்சுதா? இல்லே இன்னமும் பாக்கி இருக்கா

ஆஷ்ட்ரேயில் சிகரெட்டைத் தேய்த்துவிட்டு, அவள் பக்கமாய் திரும்பினான். கார்த்திகா தன் மோவாயைத் தாங்கிக்கொண் உர்ரென்று பார்த்தாள்.

"எம்மேலே கோபங்களா?"

அவனுடைய கையைப் பற்றப் போனாள்.

விருட்டென்று கையைத் தட்டிவிட்டு எழுந்தான், புவனே

"அதுக்குள்ளே ஏன் திரும்பி வந்துட்டே? அரசாங்க ஆஸ்பத்திரிக் போய்– அங்கே படுத்திருக்கிற யார் யாருக்கு என்னென் ரத்த வகை வேணும்னு கேட்டு, அவங்களுக்கெல்லாம் ஏற்பா பண்ணிட்டு வர்றதுதானே?"

"ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க? நாம ரெண்டு பே ஓட்டலுக்குச் சாப்பிடப் போயிருந்தா இந்நேரம் அந்தக் குழந் பலியாகி இருக்கும்."



"சாவைத் தடுத்து நிறுத்தறத்துக்காகவே நீ அவதாரம் எடுத்து வந்திருக்கியா என்ன?" சவுக்கைச் சொடுக்கின மாதிரி கேள்வி கேட்டவனை ஆவேசமாய்ப் பார்த்தாள், கார்த்திகா.

"ஒரு குழந்தையோட உயிரைவிட ஓட்டல்ல போய்ச் சாப்பிடுறதுதான் உங்களுக்குப் பெரிசா போச்சா? யாருக்குமே மனசுல கொஞ்சம் ஈரமும், மனிதாபிமானமும் வேணுங்க."

"உனக்கு வரவர வாய் அதிகமாயிடுச்சு. ஊர்ல உன்னை நாலு பேர் பாராட்டினதும் தலைக்கனமாயிடுச்சு. உன்னை இப்படியேவிட்டால் துளுத்துப்போயிடுவே. வர்ற ஞாயிற்றுக்கிழமை நீ கலந்துக்கப் போற நடன நிகழ்ச்சிதான் உன்னோட கடைசி நிகழ்ச்சி. அதுக்கப்புறம் நீ கால்ல சலங்கையே கட்டக்கூடாது. அதையும் மீறி நீ ஆடுவேன்னு அடம்பிடிச்சா..."

"அடம்பிடிச்சா?" சின்னச் சிரிப்போடு கேட்டாள், கார்த்திகா.

"நீயும், நானும் விவாகரத்துக்காகக் கோர்ட்டு படி ஏறவேண்டியிருக்கும்."

புவனேஷின் வார்த்தையில் அடிபட்ட கார்த்திகா, சட்டென்று கண்களில் நீர்திரண்டு அவனையே பார்த்தாள்.

"ஒரு சின்ன விஷயத்துக்காகப் பெரிய பெரிய வார்த்தையெல்லாம் ஏன் பயன்படுத்துறீங்க? நான் இனிமே ஆடக்கூடாது. அவ்வளவு தானே?"

"ஆமாம்."

"நான் ஆடலை, போதுமா?"

"அந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிக்கு மட்டும் போயிட் வந்துடு."

"அதுமட்டும் எதுக்கு? அதுவும் வேண்டாம். நீங்களே போ அந்த முன்பணத்தைத் திருப்பிக் கொடுத்துட்டு வந்துடுங்க."

"வாங்கின முன்பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டா உன்னோட பரதத்துக்கு நிறைவு விழாவா அந்த நடன நிகழ்ச்சி வச்சுக்க. நிகழ்ச்சியை முடிச்சிட்டு வர்ற வழியிலேயே சலங்கையை வீசிட்டு வந்துடு. அதுக்கப்புறம் இந்த வீட்டுல சலங்கைச் சத் கேட்டா நான் மிருகமாயிடுவேன்."

கண்களில் கோபம் தெறிக்க புவனேஷையே பார்த் கார்த்திகா.

"என்னடி முறைக்கிறே?"

"என்ன சொன்னீங்க? நான் சலங்கையை வீசி எறியணு

"ஆமா."

"இன்னிக்கு உங்களுக்கு அந்தச் சலங்கை துச்சமாத் தெரி

ஆனா, நாளைக்கு நீங்க அதைக் கையிலே எடுத்துட்டு வந்து ஆடுன்னு சொல்லி என்கிட்டே கொடுப்பீங்க.”

“அது என்னிக்குமே நடக்காது.”

“நடக்கத்தான் போகுது.”

“என்ன, சபதம் போடுறியா?”

“சபதம்னே வைச்சிக்கலாம். நீங்க சொன்ன அந்த ஞாயிற்றுக் கிழமைதான் நான் கால்ல சலங்கையைக் கட்டுற கடைசி நாள். அதுக்கப்புறம் நான் கட்டமாட்டேன். நீங்களா வந்து என் காலைத் தொட்டு அந்தச் சலங்கையைக் கட்டிவிடுற நாள் வரும். அதுவரைக்கும் காத்திட்டிருப்பேன்.”

வார்த்தைகளில் அனலைத் தடவிக் கக்கிவிட்டு, விருட்டென்று எழுந்து உள்ளே போனாள், கார்த்திகா.

## 7

**கா**ர்த்திகாவுக்கும், புவனேசுக்கும் மத்தியில் ஏராளமான கோபம் இருந்தது.

சனிக்கிழமை ராத்திரி பூராவும் ஒரே கட்டிலில் முதுகுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு படுத்திருந்தார்கள். தொலைபேசி மணி அடித்தபோது இரண்டு பேருமே ரிசீவரை எடுக்காமல் வீம்பு காட்ட, அது அலறுவதை நிறுத்திக்கொண்டது. நடுநிசிக்குமேல் புவனேஷ் சன்னமான குறட்டையொலியோடு தூங்கிவிட— தூக்கம் பிடிக்காத கார்த்திகா எழுந்து உட்கார்ந்து ஜன்னல் வழியே ஆகாயத்தில் நெரிந்த நட்சத்திரக் கூட்டத்தை வேடிக்கை பார்த்தாள். மூன்று மணி சுமாருக்கு அவளுக்கே தெரியாமல், தூக்கம் பின்பக்கமாய் வந்து கண்களைப் பொத்த- தூங்கிப்போனாள், மெல்ல.

ஆறு மணிக்கு எதிர்வீட்டு வானொலி ‘வந்தே மாதரம்’ பாட- விழித்துக்கொண்டாள். சட்டென்று அந்த மாற்றத்தை உணர்ந்தாள்.

புவனேஷ் அவளுக்கு வெகு நெருக்கமாய்ப் படுத்து- அவளுடைய இடுப்பில் கை போட்டிருந்தான். வேறொரு நேரமாக இருந்தால் புவனேஷின் அந்தச் செயலுக்காக வெட்கமாய் முறுவலித்து- தூங்கிக்கொண்டிருக்கும் அவனுடைய நெற்றியில் மெல்ல முத்தமிட்டிருப்பாள்.



ஆனால் இப்போது-

புவனேஷின் அந்தச் செய்கை அவளுக்குள் எரிச்சலைக் கிளப்பியது. லேசான அருவருப்போடு அவனுடைய கையை தன் இடுப்பிலிருந்து அகற்றிவிட்டு எழுந்தாள். ஜன்னலுக்கு வெளியே ஜனவரியின் பனிப்புகை- சாம்பிராணி போட்டுவிட்ட மாதிரி தெரிய; கிழக்குப் படுக்கையில், மேகப் போர்வையைப் போர்த்திக்கொண்டு, சூரியக் குழந்தை இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தது.

கார்த்திகா குளித்து முடித்து காப்பி தம்ளரோடு மறுபடியும் படுக்கையறையில் நுழைந்தபோது, புவனேஷ் எழுந்து உட்கார்ந்து செய்தித்தாளைப் பிரித்து பங்குச்சந்தை நிலவரங்களை குறிப்பேட்டில் குறித்துக்கொண்டிருந்தான். உதட்டில் சிகரெட் புகைந்தது.

அவனுக்கு முன்னால் இருந்த டீபாயில் காப்பி தம்ளரை வைத்தாள். அவன் மவுனமாய் எடுத்துக்கொண்டு உறிஞ்சினான்.

அவனையே பார்த்தபடி நின்றிருந்த கார்த்திகா, “க்கும்” என்று தொண்டையைக் கனைத்தாள்.

“என்ன?” என்பது போல் ஏறிட்டான், அவன்.

“நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்.”

“ம்...”

“காரை எடுத்துட்டுப் போறேன்.”

“காரா? எந்தக் கோவிலுக்குப் போறே?” கேட்டுக்கொண்டே சிகரெட்டை ‘ஆஸ்டிரே’யில் தேய்த்தான்.

“ராமலிங்க சவுடேஸ்வரி கோவில்.”

“சரி... சரி... போயிட்டு எப்ப வருவே? எனக்கு எட்( மணிக்கெல்லாம் கார் வேணும். தொழிற்சாலைகள் அமைப்பி தலைவர் பதவிக்கான தேர்தலில் நான் நிக்கப்போறேன். ஓட்டுக்கா உறுப்பினர்களிடம் ஆதரவு கேட்கப் போகணும்.”

“ஏழு மணிக்கெல்லாம் வந்துடுவேன்.”

“ம்... ம்... சீக்கிரமாப் போயிட்டு வா” எரிச்சலான குரல் சொல்லிவிட்டு, மறுபடியும் பங்குச்சந்தை செய்திக்குள் நுழைந்தா புவனேஷ். கார்த்திகா மெல்ல நடந்து அறையைக் கடக்கும் நேர தொலைபேசி வீறிட்டது. போனில் யார் என்று அறிகிற ஆவ போய்க்கொண்டிருந்த கார்த்திகா நின்றாள்.

“அலோ...”

“.........”

“ஓ... சாலிக்கிராமம் கோவில் கமிட்டியா? என்ன வி சொல்லுங்க?”

“.........”

"நடன நிகழ்ச்சிதானே? கண்டிப்பா வருவா. தாராளமாய் ஏற்பாடு பண்ணுங்க."

"......."

"ஊகூம்... அதெல்லாம் மாட்டேன்னு சொல்லமாட்டாள். ஏழாயிரம் ரூபாயைக் கைநீட்டி வாங்கி இருக்கோமே? நூத்தியொரு சதம் கண்டிப்பா வருவா. நானே கார்ல கொண்டாந்துவிடுறேன். போதுமா?"

ரிசீவரை டொக்கென்று வைத்துவிட்டு, கதவருகே நின்றிருந்த கார்த்திகாவை ஏறிட்டான், புவனேஷ். "சாலிக்கிராமம் கோவில் கமிட்டியில் இருந்து பேசுறாங்க. ஏழு மணிக்கு அங்கே போயிடணுமாம். நீ கண்டிப்பா வருவேன்னு சொல்லி இருக்கேன். கடைசி நிமிடத்துலே எதையாவது காரணம் காட்டிப் போகாமே இருந்தே... அப்புறம்..."

"போறேன், போதுமா?"

"ம்... சொன்னது ஞாபகமிருக்கட்டும். நடன நிகழ்ச்சி முடிஞ்சு வீட்டுக்கு வரும்போது உன்கிட்டே சலங்கை இருக்கக்கூடாது."

"நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்."

"எட்டு மணிக்கு எனக்குக் கார் வேணும்."

"கிடைக்கும்."

"சரி" ஆத்திரம் தெறிக்கும் குரலில் பளிச் பளிச்சென்று வார்த்தைகளை உதிர்த்துவிட்டு– மேசை மேலிருந்த தேங்காய்ப்பழக் கூடையை எடுத்தபடி– 'போர்டிகோ'வில் நின்றிருந்த காரை நோக்கிப் போனாள், கார்த்திகா. கிழக்கில் பெங்களூர் தக்காளியாய்ச் சூரியன் புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

"ஹைய்யா... ஆண்டி..." என்றாள், ராணி. கைகளைத் தட்டிப் பிரவேசித்தாள்.

விசிலடித்துக்கொண்டிருந்த பால் குக்கரைத் துணியால் பற்றிக் கீழே இறக்கிக்கொண்டிருந்த அரவிந்தன், திரும்பிப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான்.

"காலை வணக்கம். இவ்வளவு காலையில் நான் உங்களை எதிர்பார்க்கலைம்மா. தயவுசெய்து உள்ளே வாங்கம்மா."

உள்ளே வந்தாள், கார்த்திகா. "சவுடேஸ்வரி கோவிலுக்குப் போனேன். ராணி பேருக்கு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு, நேரா இங்கே வர்றேன். ராணி! வாம்மா" குழந்தையைக் கூப்பிட்டு நெற்றியில் குங்குமத்தையும் மஞ்சளையும் பூசிவிட்டாள். துளசியைக் கிள்ளி வாயில் வைத்தாள்.



"உட்காருங்கம்மா."

நெகிழ்ச்சியோடு நாற்காலியை இழுத்துப் போட்டான், அரவிந்தன்.

மன்னிக்கனும் அரவிந்தன். எனக்கு உட்கார நேரமில்லை. அவருக்கு கார் வேணும். வெளிலே புறப்பட்டு போகக் காத்திட்டிருப்பார். நாளைக்குக் காலையிலே விமான நிலையத்துக்கு என்னால வரமுடியுமோ முடியாதோன்னு நான் இவ்வளவு காலையில வந்தேன்..."

"நீங்க சிரமப்பட்டு வரணும்கிற அவசியமே இல்லேம்மா. ராணியை நீங்க நினைச்சுக்கிட்டாலே போதும்..."

"நான் ராத்திரி ஏழு மணி வரைக்கும் வீட்ல இருப்பேன். ஏதாவது உதவி தேவைப்பட்டா தயங்காம எனக்கு போன் பண்ணுங்க, அரவிந்தன்..."

புன்னகையோடு தலையாட்டினான் அரவிந்தன். கார்த்திகா, ராணியின் கன்னத்தை மெல்லத் தட்டினான்.

"ஆபரேஷன் முடிஞ்சு இந்தக் குட்டி ராணி அமெரிக்காவில் இருந்து திரும்பறப்போ..."

"ஆன்டி விமான நிலையத்துக்கு வருவேனாம், சரியா?"

"ம்..."

ராணியின் பெரிய கண்களில் நோயின் சோர்வையும் மீறிக்கொண்டு மகிழ்ச்சிப் பளிச்சிடல்கள் தெரிந்தன. "ஆன்டி– நான் அமெரிக்காவில் இருந்து வர்றப்போ உங்களுக்கு என்ன வாங்கி வரட்டும்?"

"சிரிப்பு."

"சிரிப்பா?" –ராணி சிரித்தாள்.

"ம்... நீ இப்ப சிரிக்கிறயே... அந்தச் சிரிப்பை நீ வாங்கிட்டு வரணும். விமானநிலையத்தில் உன்னை வரவேற்க வர்றப்ப 'ஆன்டி'ன்னு நீ சிரிச்சுக்கிட்டே வரணும்..." அவளுடைய முகத்தை வருடிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள்.

காரைவிட்டு இறங்கும்போதுதான் கார்த்திகா கவனித்தாள்.

போர்டிகோவுக்குக் கொஞ்சம் தள்ளி அந்த சாக்லேட் நிறக் கார் நின்றிருந்தது.

'இது... இது?' யோசித்தபோது–

'கோபிநாத் கார்' என்றது கார்த்திகாவின் மூளைப் பிரதேசம். கையில் பூக்கூடையோடு உள்ளே நுழைந்தாள். ஹாலில் போட்டிருந் சோபாவில் அருகருகாய் உட்கார்ந்த படி புவனேசும், கோபிநாத்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கார்த்திகாவைப் பார்த்ததும், கோபிநாத் எழுந்து நின்றான்.

"வணக்கம் மிஸஸ் கார்த்திகா..."

"வணக்கம்... வந்து நேரமாச்சா... மிஸ்டர் கோபிநாத்?"

"நீங்க கோவிலுக்குப் புறப்பட்டுப் போன அஞ்சு நிமிடத்துலே நான் வந்தேன்."

"நீங்க எங்க வீட்டுக்கு வந்தாலே ஒரு நல்ல செய்தி கொண்டுவருவீங்க. இன்னிக்கும் காலையில வந்திருக்கீங்க. ஏதாவது முக்கியமா?"

புவனேஷ் குறுக்கிட்டான், புன்னகையோடு! "நானே சொல்றேன் கார்த்தி! வர்ற பிப்ரவரியில நடக்கப்போற எங்க தொழிற்சாலைகளின் அமைப்பு தலைவர் பதவிக்கு நான் போட்டி போடப் போகிற விஷயம் உனக்குத் தெரியும். எனக்குப் போட்டியா கோபிநாத் நிக்கிறமாதிரி இருந்தது. ஆனா, கோபிநாத் இப்போ மனசு மாறி- போட்டியில் இருந்து விலகி ஒரு மனதா என்னைத் தேர்வு பண்ணுற அளவுக்கு முயற்சி செய்யப் போறதா சொல்றார். அடுத்த வாரம் கமிட்டி கூட்டத்தில் இதைப் பத்தி பேசப்போறார்?"

கார்த்திகா செயற்கையாகப் புன்னகை செய்தாள்.

**சா**யந்தரம் ஐந்து மணிக்கே ஆகாயம் அழுக்கு நிற மேகங்களைக் கும்பல் கும்பலாய்ச் சேர்த்துக்கொண்டு- மழை பெய்யலாமா வேண்டாமா? என்று பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தது. சில முரட்டு மேகங்கள் சூரியனை அமுக்கி, அவனுடைய வெளிச்சப் பற்களைத் தட்டி இருந்ததில் மேற்கு வானமும்- கறுப்பு வண்ணம் அடித்த மாதிரி இருட்டாய் இருந்தது.

கார்த்திகா ஆகாயத்தைக் கவலையாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தொலைபேசி கிணுகிணுத்தது. ரிசீவரை எடுத்தாள்.

கம்பெனியிலிருந்து புவனேஷ் பேசினான். "கார்த்தி..."

"ம்..."

"நான் சரியா ஆறு மணிக்கு வர்றேன்... நீ தயாரா இரு."

"என்னங்க?"

"சொல்லு."

"மழை வர்ற மாதிரி இருக்கு."

"மழை வராது. இது வெறும் ஊமை மேகம்தான். அப்படியே மழை வந்துட்டாலும் பெரிசா இருக்காது. தூறலாத்தான் இருக்கு புறப்பட்டு தயாரா இரு..."

"சரிங்க."

மறுமுனையில் ரிசீவரைக் கவிழ்த்துவிட்டான், புவனேஷ். கார்த்திகாவும் ரிசீவரை சாத்திவிட்டு 'போர்டிகோ'வுக்கு வந்து



நின்று ஆகாயத்தைப் பார்த்தாள். ஒவ்வொரு மேகமும் நிறைமாத கர்ப்பிணி மாதிரி அசைந்து- தொட்டால் பொத்துக்கொண்டு 'சோ'வென பெய்துவிடக்கூடிய சாத்தியத்தில் இருந்தது.

இதுவா ஊமை மேகம்?

கன்னத்தில் கை பதித்து- 'போர்டிகோ' வராந்தாவிலேயே நாற்காலியில் சாய்ந்து கொண்டாள், கார்த்திகா.

விநாடிகள் கூட்டம் கூட்டமாய் செத்து- நிமிடங்கள் வேக வேகமாய்ப் பிறந்து- கடிகார முட்களைத் துரத்தியது.

மணி 6.05.

வருவதாகச் சொன்ன புவனேஷைக் காணோம்.

6.10.

ரிசீவரை எடுத்து கம்பெனி எண்ணுக்கு சுழற்றினாள். கிடைக்கவில்லை. மறுபடியும் மறுபடியும் முயற்சித்தாள். திரும்பத் திரும்ப 'என்கேஜ்ட்' சலிப்போடு ரிசீவரை வைத்துவிட்டு கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் 6.20.

போர்டிகோவுக்கு வந்து கார் வருகிறதா என்று சாலையைப் பார்த்தாள். சாலை வெறிச்சோடிக்கிடக்க- ஒரு சைக்கிள் ரிக்ஷா மட்டும் பெய்யப்போகும் மழைக்குப் பயந்து வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

கார்த்திகா காத்திருந்தாள். மணி ஏழானபோது- உள்ளே தொலைபேசி கூப்பிட்டது.

## 8

**கா**ர்த்திகா துள்ளலாய் ஓடிப்போய் ரிசீவரை எடுத்தா "அலோ" எனக் குரல் கொடுத்தாள். மறுமுனையில் புவனே பேசினான்.

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

"கார்த்தி..." அவன் குரலைக் கேட்டதுமே ஆத்திரமானாள். "என்னங்க... இவ்வளவு சாவகாசமா போன் பண்ணுறீங்க? மணி எவ்வளவு தெரியுங்களா? ஏழு. நீங்க எப்ப வந்து என்னைக் கூட்டிட்டுப் போறதாம்...?"

"மன்னிக்கனும் கார்த்திகா. கம்பெனியோட 'கியர்' பிரிவில் ஒரு பெரிய பழுது ஏற்பட்டிருக்கு. நானும் அந்த நெருக்கடியில் உட்கார்ந்துட்டதுல உன்னையும்– அந்த நடன நிகழ்ச்சியையும் மறந்துட்டேன்."

கார்த்திகாவின் உடம்பில் பாய்ந்து கொண்டிருந்த மொத்த ரத்தமும் கொதி நிலைக்குப் போய்விட்டு இயல்புக்கு வந்தது.

'அந்த மனுஷனிடம் ஆத்திரத்தைக் காட்டிப் பிரயோசனமில்லை.'

"சரி, இப்போது புறப்பட்டு வர்றீங்களா?"

"மன்னிக்கனும். என்னால் இப்போ வரமுடியாது."

திடுக்கிட்டாள். "அப்புறம் நான் எப்படி நடன நிகழ்ச்சிக்குப் போறது?"

"காரை அனுப்பி வைக்கிறேன். குருமூர்த்தி காரை ஓட்டிட்டு வருவான். அவன்கூடப் போயிட்டு வந்திடு."

சில விநாடிகள்– பேசாமல் மவுனம் காட்டினாள், கார்த்திகா. மறுமுறையில் புவனேஷ் கேட்டான். "என்ன, பேச்சையே காணோம்?"

"காரை அனுப்பி வைய்யுங்க. நடன நிகழ்ச்சிக்கு நானே காரை ஓட்டிட்டு போயிட்டு வந்துடுறேன்."

"குருமூர்த்தி வேண்டாமா?"

"வேண்டாம்."

"ராத்திரியிலே தனியா போயிட்டு வந்துடுவியா?"

"ம்..."

"மழை வர்றமாதிரி இருக்கு."

"மழை வராதுங்க! எல்லாமே ஊமை மேகம்..."

கார்த்திகாவின் வார்த்தையில் அடிபட்ட புவனேஷ் எரிச்சலாகிச் சொன்னான். "சரி... சரி... காரை அனுப்பி வைக்கிறேன். போயிட்டுச் சீக்கிரமா வந்துடு."

"சீக்கிரமா வரமுடியாதுங்க. எப்படியும் மணி பத்தாயிடும்."

"சரி... சரி... பதிலுக்குப் பதில் பேசிட்டிருக்காதே. கார் இன்னும் பத்து நிமிடத்துல அங்கே வரும். புறப்பட்டு தயாரா இரு."



"நான் தயாராத்தான் இருக்கேன்" சொல்லிவிட்டு ரிசீவரைச் சாத்தினாள், கார்த்திகா.

நடன நிகழ்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் அடங்கிய சூட்கேஸோடு, போர்டிகோ வாசலுக்கு வந்தாள். வடக்குப் பக்கமாய் எங்கோ பிய்த்து வாங்கிக்கொண்டிருந்த மழை, ஈரக் காற்றை மட்டும் தெற்குப் பக்கமாய் அனுப்பி வைக்க, கார்த்திகா மறுபடியும் கவலையோடு வானத்தை அண்ணார்ந்து பார்த்தாள். சாம்பல் நிற மேகங்கள் மந்தை மந்தையாய் நகர்ந்துகொண்டிருந்தன.

சரியாய் 7.20–க்கு–கார் வெளிச்சத்தோடு 'போர்டிகோ'வில் வந்து நிற்க, குருமூர்த்தி பவ்வியமாய்க் கீழே இறங்கி வந்தான்.

"அய்யா உங்க கூடவே போயிட்டு வரும்படியாச் சொன்னாரும்மா."

"வேண்டாம். காரை நானே ஓட்டிக்கிறேன். நீ ஆட்டோ பிடிச்சு கம்பெனிக்குப் போயிடு."

"துணைக்கு யாரும் இல்லாமே...?"

கார்த்திகா வெடித்தாள். "எனக்கு ஒண்ணும் ஆயிடாது. உன்னோட முதலாளியைப் பயப்படாம இருக்கச் சொல்லு."

**கா**ர்த்திகா எழும்பூர் சிக்னலைத் தாண்டினாள். மழை கொட்டிக்கொண்டிருந்தது.

அந்தப் பகுதியின் சாலையோர சோடியம் விளக்குகள் இறுக்கமாய்க் கண்களை மூடியிருக்க– சாலை நெடுக ஒரு தற்காலிக இருட்டு பரவியிருந்தது. காரின் விளக்குகள் வெளிச்சத்தைக் கொட்டி இருட்டைக் கழுவிக்கொண்டு போக– 'வைப்பர்'கள் முன்புறக் கண்ணாடியில் பட்ட மழைத் துளிகளைப் போ... போ... என்று விரட்டிக்கொண்டிருந்தன.

'இந்த மழையில் நடன நிகழ்ச்சி நடக்குமா... நடக்காதா?'

'எவ்வளவு மழைக் கொட்டினாலும் சரி, ஆடியே தீருவது–' மனதில் பீறிட்ட ஓர் ஆத்திரத்தோடு ஆக்ஸிலேட்டரை மிதித்தாள் கார்த்திகா.

அடுத்த விநாடி–

காரின் எஞ்சின் பகுதியில் இருந்து– கரகரவென்று மணலைக் கொட்டிய மாதிரி ஏதோ சத்தம்.

கார் தானாகவே நிற்கத் தொடங்கியது.

என்னாயிற்று?

மறுபடியும் ஆக்ஸிலேட்டரில் காலைப் பதிக்க– "உர்ர்ர்" என்ற கார்.

காரை சாலையோரமாய் ஒதுக்கினாள், கார்த்திகா. சட்... சட்டென்று காரின் மண்டையிலும், பானெட்டிலும் விழுந்துகொண்டிருந்த மழைத்துளிகளைப் பொருட்படுத்தாமல் கீழே இறங்கினாள்.

தொலைவில் வெளிச்சத்தோடு– ஒரு கார் தெரிந்தது.

சாலையின் நடுவே– பெய்கிற மழையில் ஒரு தேவதை மாதிரி நின்று கையை அசைக்க– அந்த கார் வேகம் மட்டுப்பட்டு அவளருகே வந்து நின்றது.

காரின் கதவருகே குனிந்தவள்– உள்ளே இருந்த நபரைப் பார்த்ததும் மகிழ்ச்சியானாள்.

"மிஸ்டர் கோபிநாத்... நீங்களா...?"

கோபிநாத்தும் ஆச்சரியமாகிக் கீழே இறங்கினான். "என்ன மிஸஸ் கார்த்திகா... இந்த நேரத்துல... இந்த இடத்துல நின்னுட்டிருக்கீங்க?"

"கார்ல என்னமோ கோளாறு திடீர்னு நின்னுடுச்சு."

"அப்படியா...?" என்று சொன்னவன், தன் காருக்குள் தலையை நுழைத்து– சின்ன 'டார்ச் லைட்'டை எடுத்துக்கொண்டான்.

மழையில் நனைந்துகொண்டே, கார்த்திகாவின் காரை நோக்கி போனான். பானெட்டைத் திறந்துகொண்டே கேட்டான்.

"நீங்க மட்டும் தனியா எங்கே போயிட்டிருக்கீங்க?"

"சாவிக்கிராமத்துல ஒரு நடன நிகழ்ச்சி."

"நீங்க மட்டும் தனியாவா போறீங்க! மிஸ்டர் புவனேஷ் உங்கக்கூட வரலையா?"

"வரலை."

"ஏன்?"

"என்னிக்குமே அவருக்கு என்னைக் காட்டிலும் தொழில்தான் பெரிசு."

"நடன நிகழ்ச்சி எத்தனை மணிக்கு?"

"ஏழு மணிக்கே நான் போய் இருக்கணும், தாமதமாயிடுச்சு. போதாக்குறைக்கு இப்போ கார் வேற 'மக்கர்' பண்ணிடுச்சு."

கோபிநாத்தின் கையிலிருந்த 'டார்ச்' ஒரு சின்ன வெளிச்ச வட்டத்தை உமிழ– அதன் வெளிச்சத்தில் காரின் நோயைத் தேடினான். வெளிச்ச வட்டம் அங்குலம் அங்குலமாய்த் தத்தித் தத்தி நகர, "அட" என்று நிமிர்ந்தான் கோபிநாத்.

"என்னாச்சு?"



"பேன் பெல்ட் அறுந்திடுச்சு" முகத்தில் அடித்த மழையை கையால் தடுத்துக்கொண்டே கோபிநாத் சொல்ல– திக்கென்று நிமிர்ந்தாள், கார்த்திகா.

"என்னங்க பண்றது?"

"புது 'பெல்ட்' வாங்கிப் போடணும்."

"எங்கே கிடைக்கும்...?"

"இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. கடைங்க சாத்தியிருக்கும். என் வீட்டுல ஒரு புது 'பேன் பெல்ட்' இருக்கு. கொண்டாந்து மாட்டிடலாம். நீங்க கார்ல காத்திருங்க. நான் போய் 'பெல்ட்'டை கொண்டாந்துடறேன்."

"நேரமாகுமா?"

"எப்படியும் பதினைஞ்சு நிமிடம் ஆயிடும். உங்களுக்கு கார்ல உட்கார்ந்திருக்க பயமா இருந்தா– காரை பூட்டிட்டு, என் கூடவே வாங்க. இந்த இடம் ஒரு மாதிரிப்பட்டது மழை பெய்யற இந்த இருட்டுல நீங்க தனியா இருக்கிறது எனக்கு அவ்வளவு உசிதமாபடலை. வாங்க, என்னோட வீட்டுக்கும் நீங்க வந்தமாதிரி இருக்கும். என் அம்மாவுக்கும் உங்களைப் பார்த்த மாதிரி இருக்கும்."

"வீட்ல அம்மா இருக்காங்களா?"

"ஆமா."

"இருங்க. காரை பூட்டிட்டு வந்திடுறேன்" கார்த்திகா வேக வேகமாய்ப் போய் காரின் கதவுகளை அறைந்து சாத்தி, முன்புறம் பூட்டிவிட்டு திரும்பினாள்.

மழை லேசாய் பெய்துகொண்டிருந்தது.

கோபிநாத் தன் காரின் பின்கதவைத் திறந்துவிட– கார்த்திகா உள்ளே பரவினாள். கார் நகர்ந்து வேகம் பிடித்தது.

கோபிநாத் சொன்னான்: "வழக்கமா நான் இந்த வழியா வரமாட்டேன். இன்னிக்கு என்னமோ இந்த வழியா போகலாமேன்னு நினைச்சேன். உங்களுக்கு உதவ ஒரு வாய்ப்புக் கிடைச்சது."

"இப்போ... நீங்க எங்கே போயிட்டு வர்றீங்க?"

"டாக்டர் ரமணியோட 'ஆடியோ' வெளியீட்டு நிகழ்ச்சிக்குப் போயிட்டுத் திரும்பிட்டிருக்கேன். மிஸ்டர் புவனேஷ் வீட்ல இருக்காரா? கம்பெனியில் இருக்காரா?"

"கம்பெனியில்."

"அவரோட பொழுதுபோக்கு என்ன?"

"என்கூடச் சண்டைப் போடுறது."

கோபிநாத் சிரித்தான். "உங்களுக்கும், அவருக்கும் ஏன் அடிக்கடி சண்டை வருது? ஜாதகப் பொருத்தம் பார்த்துத்தானே கல்யாணம் பண்ணினாங்க?"

"பத்துக்கு எட்டுப் பொருத்தம் இருந்தது."

"பின்னே ஏன் சண்டை?"

"மனப்பொருத்தம் பத்துக்கு பூஜ்ஜியம்..."

கார் இருட்டான சாலைகளில் ஓடி– அந்த பங்களாவுக்குள் நுழைந்தபோது– மழை தன் வேகத்தைக் கூட்டி இருந்தது. பங்களா, அடர்ந்த இருட்டில் நிசப்தமாய் நின்றிருந்தது. காரைவிட்டு இறங்கிப் பின்பக்கக் கதவைத் திறந்துவிட– கார்த்திகாவும் இறங்கினாள்.

"வாங்க மிஸஸ் கார்த்திகா..."

போர்டிகோ படியேறிக்கொண்டே கதவை நோக்கிப் போன கோபிநாத்– பின்னால் வந்துகொண்டிருந்த கார்த்திகாவைத் திரும்பிப் பார்த்தபடி "சே" என்றான்.

"என்னங்க..."

"அம்மா வீட்டைப் பூட்டிக்கிட்டு கோவிலுக்குப் போயிருக்காங்க."

"அவங்க வர்றவரைக்கும் காத்திட்டிருக்கணுமா?"

"இல்ல... என்கிட்ட ஒரு சாவி இருக்கு. அம்மாவுக்கு உங்க வருகை ஒரு ஆச்சரியமாக இருக்குமேன்னு நினைச்சேன்."

"இன்னொரு நாள் வந்தா போகுது."

'பேண்ட் பாக்கெட்'டில் இருந்த சாவியை எடுத்துப் பூட்டின் வாய்க்குக் கொடுத்தான். பூட்டுக் கழன்று தொங்கியதும்– கதவைத் தள்ளி உள்ளே போனான்.

வரவேற்பறையின் 'சுவிட்சு'களையும், ஹாலின் 'சுவிட்சு'களையும் தட்டிவிட– 'குபீர் குபீர்' என அறைகளிலும் வெளிச்சம் பற்றிக்கொண்டது.

"மிஸஸ் கார்த்திகா..."

"ம்..."

"வீட்டைச் சுத்திப் பார்த்திட்டிருங்க. நான் 'கார் ஷெட்'டுக்கு போய் அந்த 'பேன் பெல்'டை எடுத்துட்டு வந்துடறேன்."

"தயவு செய்து கொஞ்சம் சீக்கிரம் எடுத்துட்டு வாங்க."

"ரெண்டு நிமிடம்! வந்துடறேன்" சொல்லிக்கொண்டே வெளியே போனான், கோபிநாத்.

கார்த்திகா வரவேற்பறையைத் தாண்டி ஹாலுக்குள் நுழைந்தாள்.



வெளிர் பச்சைநிற வண்ணம் தடவிக்கொண்ட சுவர்கள், கண்களை இதமாய் வருடிவிட்டன. கன்னியாகுமரி சூரியோதயம் காரட் நிறத்தில் சுவர்பட்மாய் ஒட்டப்பட்டிருக்க அதற்குக் கீழே– ஆங்கில வாசகம் தெரிந்தது.

ஹாலின் வலப்பக்க அறையில்– நிறைய தொழில் மொழி பேசும் புத்தகங்கள் முக்காடிட்டுக் கொண்ட டிவி. வெண்ணெய் நிறத்தில் குளிர்சாதனப்பெட்டி.

அதற்கு அடுத்த அறைக்குள் நுழைந்தாள்.

படுக்கையறை.

இரட்டைக் கட்டில் மெத்தை. கட்டிலுக்கு மேலே சுவரில் பிறந்த மேனியாய் மல்லார்ந்து படுத்து– கண்ணைச் சிமிட்டும் ஒரு கடற்கரைப் பெண்.

லேசாய் அதிர்ந்துபோன கார்த்திகா, முகச்சுளிப்போடு திரும்ப எத்தனித்த விநாடி– அவளுடைய தோளின் மேல் ஒரு கை விழுந்தது.

திரும்பினாள். அவளுக்கு வெகு அருகில் கோபிநாத் 'விஸ்கி' வாசனையோடு கேட்டான்:

"அந்தப் படம் உனக்குப் பிடிக்கலையா கார்த்திகா?"

## 9

கண்களுக்குள் சின்னச் சின்னப் பூகம்பங்கள் நிகழ, கோபிநாத்தைப் பார்த்துக்கொண்டே மெல்ல பின்வாங்கினாள் கார்த்திகா. உதடுகள் தன்னிச்சையாய் வார்த்தைகளை உதிர்த்தன: "கோ...பி...நா...த்"

கோபிநாத் புன்னகைத்தான்.

"கோபிநாத்... நீங்களா இப்படின்னு சொல்லிடாதே கார்த்திகா. நான் ரொம்பவும் மோசமானவன். உன்னை மாதிரி அழகான பெண்கள் என் கண்ணுல பட்டுட்டா... அவங்க இந்த படுக்கை அறைக்கு வந்தே ஆகணும்ங்கிறது இந்த கோபிநாத்தோட சட்டம் எந்தப் பெண்ணுக்குமே ஒரு பலகீனம் உண்டு. அந்த பலகீனத்தை நான் பயன்படுத்தி அவங்களை இங்கே கொண்டுவருவே இன்னிக்கு நீ."

வெளியே மழை இரைந்துகொண்டிருக்க, கார்த்திகா குரல் அடக்கி மெதுவாய்க் கர்ஜித்தாள். "இதோ பாரு கோபிநா என் உன்னோட மரியாதை கெடுறதுக்கு முன்னாடி என் வெளியே அனுப்பிடு."

"மரியாதையா?" சிரித்தான், கோபிநாத். "அது என்கிட்டே இருந்தாத்தானே கெடுறதுக்கு? என்கிட்டே இல்லாத ஒண்ணைப் பத்தி நான் எதுக்காகக் கவலைப்படணும்?"

கார்த்திகாவின் அடிவயிற்றில் சின்னதாய் ஓர் அக்னிக்குண்டம் உற்பத்தியாகி அனலை வீசியது. பயம் இதயத்தைத் தடவிவிட்டாலும், துணிச்சலை வரவழைத்துக்கொண்டு கத்தினாள்.

"வீணாக ஒரு விபரீதத்தைத் தேடிக்காதே, கோபிநாத். அவருக்கு விஷயம் தெரிஞ்சா நீ உயிரோடு இருக்கமாட்டே."

"யாருக்கு? உன் புருஷனுக்கா? அவன் தொழிலைப் பத்திக் கவலைப்படுற ஆசாமி. பெண்டாட்டியைப் பத்திக் கவலைப்படமாட்டான். தொழிற்சாலைகளின் அமைப்பு தலைவர் என்கிற பதவி எலும்புத்துண்டை அவன் கண் முன்னாடி தொங்கவிட்டிருக்கேன். அந்த நாயோட பார்வை பூராவும் அது மேலேதான் இருக்கும்."

"டேய்ய்ய்..." பற்களைக் கடித்தாள், கார்த்திகா.

"உம் புருஷனை நாய்னு சொன்னதுமே உனக்கு ரோஷம் பொத்துக்கிட்டு வந்துடுச்சு. என்னையும் டேய்னு கூப்பிட்டுட்டே... பரவாயில்லை. அப்படிக் கட்டிலுக்குப் போயிடலாமா?"

ஆத்திரமும், ஆவேசமுமாய்க் கோபிநாத்தின் கன்னத்தை நோக்கிக் கையை வீசினாள், கார்த்திகா. பாதியிலேயே அவளுடைய கையைக் 'கப்'பென்று பிடித்தான், கோபிநாத்.

எக்குத்தனமான பிடி.

"பிரயோசனமில்லை கார்த்திகா. இந்தக் கோபம், ஆத்திரம், பிடிவாதம் இதெல்லாம் இந்த அறையில்... இந்தக் கோபிநாத்கிட்டே எடுபடாது. மழையிலே ரொம்பவும் நனைஞ்சுட்டே. சேலையை உருவி அப்படிக் காயப்போடேன்."

சொல்லிக்கொண்டே அவள் எதிர்பார்க்காத ஒரு விநாடியில் சேலைத்தலைப்பைப் பற்றிப் பிடித்து 'விறுவிறு'வென இழுத்தான், கோபிநாத்.

கண் இமைப்பதற்குள் சேலை அவன் கையில் குப்பலாய்ச் சிக்க, 'பெட்டிகோட்'டும் பிளவுசுமாய்– அறையைச் சுற்றி ஓடினாள், கார்த்திகா.

சேலையைச் சுவரோரமாய் வீசிவிட்டு, கன்னத்தைச் சொறிந்துகொண்டு சிரித்தான், கோபிநாத். நடனம் ஆடியாடி உடம்பை அமர்க்களமா வைச்சிருக்கே, கார்த்திகா. அடடா, 'பெட்டிகோட்'டும் ஈரமா இருக்கு போலிருக்கே. அதையும்



காயப்போடேன்" சொல்லிக்கொண்டே அவளை நோக்கி நகர்ந்தான், கோபிநாத்.

"நோ..." வீரிட்டாள்.

"பக்கத்திலே வராதே."

அவன் வந்தான்.

அவள் மிரட்சியோடு பின்வாங்க, குபீரென்று அவளுடைய இடுப்புக்குக் கை கொடுத்து அள்ளிக்கொண்டான். கட்டிலை நோக்கி நடந்தான். அவள் திமிறித் திட்டினாள்.

"யூ... ராஸ்கல்..."

"திட்டு... திட்டு..."

கட்டிலில் அவளை எறிந்துவிட்டு, தன்னுடைய சட்டை பொத்தான்களைக் கழற்றினான், கோபிநாத். "உன்னோட நடன நிகழ்ச்சி இன்னிக்கு இங்கேதான் கார்த்திகா. வெளியே கொட்டுற மழைதான் இசை."

கார்த்திகா திகிலில் உறைந்துபோன விழிகளோடு சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே கட்டிலில் நகர்ந்தாள்.

கோபிநாத் வெற்று மார்போடு கட்டில் நுனியில் உட்கார்ந்தான்.

அதே விநாடி–

பங்களா ஹாலின் பின்புறத்தில் 'ச்ச்ச்ச்ச்லீர்' என்ற சத்தம் கேட்டது. ஏதோ கண்ணாடி உடையும் சத்தம்.

கோபிநாத் ஒரு சின்ன அதிர்ச்சிக்குப் போனான். குழப்ப முகத்தோடு கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினான். மார்புக்கு 'எக்ஸ்' குறி போட்டு, கண்களில் ஏராளமான திகிலோடு சுவரோரமாய் ஒண்டியிருந்த கார்த்திகாவை ஆட்காட்டி விரலைக் காட்டி எச்சரித்தான்.

"மூச்சுக் காட்டாமல் அப்படியே உட்காரணும். காத்து அடிச்சுக் கண்ணாடி ஜன்னல் உடைஞ்சிருக்கணும். நான் போய்ப் பார்த்துட்டு வர்றவரைக்கும் நீ இருக்கிற இடத்தைவிட்டு அசையக்கூடாது."

சொல்லிக்கொண்டே திரும்பியவன், முதுகுத்தண்டின் முக்கிய சந்திப்புகளில் சுளீரென்று உறைந்துபோனான்.

அறைவாசலை அடைத்தமாதிரி அரவிந்தன் நின்றிருந்தான். மழைநீர் தலைமயிரில் இருந்து நிதானமாய்ச் சொட்டிக்கொண்டிருந்தது.

கோபிநாத்தை வெறித்துப் பார்த்த கண்களில் உக்கிரமான சிவப்பு.

அவனுடைய வலக்கையில் மடக்கின குடை.

சுவரோரமாய் ஒண்டியிருந்த கார்த்திகா ஒரு சிரிப்போடு, "அரவிந்தன்..." என்று கத்திக்கொண்டே பாய, சட்டென்று குறுக்கே கைநீட்டி மறித்த கோபிநாத் சிரித்தான்.

"அதிகமா மகிழ்ச்சி அடைந்திடாதே கார்த்திகா. இவன் சினிமா 'ஹீரோ' இல்லை. இவனாலே உன்னைக் காப்பாத்த முடியாது. வழி தவறி உள்ளே வந்திருக்கான்."

அரவிந்தன் இரண்டடி முன்னால் வந்தான். மெல்லிய குரலில்– ஆனால், கோபம் அனலாய் தெறிக்கச் சொன்னான்: "கோபிநாத்... அவங்களை மொதல்லே வெளியே போகவிடு."

"எவங்களை?" கிண்டலாய்க் கேட்டான், கோபிநாத்.

"கோபிநாத்! இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம். மரியாதையா அவங்களை வெளியே அனுப்பிடு."

"அட! அனுப்பாட்டி நீ என்ன பண்ணுவே?"

"உனக்கும், எனக்கும் மத்தியிலே ஏற்கெனவே ஒரு பகை நெருப்பாட்டம் இருக்கு. என்னோட குழந்தை ராணிக்காக அதையெல்லாம் மறந்துட்டு வர்றேன். உன்னால இவங்களுக்கு ஏதாவது ஒண்ணு ஆனா, நான் சும்மா இருக்கமாட்டேன்."

"நீ என்ன பண்ணுவேன்னு பார்க்க எனக்கு ஆசையா இருக்கு. உன் முன்னாடியே நான் இவளைத் தொடுறேன். உன்னாலே என்ன பண்ண முடியுமோ பண்ணு பார்க்கலாம்."

கோபிநாத் சொல்லிக்கொண்டே, கார்த்திகாவை நோக்கி வேகமாகப் போனான். கார்த்திகா நடுங்கினாள். முழு உடம்பையும் சுருட்டிச் சுவரோரமாய் உட்கார்ந்தாள்.

அரவிந்தன் கத்தினான், வெறியோடு.

"கோபிநாத்..."

கத்தின அரவிந்தனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அவளை நெருங்கினான், கோபிநாத்.

அடுத்த விநாடி–

'ர்ர்ர்ர்ர்ர்ர்ப்'பென்று பிடரியில் அந்த அடி விழ– துள்ளித் திரும்பினான், கோபிநாத். அரவிந்தனின் கையிலிருந்த குடை, இன்னொரு செமத்தியான அடிக்குத் தயாராகிக்கொண்டிருக்க... அந்த வேகத்தை மணிக்கட்டில் தடுத்து நிறுத்தினான், கோபிநாத். ஒரு விகார இளிப்போடு சொன்னான்:

"மரியாதையாப் போயிடு."

"நீ அவங்களைத் தொட்டா நான் சும்மா இருக்கமாட்டேன்."



"இந்த அறைக்குள்ளே வந்த எந்தப் பொண்ணையும் நான் தொடாமே விட்டதில்லே. என் விஷயத்துல குறுக்கிடாம அப்படி ஒதுங்கி நின்னு வேடிக்கைப் பாரு... இலவசமா ஒரு காட்சியை நேரில் பார்த்த மாதிரி இருக்கும்."

"டேய்ய்ய்..."

அரவிந்தன் ஒரு சின்ன பிரளயமாய் மாறினான். ரத்தம் கொதித்துக்கொண்டு உஷ்ணமாய் ஓடியது. முகமும், கண்களும் கூடுதல் சிவப்பை வாங்கிக்கொள்ள– நீட்டிய குடையோடு கோபிநாத் மேல் பாய்ந்தான்.

கோபிநாத், அரவிந்தனைச் சுலபமாய் தடுத்து அவனுடைய கழுத்தை வாகாய்ப் பற்றிக்கொண்டான். வலக்கால் முட்டியை 'எல்' மாதிரி உயர்த்தி அரவிந்தனின் வயிற்றில் 'நெக்'கென்று இடித்தான். தாடையிலும், மூக்குப் பிரதேசத்திலும் முஷ்டியை வேகமாய்ப் பதிக்க– ரத்தம் எட்டிப் பார்த்தது. ரொம்பவும் சுலபத்தில் சுவரோரமாய்ச் சுருண்டான்.

கார்த்திகா வீரிட்டபடி அவனை நெருங்கினாள். "கோபிநாத்... அவரை ஒண்ணும் பண்ணிடாதே. நாளைக்குக் காலையில் குழந்தையை அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா கூட்டிட்டுப் போகணும்."

"ஓ... ஊர் பூராவும் பிச்சை எடுத்த காசில் அமெரிக்கா போகப் போறானா? நூத்துல ஒருத்தருக்குத்தான் இந்த மாதிரி அதிருஷ்டம் கிடைக்கும்! பயப்படாதே கார்த்திகா. பயலுக்கு வெறும் மயக்கம்தான். அரை மணி நேரம் கழிச்சுத்தான் கண்முழிப்பான். அந்த அரை மணி நேரத்துக்குள்ள நம்ம காரியத்தைப் பார்ப்போமா?"

"இல்ல."

உடம்பைச் சிலிர்த்துப் பின்வாங்கினாள், கார்த்திகா.

"பார்த்தியா... மறுபடியும் முரண்டு பண்ணுறே? நான் தொட்ட பின்னாடி உன்னோட கற்பு போயிடுமேன்னு பார்க்கிறியா நீயாவே இஷ்டப்பட்டுக் கெட்டுப்போனாத்தான் 'கற்பு' இழந்தத அர்த்தம்."

"இல்ல... எம்பக்கத்துல வராதே" கார்த்திகா மெல்ல மெல் பின்வாங்கி நகர்ந்துகொண்டே போய் சுவரோடு தடாலெ முட்டிக்கொண்டு நின்றாள். மிரள மிரளப் பார்த்தாள். கோபி சிரித்தான்.

"கட்டில் வேண்டாம்... இங்கேயே வைச்சுக்கலா சொல்லிக்கொண்டே போய் அவளுடைய புஜத்தின் மேல்





வைத்தான். தன்னுடைய என்பது இலோ உடம்பை அவள் மேல் வியாபித்து– தன்னுடைய பிசுபிசுப்பான கையால் அவளுடைய மோவாயைப் பற்றி– முகத்தை நிமிர்த்தி உதடுகளைப் பார்த்தான்.

"லேசா 'லிப்ஸ்டிக்' பூசி இருக்கே போலிருக்கே?"

கார்த்திகா திமிறினாள்.

"புவனேஷ் ஒரு மடையன். உன்னை மாதிரி எனக்கு ஓர் அழகான பெண்டாட்டி இருந்தா நான் தொழிலைக் கவனிக்க என்னோட கம்பெனிக்குப் போகமாட்டேன்" சொல்லிக்கொண்டே கார்த்திகாவின் உதடுகளை நோக்கிக் குனிந்தான், கோபிநாத்.

அதே விநாடி–

பின்னந்தலையில் இடியாய் இறங்கியது, அந்த அடி. மண்டைக்குள் எதுவோ பொத்துக்கொண்டு உள்ளே நுழைந்த மாதிரியான உணர்வு.

"ஸ்...ஸ்...ஸ்...ஸ்...ஸ்..." என்றபடி திரும்பினான், கோபிநாத். பார்வையில் மசமசப்புத் தட்டியது. கண்களைக் கொட்டிப் பார்த்தான்.

அரவிந்தன் ஓர் எமகிங்கரன் மாதிரி நின்றிருக்க– கையிலிருந்த குடையின் இரும்பு முனையிலிருந்து ரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

"நீ...நீ...நீ...நீ..." கத்திக்கொண்டே தடுமாற்றமாய்ப் பாய்ந்தான். சட்டென்று காலை இடறிவிட்டான், அரவிந்தன்.

அந்த ஆவேசமான இடறலில் கோபிநாத் பின்பக்கமாய் விழ, குடையின் முன்புறம் கூர்மையாய் நீட்டிக்கொண்டிருந்த இரும்புக் கம்பியின் முனையை இரண்டடிக்கு மேலே உயர்த்தி– உடம்பின் பலத்தைப் பூராவும் திரட்டி– கோபிநாத்தின் தொண்டைக்குழியில் இறக்கினான், அரவிந்தன்.

'ச்சசத்...'

அவனுடைய தொண்டையில் இருந்து பீறிட்ட சூடான ரத்தம், அரவிந்தனின் முகத்தில் புள்ளி புள்ளியாய்த் தெறித்தது. அப்படியும் அரவிந்தனின் ஆவேசம் அடங்குகிற மாதிரி தெரியவில்லை.

"ஒழிடா... பணக்காரப் பொறுக்கி நாயே!" பற்களைக் கடித்து, கோபிநாத்தின் தொண்டைக்குழியில் செருகி நின்ற குடையின் இரும்பு முனையை உருவி– மறுபடியும் மேலே உயர்த்தி– அவனுடைய அடிவயிற்றில் இறக்கினான்.

'நச்ச்...'

இன்னொரு வழி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் ரத்தம் 'குபுகுபுத்துப் பொங்க– கோபிநாத் துடித்தான்.

அரவிந்தன் தன் முகத்தில் தெறித்திருந்த ரத்தத்துளிகளைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே– துடித்துக்கொண்டிருந்த கோபிநாத்தைப் பார்த்தான். உக்கிரம் கண்களில் நெருப்பாய்த் தெரிந்தது.

சரியாய் ஒரு நிமிடத் துடிப்பு.

இரண்டாவது நிமிடத்தின் முதல் விநாடியில்– கண்கள் மேற்கூரையை வெறிக்க, கோபிநாத் ரத்தக்கறையில் நிசப்தமாகி அடங்கினான்.

பங்களாவுக்கு வெளியே காற்று விசிலடிக்க–

மழை இரைச்சலாய்ப் பெய்துகொண்டிருந்தது.

## 10

அறையில் கனத்துக்கிடந்த நிசப்தத்தைச் சேதப்படுத்திக் கொண்டு, மெதுவாய் நடந்த அரவிந்தன்– சுவரோரமாய்க் கிடந்த ஈரமான சேலையைக் கையில் எடுத்துக்கொண்டபடி கார்த்திகாவை நெருங்கினான்.

அவள் உறைந்துபோய்– சுவருக்குச் சாய்ந்து நின்றிருந்தாள். பயத்தில் உதடுகள் லேசாய்ப் பிளந்திருக்க– அரவிந்தனையே பார்த்தாள்.

“கட்டிக்கிட்டுப் புறப்படுங்கம்மா.”

“அ...ர...வி...ந்...த...ன்” பேசத் திணறினாள்.

“சொல்லுங்கம்மா.”

“நீங்க கொஞ்சம் நிதானம் காட்டி இருக்கலாம்... அவசரப் பட்டுட்டீங்க.”

அரவிந்தன் கசப்பாய்ப் புன்னகை செய்தான். “இந்த அவசரம், நிதானமான அவசரம்மா. இவனை நேருக்கு நேர் எதிர்த்து தாக்கி உங்களைக் காப்பாத்த என்னால் முடியாது. அதான் இப்படி...”

குடையின் முனையைக் காட்டினான், அரவிந்தன். சிவப்பு பெயிண்டில் முக்கி எடுத்த மாதிரி கோபிநாத்தின் ரத்தத்தோடு அது தெரிந்தது. கார்த்திகா மறுபடியும் தன் பயம் கலந்த பார்வையை– ரத்தக் கொசகொசப்போடு பிணமாகக் கிடந்த கோபிநாத்தின் பக்கமாய்ப் போட்டாள்.

“எனக்குப் பயமா இருக்கு, அரவிந்தன்.”



“எதுக்கம்மா பயப்படுறீங்க? சேலையைக் கட்டிகிட்டுப் புறப்படுங்க.”

திடுக்கிட்டாள் கார்த்திகா.

“நான் புறப்படுறதா? அப்போ நீங்க?”

“போலீசில் போய்த் தகவல் சொல்லிட்டு...” பேசத் தொடங்கியவனைச் சட்டென்று இடைமறித்தாள், கார்த்திகா.

“போ... போலீசுக்கு போகப்போறீங்களா?”

“ஆமா.”

“எதுக்கு?”

“என்னம்மா இப்படிக் கேட்கிறீங்க? கொலை பண்ணி இருக்கேன். குற்றத்தை ஏத்துக்க வேண்டாமா?”

“குற்றத்தை ஒத்துக்கப் போறீங்களா?”

“ம்...”

“என்னான்னு சொல்லி?”

“எனக்கும், இவனுக்கும் ஏற்கெனவே ஒரு பகை இருக்கு. அதைக் காரணம் காட்டிக் குற்றத்தை ஒத்துக்கப்போறேன். நீங்க வீட்டுக்குப் போங்கம்மா. இந்தக் கொலை சம்மந்தமா உங்க பேர் வராம பார்த்துக்கிறேன்.”

அரவிந்தனையே பார்த்தாள், கார்த்திகா.

“என்னம்மா அப்படிப் பார்க்கிறீங்க?”

“என்ன அரவிந்தன்– நிலைமையைப் புரிஞ்சுகிட்டுப் பேசுறீங்களா? புரியாம பேசுறீங்களா? நீங்க போலீசில் சரணடைஞ்சா நாளைக்கு ராணியோட சிகிச்சைக்காக அவகூட அமெரிக்கா புறப்பட்டுப் போறது யாரு?”

அரவிந்தனின் முகம் மாறியது. நெற்றியில் கோடு படர– கவலைப்பட்டு கண்களில் பயமானான். திணறலான குரலில் சொன்னான்:

“எ...எனக்கு அ...அது...சுத்தமா மறந்துபோச்சம்மா. இப்ப என்ன பண்ணுறதுன்னே தெரியலைம்மா” அவனுடைய கண்களில் நீர் மல்கியது.

“நான் சொன்னபடி நீங்க கேட்பீங்களா அரவிந்தன்?”

“சொ...சொல்லுங்கம்மா.”

“மொதல்ல அந்த குளியலறைக்குப் போய்க் குடையைக் கழுவுங்க.”

“அம்மா...”

"ம்.. போங்க, நான் சொன்னதைச் செய்யுங்க."

"சரிம்மா."

இடப்பக்க மூலையிலிருந்த குளியலறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய்– சளசளவென்ற குழாய்த் தண்ணீரில் குடையில் படிந்திருந்த ரத்தத்தை கழுவிவிட்டு வந்தான், அரவிந்தன். சேலையைச் சுற்றிக்கொண்டு வெளியிலே காத்திருந்த கார்த்திகா அவனை ஏறிட்டாள்.

"நீங்க கொண்டுட்டுவந்த எதையும் விட்டுடலையே... நல்லா பார்த்துக்குங்க. பின்னாடி தொந்தரவாயிடும்."

"இல்லேம்மா... இந்தக் குடையோடுதான் வந்தேன்."

"சரி, வாங்க. வெளியே போகலாம். எதையும் தொடாமே வாங்க" கார்த்திகா சொல்லிக்கொண்டே அறைக் கதவை தாண்டின விநாடி–

டீபாயின் மேலிருந்த தொலைபேசி குரைக்கத் தொடங்கியது.

அரவிந்தன் நின்று– தொலைபேசியைப் பார்த்தான். கார்த்திகா மெலிதாய்க் கத்தினாள். "அதுபாட்டுக்கு அடிக்கட்டும். நீங்க பேசாம வாங்க, அரவிந்தன்."

தொலைபேசி கதறிக்கொண்டிருக்க–வேகமாய் வரவேற்பறையைத் தாண்டி– 'போர்டிகோ'வைத் தொட்டு– பெய்துகொண்டிருந்த மழையில் இறங்கினார்கள். மின்னல் கஞ்சத்தனமாய் வெளிச்சம் போட்டுக் காட்ட– தட்டுத் தடுமாறிக் வாயில் கதவைக் கடந்து சாலைக்கு வந்தார்கள்.

சாலை நெடுக ஒரு பொட்டு வெளிச்சமில்லை, மழையின் சிறலைத் தவிர– மற்றபடி அமைதி.

பெய்கிற மழையைப் பொருட்படுத்தாமல் வேகவேகமாய் நடந்தார்கள். மூச்சுவாங்க அரவிந்தன் கேட்டான்.

'அம்மா, அவனோட வீட்டுக்கு நீங்க எதுக்காக வந்தீங்க?"

முகத்தில் அடித்த மழையையும், தலைமுடியையும் ஒதுக்கிக்கொண்டே– திரும்பித் திரும்பி பார்த்தபடி மெல்லிய குரலில் கார்த்திகா எல்லாவற்றையும் சொன்னாள்.

"அப்போ, உங்க கார் இன்னமும் அதே இடத்தில்தான் நின்னுட்டிருக்கா?"

"ஆமா."

"மொதல்ல அங்கே போய்ப் பார்த்துடலாம். கார்ல என்ன கோளாறுன்னு சொன்னீங்கம்மா?"

"'பேன்பெல்ட்' அறுந்துடுச்சு. வேற 'பெல்ட்' வாங்கணும். இந்நேரத்துக்கு ஏதாவது திறந்திருக்குமா, அரவிந்தன்?"



"பக்கத்து தியேட்டருக்கு எதிர்ல எனக்குத் தெரிஞ்ச கடை ஒண்ணு இருக்கும்மா. கடையும், வீடும் ஒண்ணுதான். எந்நேரம் போனாலும் வாங்கிட்டு வந்துடலாம்."

"அப்படின்னா 'பேன் பெல்ட்' வாங்கிட்டே போயிடலாம், அரவிந்தன். அந்தத் தெரு முனைக்கு போனா ஆட்டோ கிடைக்கும்."

நடந்தார்கள்.

கார்த்திகா கேட்டாள்: "அந்த கோபிநாத் பங்களாவுக்குள்ளே நீங்க எப்படி வந்தீங்க அரவிந்தன் என்னாலே நம்பவே முடியலே."

"ராணிக்கு வேண்டிய ஒரு முக்கியமான மாத்திரையை வாங்குறதுக்காக புறப்பட்டேன்மா. நான் எப்பவும் மருந்து வாங்கற கடை இன்னிக்கு விடுமுறை. அதான் கோபிநாத்தோட வீட்டுப் பக்கமா இருக்கிற நாதன் மருந்துக்கடையில் வாங்கலாம்னு வந்தேன். நான் வரும்போது பங்களாவுக்குள்ளே கார் போச்சு. போர்டிகோவில் கார் நின்னதும் நீங்களும், கோபிநாத்தும் இறங்குறதைப் பார்த்தேன். எம்மனசுல 'சுருக்'ன்னு பட்டுச்சு.

ஏன்னா... கோபிநாத்தைப் பத்தி எனக்குத் தெரியும். அவன் ஒரு பக்கா பெண் பித்தன். நீங்க அவன்கூட வந்து இறங்கினதுமே ஏதோ தப்பா நடக்கப்போகுதுங்கிற முடிவுக்கு வந்துட்டேன். பங்களாவுக்குப் பின்பக்கமா போய் ஒரு ரெண்டு நிமிடம் நின்னு பார்த்தேன். ஜன்னல் வெளிச்சத்துல நீங்க நிழலுருவமா ஓடுறதும் தெரிஞ்சுச்சு– போடுற சத்தமும் கேட்டுச்சு. சுவரேறிக் குதிச்சு உள்ளே வந்தேன். கண்ணாடி ஜன்னலை உடைச்சு, ஹாலுக்குள்ளே புகுந்தேன்."

அரவிந்தனை நெகிழ்ச்சியோடு ஏறிட்டாள், கார்த்திகா. "என்னைக் காப்பாத்தற முயற்சியில நீங்க ஒரு ஆபத்துல மாட்டிகிட்டீங்களே, அரவிந்தன்? அந்த கோபிநாத்தை வேறுவிதமா தாக்கி, மயக்கத்துக்குக் கொண்டுபோய்– போலீசுக்குப் போன் பண்ணி இருக்கலாம். நீங்க ஒரு அயோக்கியனைத்தான் கொன்னுருக்கீங்க. ஆனால், போலீசும், கோர்ட்டும் இந்தக் கொலையை அந்தக் கோணத்துல பார்க்காது."

"நான் இப்போ என்னம்மா பண்ணணும்?"

"பேசாம இருந்துடணும். நீங்களோ, நானோ அந்தப் பங்களாவுக்குள்ளே போனது யாருக்கும் தெரியாது. இந்த மழை பெய்யற ராத்திரி நமக்கு சாதகமான ஒண்ணு, அரவிந்தன். நீங்க நாளைக்குக் காலையில ராணியைக் கூட்டிகிட்டு அமெரிக்கா போயிடப் போறீங்க நான் இந்த ராத்திரியிலே சாலிக்கிராமம் நடன நிகழ்ச்சிக்குப் போயிட்டுத் திரும்பிடுறேன். கோபிநாத்தோட கொலையைப் பத்திப் போலீஸ்

பலவிதமா குழம்பிக்கும். கொஞ்ச காலம் முயற்சி பண்ணிப் பார்த்துட்டு, பைலை 'குளோஸ்' பண்ணிடுவாங்க."

"போலீஸ் என்னை மோப்பம் பிடிச்சுட மாட்டாங்களாம்மா?"

"முடியாது" என்றாள், கார்த்திகா.

தெருமுனைக்கு வந்தபோது மழை கொஞ்சம் ஓய்ந்திருந்தது. 'கான்வாஸ்' படுதாக்களைப் போட்டுக்கொண்டு கோஷாப் பெண்களைப் போல் போய்க்கொண்டிருந்த இரண்டொரு 'ஆட்டோ'க்களை நிறுத்த முயல- டிரைவர்கள் 'வராது' என்கிற பாவனையில் கைகளை அசைத்துவிட்டுப் போனார்கள்.

"அந்த முனையில், ஒரு 'ஆட்டோ ஸ்டாண்ட்' இருக்கும்மா. அங்கே போனா 'ஆட்டோ' கிடைக்கும்."

"வாங்க, போலாம்."

நடந்தார்கள்.

கார்த்திகா கேட்டாள்: "உங்களுக்கும், கோபிநாத்துக்கும் ஏற்கெனவே ஏதோ ஒரு பகை இருந்ததா சொன்னீங்களே? அது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

அரவிந்தன் பதில் சொல்லாமல் மவுனமாய் நடந்து வந்தான்.

"உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா சொல்ல வேண்டாம்."

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா. உங்ககிட்டே நான் சொல்றேன். ஆனா, தயவுபண்ணி நான் இப்போ சொல்லப்போற விஷயத்தை வேற யார்கிட்டேயும் சொல்லிடாதீங்கம்மா."

"சொல்லமாட்டேன். சொல்லுங்க."

அரவிந்தன் மெல்லிய குரலில் சொன்னான்: "என்னோட மனைவி தேவிகா செத்து இன்னிக்கு எட்டு ஆண்டாகுதும்மா. அவளுக்கு சாவு இயற்கையா வரலை. அவளாவே தேடிகிட்ட சாவுதான், அது."

கார்த்திகா அதிர்ந்துபோய் பார்க்க- அரவிந்தன் தொடர்ந்தான். "கோபிநாத்தோட கம்பெனியில் என் மனைவி தேவிகா 'டைப்பிஸ்டா' வேலை பார்த்துக்கிட்டிருந்தா. அப்போது ராணிக்கு இரண்டு வயசு. எப்பவுமே கம்பெனியிலிருந்து ஆறு மணிக்கு வீடு திரும்பிடுவா, தேவிகா. அன்னிக்கு ராத்திரி எட்டு மணியாகியும் அவ வராம போகவே- ராணியை பக்கத்து வீட்டுல விட்டுட்டு தேவிகாவைத் தேடிக்கிட்டுக் கம்பெனிக்குப் போனேன். நான் போனபோது அவ கம்பெனி கேட்டிலிருந்து வெளியே வந்திட்டிருந்தா. தலையெல்லாம் கலைஞ்சு- நெத்திப் பொட்டு அழிஞ்சு- என்னமோ மாதிரி இருந்தா. நான் வழி பூராவும் காரணம் கேட்டுட்டு வரேன். அவ ஒண்ணுமே பேசலை. வீட்டுக்கு வந்ததும் பேசாம படுத்துக்கிட்டா. உடம்பு சரியில்லேன்னு அவ சொன்னதை நான் நம்பிட்டேன். மறுநாள்



காலையில கண்விழிச்சுப் பார்த்தப்போ தேவிகா செத்திருந்தா. பக்கத்துல ஒரு கடிதமும் இருந்தது. படிச்சுப் பார்த்தேன்.

கோபிநாத் அவளை நாசம் பண்ணிட்டதாகவும், அந்தக் கறைபட்ட உடம்போடு வாழ விரும்பாததினால் விஷம் குடித்துவிட்டதாகவும்- தான் கெட்டுப்போன விஷயம் வெளியே யாருக்கும் தெரியக்கூடாதுன்னும்- கோபிநாத்தைப் பழிவாங்கற முயற்சியிலே நான் ஈடுபட்டா ராணி அநாதை ஆயிடுவாள்னும் எழுதி வைச்சிருந்தா. அவ ஆசைப்பட்ட மாதிரியே நான் விஷயத்தை வெளியே சொல்லலை. தேவிகா நோயில் செத்துப்போயிட்டதா நான் சொன்ன பொய்யை எல்லாரும் நம்பினாங்க. குழந்தை ராணிக்காக கோபிநாத்தைப் பழிவாங்குற எண்ணத்தை விட்டுட்டேன். ஆனா, இன்னிக்கு எதிர்பாராதவிதமாக உங்களைக் காப்பாத்தறதுக்காக அவனை நான் கொன்னிருக்கேன்."

பெய்துகொண்டிருந்த அந்த மழையிலும் கார்த்திகாவின் கண்கள் நீரைச் சுறுசுறுவென்று சுரந்துவிட்டது. தழுதழுப்பான குரலில் கேட்டாள்:

"உங்களுக்கும், அவனுக்கும் இருந்த பகை வெளியே யாருக்கும் தெரியாதே?"

"யாருக்குமே தெரியாது."

அடுத்த தெருமுனைக்கு வந்தபோது-

அந்த ஆட்டோ நிறுத்தத்தில் ஒரு ஆட்டோ மட்டும் நின்றிருந்தது. டிரைவர் சொன்ன அநியாய வாடகைக்கு ஒத்துக்கொண்டு, இருவரும் ஆட்டோவில் ஏறினார்கள்.

'பேன் பெல்ட்'டை வாங்கிக்கொண்டு கார் நின்றிருந்த இடத்திற்கு அதே ஆட்டோவில் அரவிந்தனும், கார்த்திகாவும் வந்தபோது- வானம் தன் வாயைச் சாத்தி இருந்தது. மழை சுத்தமாய் நின்றுபோய்- மரங்களின் கிளைகளில் சிலீர் சிலீரென்று நீர் சொட்டிக்கொண்டிருந்தன.

ஆட்டோவை அனுப்பிவிட்டு- காரை நெருங்கினார்கள்.

"'பேன் பெல்ட்'டை நீங்களே மாட்டுவீங்களா அரவிந்தன்?"

"மாட்டிடலாம்மா."

'பெல்ட்'டைக் காகிதத்தில் இருந்து உருவியவன், "கார் சாவியைக் கொடுங்கம்மா" என்றான்.

கார் சாவிக்காக மார்பு பகுதியிலிருந்த கையளவு பர்ஸைத் தொட்டுப் பார்த்தாள். அதிர்ந்தாள்.

"என்னம்மா?"

"கார்ச் சாவி வைச்சிருந்த பர்ஸ்..."

"வைச்சிருந்த பர்ஸ்?"

"கோபிநாத்கிட்ட போராடிட்டிருந்தப்போ எகிறிக் கீழே விழுந்து..."

அரவிந்தன் பதற்றமானான்.

"அப்போ அந்தக் கார்ச் சாவியோடு பர்ஸ் இந்த நிமிடம் அங்கே இருக்கு."

"ஆமா."

"ஒரு பத்து நிமிடம் இங்கே காத்திருங்கம்மா. நான் போய் அந்தக் கார்ச் சாவியை கொண்டுவந்துடுறேன்."

வேகமாய்த் தலையை ஆட்டி மறுத்தாள், கார்த்திகா. "வேண்டாம் அரவிந்தன். போகாதீங்க. போனால் ஆபத்துல மாட்டிக்குவீங்க."

"போகாம இருந்தாத்தான்ம்மா ஆபத்து. சாவியில்லாம நீங்க காரைக் கிளப்ப முடியாது. இந்நேரம் அந்த வீட்டுக்கு யாரும் வந்திருக்கமாட்டாங்க. நான் பங்களாவுக்குப் பின்பக்கமா போயி... நிமிடத்துல எடுத்துட்டு வந்துடுறேன்."

"அப்படின்னா உங்கக்கூட நானும் வர்றேன்."

"வேண்டாம்மா. நீங்க இங்கேயே காத்திருங்க. நான் வேகமா ஓடுற அளவுக்கு உங்களாலே ஓட முடியாது. பத்தே நிமிடம்... நான் வந்துடுறேன்" சொல்லிக்கொண்டே- மழை நீரில் ஓடத் தொடங்கினான், அரவிந்தன்.

'த்துட்... த்துட்...' கார்த்திகாவின் இதயம் ராணுவ அணிவகுப்பில் அடிக்கப்படும் ஒற்றையடி 'பாண்ட்' வாத்தியமாய் அதிர்ந்து அடங்கியது.

மெல்ல காரின் 'பானெட்'டுக்கு சாய்ந்துகொள்ளத் திரும்பியவள் அதிர்ந்தாள்... வியர்த்தாள். காருக்குக் கொஞ்சம் தள்ளி- ஒரு மரத்துக்குக் கீழே ஒரு நெருப்புக் கண் தெரிந்தது. அசைந்தது.

உற்றுப் பார்த்தாள். சிகரெட்.

## 11

கார்த்திகாவின் இதயம், மின்சாரக் கம்பத்தில் மாட்டிக்கொண்ட காக்கையாய் ஒருமுறை உதறிக்கொண்டது.

மழைநீர் சொட்டிக்கொண்டிருக்கும் அந்த மரத்தடிக்குக் கீழே நின்றபடி சிகரெட் புகைக்கும் அந்த ஆசாமி யார்? கண்களைக் கொட்டி ஒருமுறை மரத்தடியை உற்றுப் பார்த்தாள்.



கரிக்கட்டையாய் தீற்றின மாதிரி நிழலுருவமாய் தெரிந்த அந்த உருவம் இப்போது லேசாய் அசைந்தது. அதனுடைய கையிலிருந்த சிகரெட்டின் சிவப்பான கண் முன்னோக்கி வரத் தொடங்கியது.

"த்துட்... த்துட்..."

நடந்து வந்த அந்த உருவத்தின் பூட்ஸ் அணிந்த கால்களுக்கு கீழே மழைநீர் சிதறியது. தன்னை நோக்கி மெதுவாய் வந்துகொண்டிருந்த அந்த உருவத்தையே விழிகள் விரியப் பார்த்துக்கொண்டு நின்றாள், கார்த்திகா.

அரை நிமிட நேரம்!

உருவம் அவளை வெகுவாய் நெருங்கி நின்றது. தன் கையிலிருந்த சிகரெட்டைப் பின்பக்கமாய் சுண்டியெறிந்துவிட்டு- அவளிடம் கேட்டது. கரகரப்பான குரல்.

"இது உங்க காராம்மா?"

கேட்ட அவனை ஏறிட்டுப் பார்த்தாள் கார்த்திகா. அந்த மெல்லிய இருட்டிலும் அவனுடைய திடகாத்திரம் தெரிந்தது. நல்ல உயரம். ஒட்ட வெட்டிய 'கிராப்'. மேலுதட்டுக்கு மேலே இருபது மி.மீ. அகலத்தில் ஆரோக்கியமான மீசை. அணிந்திருந்த உடையில் சில பாகங்களில் மழையின் ஈரம் திட்டுத் திட்டாய்த் தெரிந்தது.

"என்னம்மா, இது? உங்க காரான்னு கேட்டேன். பதில் சொல்ல இவ்வளவு நேரமா?" அவன் மறுபடியும் கேட்டான்.

"ஆ... ஆமா. என்னோட கார்தான்."

"கார் இங்கே ரொம்ப நேரமா நின்னுட்டிருக்கு போலிருக்கு?"

"ஆமா... ஒரு 'ரிப்பேர்'."

"என்னாச்சு காருக்கு?"

"பேன் பெல்ட்' அறுந்துடுச்சு."

"போய் வாங்கிட்டு வந்துட்டீங்க போலிருக்கு"

"ஆமா."

"மாட்ட வேண்டியதுதானே?"

"கார் சாவியை 'பெல்ட்' வாங்கின கடையிலே வைச்சுட்டு வந்துட்டேன். அதை எடுத்துட்டு வரத்தான் என்கூட வந்தவர் போயிருக்கார்."

"அவர் யாரு?"

"தெரிஞ்சவர்."

"உங்க பேரென்ன? நீங்க சென்னைதானே?"

கார்த்திகா அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல்

அவனையே பார்த்தாள்.

"என்ன பார்க்கிறீங்க?"

"நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

அவன் மெல்லச் சிரித்து, "போலீஸ். கிரைம்பிராஞ்ச்" என்றான். பாண்ட் பாக்கெட்டுக்குள் கையைவிட்டு அந்த போலீஸ் அடையாள அட்டையை எடுத்து கார்த்திகாவின் முகத்துக்கு முன் காட்டினான்.

"ராத்திரி நேரங்களில் இந்தப் பகுதியில் நிறைய வழிப்பறி நடக்கிறதா போலீஸ் துறைக்கு தகவல். ஒரு வாரமா ராத்திரி நேரங்களில் எனக்கு இங்கேதான் வேலை. அரை மணி நேரத்துக்கு முன்னாடி இந்தப் பக்கமா வந்தேன். கார் நின்னுட்டிருந்தது. அந்த தெருக்கோடி வரைக்கும் போயிட்டுத் திரும்பி வந்தப்பவும் கார் நின்னுட்டிருந்தது. இது யாரோட கார்ன்னு தெரிஞ்சுக்கிறதுக்காகவே பத்து நிமிடமா அந்த மரத்தடிக்குக் கீழே நின்னுட்டிருந்தேன்."

எதிரே நின்று பேசிக்கொண்டிருப்பவன் போலீஸ் என்று தெரிந்ததும், கார்த்திகாவின் உடம்புப் பூராவும் மொலுமொலுவென்று ஆயிரக்கணக்கான கம்பளிப்பூச்சிகள் ஊர்ந்தன. மழைக் காற்று முகத்தில் அடித்தாலும், முகம் பிடிவாதமாய் வியர்த்தது. வெளுத்தது.

அவன் சிரித்தான்.

"இப்ப சொல்லலாமே நீங்க யாருன்னு?"

"என் பேர் கார்த்திகா. நான் ஒரு நடன நிகழ்ச்சிக்காக சாலிக்கிராமம் போயிட்டிருந்தேன். அப்பத்தான் காரோட 'பேன் பெல்ட்' அறுந்துடுச்சு. என்ன பண்ணுறதுன்னு தெரியாமே தவிச்சுட்டு நின்னப்பதான் எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் வந்தார். அவரோடு கிளம்பிப் போய்த்தான் 'பேன் பெல்ட்' வாங்கிட்டு வந்தேன்."

"கார் சாவியை 'பெல்ட்' வாங்கின கடையிலேயே மறந்து வைச்சுட்டு வந்தீங்களா?"

"ஆமா."

"கடையோட பேரையும், முகவரியையும் சொன்னா நான் போய் விபரம் சொல்லி கார் சாவியை வாங்கிட்டு வந்துடுறேன். அதோ என்னோட 'பைக்'.

திணறினாள் கார்த்திகா. "வேண்டாம்! ரொம்ப நன்றி. இந்நேரம் அவரே கடைக்குப் போயிருப்பார். பத்து நிமிடத்திலே வந்துடுவார்."





"எங்கே திருவிழா நடந்தாலும் என் பெண்டாட்டியை கூட்டிட்டு போவேன்!

"அவ்வளவு பிரியமா?"

"அட! திருவிழாவில் காணாமல் போகமாட்டாளான்னு ஒரு நப்பாசைதான்!"

-ச.க. பழநிச்சாமி, அருப்புக்கோட்டை



"இந்த நேரத்தில் எங்கே போயிட்டு வர்றீங்க?"

"படம் பார்த்துட்டு வர்றேன்!"

-தூத்துக்குடி வீரமுடி.



"உங்க பேரை ஏன் கரப்பான்பூச்சின்னு மாத்திட்டீங்க?"

"என் மனைவி என்னைக் கண்டு பயப்படணும்னுதான்!"

-உதய், சென்னை.



ராணிமுத்து ஏப்ரல் 16, 2008.

# இதயம் பேசுகிறது!

## விறுவிறுப்பான நாவல்

தேவிபாலாவின் "உறவுப் பந்தயம்" நாவலில் இடம்பெ ஆண்டாள் கதாபாத்திரம் மிகவும் அருமை. பிரசாத் அண்ணியை அம்மாவாக நினைத்து பழகும்விதமும், அண் குடும்பத்துக்கு பிரச்சினை என்று வந்ததும் உதவும் குண பாராட்டத்தக்கவை.

**வி.விஜயலட்சுமி, புதுச்சே**

ஆண்டாள் போன்ற மாமியார்கள் இருந்தால் மாமியா மருமகள் சண்டையே வராது. நாவலின் 19 அத்தியாயங்களு படிக்க விறுவிறுப்பாக இருந்தன.

**கே.விஸ்வநாத், பெங்களூ**

"உறவுப் பந்தயம் "நாவல், "கிராமவாசி", "முரண்" சிறுகதை களும் "சூப்பர்."

**எஸ்.எல்.பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள்கோவி**

ஆண்டாளம்மா, சுமதி, பிரசாத், கல்பனா போன்ற நல்லவ களுக்கு மத்தியில் அன்னம்மா, மாணிக்கம் என்ற கெட்டவர்களு இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை "உறவுப் பந்தயம்" நாவ உணர்த்தியது.

**ப.ஞா.செல்வம், கண்டிரமாணிக்க**

நாவல் உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்திருந்தது உறவுச் சங்கிலியில் இருந்த தடைகளை உணர்வுப்பூர்வமாக அணுகி உடைத்தெறிந்த அருமையான கதைக்களம்.

கூட்டுக்குடும்பத்தில் பழகிவிட்ட ஒரு அபூர்வ அனுபவத்தை தேவிபாலா, நாவலாக வடித்தது வெகு சிறப்பு. மொத்தத்தில் "உறவுப் பந்தயம்" –அன்புக்கு கிடைத்த வெற்றி.

**பொன்.ராஜ்குமார், ஊத்தங்கால்.**

"ராணிமுத்து "ஆரோக்கிய வாழ்வின் சொத்து. மாதத்தில் இருமுறை வரும் முத்தான முத்து. மணிமுத்து.

**த. நஸ்ரீன் பாஷா, மங்களூர்.**

---

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை–600 007.**

---



"இந்த இடம் ரொம்பவும் மோசமானது. நீங்க இப்படித் தனியா நின்னுட்டிருக்கிறது கொஞ்சம்கூடச் சரியில்லை. அவர் கார் சாவியை எடுத்துட்டு வர்றவரைக்கும் நான் உங்களுக்குத் துணையா இருக்கேன்."

"வே... வேண்டாமே..." தயங்கித் தயங்கிச் சொன்னாள், கார்த்திகா.

"ஏன் வேண்டான்னு சொல்றீங்க?"

"உங்களுக்கு எதுக்குத் தொந்தரவு?"

"தொந்தரவா? என்னோட வேலையே இதுதானே! அவர் வர்றவரைக்கும் இருந்துட்டுப் போறேன். எனக்கொண்ணும் பிரச்சினையில்லை. ஒரு சிகரெட் பிடிக்கலாமா?"

"ம்..."

கார்த்திகா தலையாட்ட– அவன் 'கார் பானெட்'டுக்குத் தன்னுடைய முதுகை சாய்த்துக்கொண்டு சிகரெட் பாக்கெட்டையும், லைட்டரையும் எடுத்தான்.

அரவிந்தனுக்கு மூச்சுவாங்கியது. காற்றுக்காகத் தவித்த இரண்டு நுரையீரல்களின் ஓரப் பகுதிகளிலும் லேசாய் ஒரு இம்சை. சாலையோரங்களில் தேங்கியிருந்த மழைநீரைத் 'தபதப'வென்று மிதித்துக்கொண்டு– கோபிநாத்தின் பங்களாவை நோக்கி ஓடினான்.

குளிர்காற்று முகத்தில் அறைந்தது.

இன்னும் ஒரே திருப்பம்தான்! கோபிநாத் பங்களா வந்துவிடும்.

"ஹிஸ்–ஹிஸ்–ஹிஸ்" என்று வாய் நிறையச் சுவாதித்து– நெற்றியில் வழியும் வியர்வையைப் புறங்கையால் துடைத்துக்கொண்டு– அந்தத் திருப்பத்தைத் தாண்டினான்.

தாண்டினவன், லேசாய் அதிர்ந்தான்.

அந்தப் பகுதி முழுவதிலும் மின்சாரம் தவறியிருக்க– விளக்குகள் விதவைகளாகி இருந்தன. எந்தத் திசையிலும் ஒரு பொட்டு வெளிச்சமில்லை. இருட்டில் உட்கார்ந்திருந்த கோபிநாத்தின் பங்களாவை அடையாளம் வைத்துக்கொண்டு நெருங்கினான்.

தயக்கமாய் பங்களாவின் முன்புற கேட்டில் வந்து நின்றான்.

சுற்றிலும் சுவர்க் கோழிகளின் இரைச்சல். 'ரொய்ங்க் ரொய்ங்க்' என இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்க– மழை பெய்த

மகிழ்ச்சியில் எங்கிருந்தோ ஒரு தவளை 'மோர்சிங்' வாசித்த காற்று ஜில்லென்று அரவிந்தனை ஒற்றியெடுத்து, நாய்க்குட் மாதிரி மேலே புரண்டது.

இதயம் 'பக்பக்'கென்று அடித்துக்கொள்ள– 'காம்பவுண் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே காலடி எடுத்து வைத்தா

மனசுக்குள் ஒரு பயம் கனமாய் அசைந்தது. கோபிநாத்தி பிணம் கிடக்கும்– இந்த இருட்டான பங்களாவுக்குள் நுழைந்து 'எப்படி எந்த இடத்தில் கார் சாவியைத் தேடுவது?

காம்பவுண்டு கேட்டிலிருந்து– போர்டிகோ வரைக்கு தேங்கியிருந்த மழைத் தண்ணீரில் 'ச்சல ச்சல' என்று நடந் போர்டிகோ படியேறினான், அரவிந்தன்.

படி ஏற ஏறவே– போர்டிகோவில் நின்றிருந்த கோபிநாத்தின் காரைப் பார்த்ததுமே மனசுக்குள் ஒரு 'பளிச்' பிறந்தது. காரின் 'டாஷ் போர்டு'க்குள் ஒரு சிறிய டார்ச்சோ, தீப்பெட்டியோ இருக்கலாம். கிளறிப் பார்த்தால் என்ன? இந்த இருட்டை விரட்ட ஏதாவது வேண்டுமே?

காரின் முன்புறக் கதவைத் திறந்து– இருட்டில் இருக்கை மேல் கவிழ்ந்து– 'ஸ்டீரிங்'குக்குப் பக்கத்தில் இருந்த 'டாஷ் போர்டை'த் தொட்டான். இரண்டு விரல்களால் அதனுடைய மூடியைப் பற்றி இழுத்தான். 'டாஷ் போர்டு' கிளக் என்று திறக்க– உள்ளே கையை விட்டான். நான்கைந்து துண்டு வயர்கள்– காலாவதியான பாட்டரி செல்கள்– டேப்ரிகார்டர் கேசட்டுகள், ஒரு பால்பாயிண்டு பேனா– கையால் தடவி ஒவ்வொன்றாய் அடையாளம் பார்த்து விலக்கிக்கொண்டே வந்தவன், சட்டென்று நிதானித்தான்.

கையில் அது கிடைத்தது.

வழவழவென்று கண்ணாடி உடம்போடு– செவ்வகமாய்.

அரவிந்தனுக்குப் புரிந்தது.

சிகரெட் லைட்டர்.

போதும்– இது போதும்.

உற்சாகமாய் அதன் விளிம்பில் இருந்த 'சுவிட்ச்'சைத் தட்டினான்.

'ச்சட்'

ஒரு நீலநிறத் தீப்பொறியோடு– அந்த நெருப்புப் பிழம்பு மாம்பழ நிறத்தில் எழுந்து– காற்றில் ஒயிலாய் உடம்பை அசைத்து ஆடியது.



லைட்டரின் தீப்பிழம்போடு– காரினின்றும் கீழே இறங்கினான், அரவிந்தன். இருட்டுச் சாயம் லேசாய்க் கரைந்துபோயிருக்க– போர்டிகோ'வின் படிகள் நன்றாய் தெரிந்தன. மெதுவாய் நடந்து– படியேறி– வாசல் கதவின் மேல் கையை வைத்தான்.

கதவு ஒரு சின்ன 'கிரீச்'சோடு உள்ளே போனது. அறை முழுவதும் இருட்டு, தார் மாதிரி கொட்டிக் கிடக்க– 'லைட்டர்' உமிழ்ந்த வெளிச்சத்தில் சோபாக்களையும், நாற்காலிகளையும் அடையாளம் கண்டு– நகர்ந்து– நடு அறைக்கு வந்தான். விலாச் சுவர்களுக்கிடையே த்தளித்த இதயம் எக்கச்சக்கமான துடிப்பில் வேகவேகமாய் ரத்தத்தை இறைத்தது. உடம்பின் எல்லாப் பாகங்களிலும் 'சொதசொத'வென்று வியர்வை பெருகி வழிந்தது.

அரவிந்தன் அங்குல அங்குலமாய்க் கால்களைப் பெயர்த்து– படுக்கையறையை நெருங்கி– கதவைத் தள்ளினான். கதவு நழுவ– உள்ளே போனான்.

திறந்திருந்த ஜன்னல் வழியே வேகமாய்ப் பீறிட்டு வந்து, ஒரு கொத்தான ஈரக் காற்று– லைட்டரின் தீப்பிழம்பை அணைத்துவிட– மறுபடியும் அறையை இருட்டு நிரப்பியது.

லைட்டரை மீண்டும் உயிர்ப்பித்தான், அரவிந்தன். தீப்பிழம்பு லைட்டரின் விளிம்பில் ஒட்டிக்கொள்ள, இருட்டு கொஞ்சம் தள்ளி நின்றது.

நடந்தான்.

வெளிச்சம் முன்னால் தத்தித் தத்திப் போக– ஒரு வெளிச்சத் தத்தலில் குப்புறக் கிடந்த கோபிநாத்– ரத்தமாய்த் தெரிந்து மறைந்தான். இன்னொரு வெளிச்சத் தத்தலில்– கட்டில், கண்ணில்பட்டது.

நிதானமாய் சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்து– கோபிநாத் அருகே வந்து உட்கார்ந்தான். இடக்கையில் லைட்டரை ஏற்றிக்கொண்டு– வலக்கையினால் கோபிநாத்தை மெல்லப் புரட்டிப் பார்த்தான்.

அவனைச் சுற்றிலும் திவலை திவலைகளாய் ரத்தம் உறைந்துபோயிருக்க– கார்ச் சாவி எங்கேயாவது தட்டுப்படுகிறதா என்று உன்னிப்பாய் பார்த்தான்.

கார்ச் சாவி தட்டுப்பட மறுத்தது.

மெல்லஎழுந்து நின்று–லைட்டரை உயர்த்திப் பிடித்துக்கொண்டு– பார்வையை நாலாபக்கமும் போட்டு– அங்குலம் அங்குலமாய்த் தேடத் தொடங்கினான். கட்டிலின் பரப்பு– சுவரின் திட்டு– டீபாய்க்குக் கீழ்– கட்டிலுக்குக் கீழ்– டெலிபோன் ஸ்டாண்டுக்கு அடியில் மண்டியிட்டு எல்லாப் பக்கமும்– வெளிச்சத்தை நகர்த்தி

நகர்த்திப் பார்த்து– சேர்ந்தான்.

கார் சாவி எங்கே விழுந்திருக்கும்?

ஹாலில் விழுந்திருக்குமோ?

'போய் பார்த்துவிடலாம்' என்று தீர்மானித்து– கீழே மண்டியிட்டு உட்கார்ந்திருந்த அரவிந்தன் எழுந்தான். அடுத்த விநாடி–

அவனுடைய சட்டையை யாரோ பற்றி இழுத்த மாதிரியான உணர்வு.

அதிர்ந்துபோய்த் திரும்பினான்.

கட்டிலின் விளிம்பில் நீட்டியிருந்த அந்த இரும்புத் தகடு சட்டையை விளையாட்டாய் இழுத்துப் பிடித்திருந்தது. சட்டையை உருவிக்கொண்டு, புதிதாய் வியர்த்துப்போன முகத்தோடு ஹாலை நோக்கி நடந்தான்.

கார் சாவி கிடைக்குமா?

ஏறக்குறைய இருபது நிமிடத்தைச் செலவழித்திருந்தபோது அவனுடைய கால் பெருவிரலில்– மெத்தென்று எதுவோ தட்டுப்பட்டது.

ஆர்வமாய்க் குனிந்து எடுத்தான். வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்தான். ஒரு சின்ன மணிபர்ஸ். முட்டை வடிவத்தில் ஜிப்போடு தெரிய– பிரித்தான்.

உள்ளே–

கார் சாவி! மனசுக்குள் ஒரு மகிழ்ச்சி ஆரவாரம் கிளம்பிய அதேவிநாடி– எங்கோ போயிருந்த மின்சாரம் ஓடிவந்து 'போர்டிகோ' விளக்கையும், படுக்கையறை விளக்கையும் ஏற்றியது. லைட்டரை அணைத்துச் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்ட அரவிந்தன் வெளியே கிளம்புவதற்காக யத்தனித்த விநாடி–

போர்டிகோவில்–

'த்தட்... த்தட்... த்தட்'டென்று அந்த ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அரவிந்தன் சுவாசிக்கத் திணறினான். 'யாரோ வருகிறார்கள். ஓடு... ஓடு...' மூளை கட்டளையிட– உடம்பு 'எப்படி... எப்படி?' என்று கேட்டது. 'முன்பக்கம் ஓட முடியாது. பின்பக்கமாய் முயற்சி செய்து பார்.'

திரும்பினான்.

அந்தக் கண்ணாடி ஜன்னலின் உடைப்புத் தெரிந்தது.

முன்பு அவன் வந்த வழி.



கண்ணாடி ஜன்னலை நோக்கி மூச்சிரைத்துக்கொண்டு ஓடினான், அரவிந்தன். ஒரு நட்சத்திர வடிவ அளவில் உடைத்திருந்த கண்ணாடி ஜன்னலுக்குள் தலையை நுழைத்து– உடம்பை கொஞ்சம் கொஞ்சமாய் எம்பி– கீறிக்கொண்ட ரத்தக் காயங்களையும் பொருட்படுத்தாமல்– ஒரு மீன் மாதிரி வழுக்கிக்கொண்டு வெளியே போய் விழுந்தான்.

வெளியே காத்திருந்த காற்று அவனை அலம்ப– விழுந்தவன், எழுந்து பின்புறச் சுவரை நோக்கி ஓடி– முழங்கால் சிப்பி சுவரில் தேயத் தேய– மேலே ஏறி மறுபக்கம் 'தொம்' என்று குதித்து– கொட்டிக்கிடந்த இருட்டில் சாலையை நோக்கி ஓடினான்.

ஆட்டோவில் இருந்து கீழே இறங்கி, டிரைவருக்குக் காசு கொடுத்து அனுப்பிய புவனேஷ், ஆச்சரியப்பட்டுக்கொண்டே போர்டிகோ படியேறினான். 'போன் செய்தால் எடுக்க ஆள் இல்லை.'

'இவ்வளவு பெரிய மாளிகைக்கு காவலாளி இல்லை. முன்பக்கக் கதவு திறந்தே இருக்கிறது. கோபிநாத் உள்ளே இருப்பானா? மாட்டானா?' யோசித்துக்கொண்டே– படியேறி நின்றான். வலக்கையை உயர்த்தி– கதவின் மேற்புறம் அழைப்புமணியைத் தொட்டான்.

அது 'விர்ர்ர்' என்றது. உள்ளே எதிரொலித்தது.

'யாராவது வருகிறார்களா?' என்று எட்டிப் பார்த்தான்.

ஒரு நிமிடம் காத்திருந்து யாரும் வராமல் போகவே–

"கோபிநாத்..."

குரல் கொடுத்துக்கொண்டே காலை எடுத்து உள்ளே வைத்தான், புவனேஷ். வெளியே– காற்று பலமாயச் சீற தொடங்கி இருந்தது.

## 12

புவனேஷ் உள்ளே நுழைந்ததுமே காற்றில் வெளிப்புறக் கதவு படீரென அடித்துச் சாத்திக்கொள்ள– அதைப் பொருட்படுத்தாமல் உள்ளே போனான், அவன்.

ஹால் வந்ததுமே நின்றான். சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துக்கொண்டு, மெல்லக் குரல் கொடுத்தான்.

"கோபிநாத்..."

மவுனம்.

"கோபிநாத்..."

புவனேஷின் உடம்பு பூராவும் ஆச்சரியம் புரண்டது. 'இவ்வளவு பெரிய மாளிகையில் ஒரு வேலைக்காரி- வேலைக்காரன் கூடவா கிடையாது?'

யோசித்துக்கொண்டே ஹாலுக்குள் மெல்ல நடைவிட்டான். மாளிகைக்கு வெளியே காற்றின் சீற்றம் இப்போது அதிகப்பட்டிருந்தது.

'இவ்வளவு பெரிய மாளிகையில் எந்த அறையில் உட்கார்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறான் இந்தக் கோபிநாத்?' லேசாய் எரிச்சலாகி ஹால் நடுவே வந்து நின்றான்.

ஹாலின் மையத்திற்கு வந்ததும் வலப்பக்கமாய் வெளிச்சத்தோடு படுக்கையறை தென்படவும், மெல்லத் தலையை நீட்டி உள்ளே எட்டிப் பார்த்தான்.

பார்வை தரைக்கு வந்ததும்- முகம் மாறினான்.

'கீழே மல்லாந்து கிடப்பது யார்?'

குபீரென்று உள்ளே போனான். நான்கே எட்டில் கீழே கிடந்த கோபிநாத்தை நெருங்க, மூளைப் பிரதேசத்தின் முக்கியப் பாகங்களில் சின்னச் சின்ன பூகம்பங்கள்.

"கோபிநாத்..."

கால் மண்டியிட்டு உட்கார்ந்து, விறைத்துப்போக தொடங்கியிருந்த கோபிநாத்தின் உடம்பைத் தடவித் தடவித் தட்டினான். கோபிநாத்தின் மார்பிலும், வயிற்றிலும் கட்டி கட்டியாய் இளஞ்சிவப்பு நிறத்தில் உறைந்துபோயிருந்த ரத்தம், புவனேஷின் கை பூராவும் பிசுபிசுப்பாய் ஒட்டியது.

இரண்டு கைகளிலும் ஒட்டிக்கொண்ட ரத்தப் பிசுக்கோடு இதயம் தடதடவென்று அதிர எழுந்து நின்றான், புவனேஷ். அந்த அரை நிமிட நேரத்தில் உடம்பு வியர்த்து ஊற்றியிருந்தது.

இது எப்படி? யாருடைய வேலை?

கீழே கிடந்த கோபிநாத்தைப் பார்த்தான். மனசுக்குள் முதலில் தோன்றியிருந்த இரக்க உணர்ச்சி மறைந்துபோக, பயம் முதுகுத்தண்டில் ஏறியது, எட்டுக்கால் பூச்சியாய் ஊர்ந்தது.

என்ன செய்யலாம்?



போலீசுக்குப் போன் பண்ணலாமா? 'ம்... உடனே பண்ணு' மனம் உசுப்பிவிட, அறையின் மூலையிலிருந்த தொலைபேசியை நோக்கிப் போனான். தொலைபேசியைத் தொட்டு, ரிசீவரை எடுக்கப்போகும் விநாடியில் 'விருட்'டென்று கையை இழுத்துக்கொண்டான்.

மனசுக்குள் ஒரு பயப் பட்சி பறந்து பறந்து சொன்னது- புவனேஷ், யோசி. போலீசுக்குத் தகவல் சொன்னால்- விசாரணை என்கிற பேரில் வறுத்தெடுத்துவிடுவார்கள். நீ பேசாமல் நழுவிவிடு. நீ வந்த சுவடு யாருக்கும் தெரிய வேண்டாம். நாளைக்கு நீதிமன்றம், வழக்கு என்று உன்னால் அலைய முடியாது. உனக்கு வேண்டாம் இந்தத் தொல்லை.'

தொலைபேசி ரிசீவரினின்றும் மெல்லக் கையை விலக்கிக்கொண்ட புவனேஷ் பின்வாங்கினான். இரண்டு கைவிரல்களிலும் பிசுபிசுத்த ரத்தம், அதற்குள் காய்ந்து பொருக்குக் கட்டி, ஒரு கெட்ட வாடை வீசியது. பத்துப் பைசா பரப்பில் ஏழெட்டு ரத்தக் கறைகள் சட்டைப் பரப்பில் தீற்றல் தீற்றலாய்த் தெரிய- மூளை சொன்னது 'முட்டாளே! முதலில் இதைக் கழுவு'

புவனேஷ் சுற்றுமுற்றும் பார்த்து, குளியலறை எது என்று அடையாளம் கண்டு உள்ளே நுழைந்தான். தண்ணீருக்குள் கைகளைவிட்டு அலசித் தேய்த்து நிமிர்ந்த நிமிடம், குளியலறைக்கு வெளியே அந்தச் சத்தம் கேட்டது-

"சர்ர்க்... சர்ர்க்..."

யாரோ நடக்கும் சத்தம்.

புவனேசுக்கு உச்சந்தலை ரோமம் குத்திட்டு நின்றது. உடம்பு பூராவும் ரத்தம் கொஞ்சமாய் உறைந்துபோக, சுத்தம் செய்துகொள்ளும் முயற்சியை விட்டுவிட்டு மெதுவாய் நடந்து குளியலறை கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

படுக்கையறை வாசலில் ஆஜானுபாகுவாய் அந்த கூர்க்கா நின்றிருந்தான். கண்களில் அதிர்ச்சி வாங்கி கோபிநாத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தவன், குளியலறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு விருட்டென்று திரும்பினான்.

சட்டை பூராவும் ரத்தத் தெளிப்புகளோடும், கைவிரல்களில் ஈரமாய்ச் சொட்டிய ரத்த நீரோடும் வெளிப்பட்ட புவனேஷைப் பார்த்ததும் அவனுடைய மஞ்சளான முகம் வெளுத்தது.

"கூன்... கூன்..."

அலறிக்கொண்டே பின்னுக்கு ஓடி, படுக்கையறைக்கு வெளியே

வந்து கதவைப் படீரென்று அறைந்து சாத்தித் தாழிட்டான். கூர் புரிந்துகொண்ட விபரீதமான தப்பு மனசுக்கு உறைக்க, ஓடிப்போ கதவைத் தட்டினான், புவனேஷ். "ஏய் கூர்க்கா, தொற கத

வலது புஜத்தால் கதவை இடித்தான். "முட்டாளே! கொ செஞ்சது நானில்லை. கதவைத் திற."

கூர்க்கா வெளியே கூச்சல் போட்டு யார் யாரையோ கூப்பி சத்தம் தெளிவாய்க் கேட்டது. இரண்டு பேச்சுக் குரல்கள் நான்கா எட்டாகி- பதினாறாகி- பலவாகி-

பத்தே நிமிடம்-

ஹாலில் சளசளவென்று பேச்சுக் குரல்கள். கூர்க்காவின் கு பிரதானமாய்க் கேட்டது. "எட்டு மணி வேலைக்கு வந்தது சாப்பைப் பார்த்துச் சொல்லப் போனேன். சாப் தரையில் விழு செத்துக்கிடந்தாரு. கொலை செஞ்ச மனுஷன் குளியலறைக்கு பூந்து ரத்தத்தைக் கழுவிட்டிருந்தான். நான் தாப்பா போட்டு அவன் அரைகுறைத் தமிழில் சொல்லச் சொல்ல-

உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த புவனேசுக்கு மயக்க வரும் போலிருந்தது.

அடித்த மழையில் தெரு விளக்குகள் எல்லாமே கண்களை மூடியிருக்க- இருட்டில் ஓட்டமும், நடையுமா வந்துகொண்டிருந்தான், அரவிந்தன்.

கார்த்திகாவை அந்த இருட்டில் தனியாய் விட்டுவிட்டு வந்ததில் மனசு பூராவும் பேயாய் அடித்துக்கொண்டது.

"இதோ ஆயிற்று; அடுத்தத் தெருவுக்கு அடுத்த தெருதான்" வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே- வியர்த்த முகத்தைத் துடைக்கக்கூடத் தோன்றாமல்- உடம்பு பூராவும் பதற்றத்தோடு நடைபோட்டான். 'எம்பொண்ணுக்கு உயிர் கொடுத்த அந்தப் புண்ணியவதிக்கு எந்த ஆபத்துமே வரக்கூடாது மாங்காட்டுத் தாயே!' உதடுகள் இயந்திரத்தனமாய் உச்சரிக்க, கால்கள் வேகமாய் ஓடின.

பத்தாவது நிமிடம்-

கார்த்திகாவின் கார் நின்றிருந்த தெருவுக்குள் அரவிந்தன் நுழைந்தான். நூறடி தொலைவில் வரும்போதே அந்த வித்தியாசம் கண்ணுக்குச் சிக்கியது.

இருட்டின் கறுப்புப் பின்னணியில் அந்தச் சிகரெட் நெருப்புக் கண்ணோடு தெரிய, 'பானட்'டுக்குச் சாய்ந்தபடி... யார் அவன்?



நடையை நிதானித்தான் அரவிந்தன். கண்களுக்குக் கூடுதலான உன்னிப்பைக் கொடுத்து, உற்றுப் பார்த்தான். உருவம் சரியாகப் புலப்படாமல் தயங்கித் தயங்கிக் காரை அவன் நெருங்க, கார்த்திகா ஆர்வமாய் முன்னால் ஓடிவந்தாள்.

"அரவிந்தன்..."

"அம்மா..."

"சாவி கிடைச்சுதா?"

"கிடைச்சுதம்மா."

"சாவி நாம 'பெல்ட்' வாங்கின கடையில்தானே இருந்தது?" கார்த்திகா குரலை இழுத்த மாதிரிக் கேட்கவும், ஒரு விநாடி திகைப்புக்குப் போய் மறுவிநாடியே இயல்பான குரலுக்கு வந்தான், அரவிந்தன்.

"ஆமாம்மா... அங்கதான் இருந்தது. கடைக்காரரே எடுத்து வைச்சிருந்தார்" சொல்லிக்கொண்டே அந்தச் சின்ன பர்ஸை எடுத்து நீட்டினான்.

'நன்றி கடவுளே.'

கார்த்திகா பரவசித்து வாங்கிக்கொள்ள, அரவிந்தன் கேட்டான்: "அது யாரம்மா, கார்கிட்டே நிக்கறது?"

"வாங்க சொல்றேன்" என்று கார் அருகே கூட்டிப்போனவள் மெல்லிய குரலில், "அரவிந்தன், இவர் கிரைம்பிராஞ்சு போலீஸ்காரர். இந்தப் பக்கமா ரோந்து வந்தவர், நான் தனியாய் நின்னுட்டிருந்ததைப் பார்த்ததும்- என்னோட பாதுகாப்புக்காக இங்கே இருந்துட்டார்" என்றாள்.

அரவிந்தன் கை குவித்தான், "ரொம்ப நன்றி சார்."

"எதுக்கு? நான் புறப்படறேன்மா. சாவியும் வந்தாச்சு. ஆளும் வந்தாச்சு. இனிமே ஒரு பிரச்சினையும் இருக்காதே?"

"இருக்காது."

"சரி... நான் வர்றேம்மா. வர்றேன் மிஸ்டர்" சொன்ன கிரைம்பிராஞ்சு ஆசாமி மரத்தடி இருட்டில் நிறுத்தியிருந்த 'பைக்'கை நோக்கிப் போனான்.

அவன் பைக்கில் தடதடத்து, எதிர்த்திசையில் புறப்பட்டுப் போகும்வரை காத்திருந்த கார்த்திகா, அவன் போனதும் தன் நெஞ்சில் கை வைத்து ஒரு மகிழ்ச்சி பெருமூச்சுவிட்டாள். "தப்பிச்சோம்" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

அரவிந்தன் கேட்டான், "என்னம்மா கேட்டான் அந்த ஆளு?"





கார்த்திகா நிமிட நேரத்துக்குள் நடந்ததைச் சொன்னாள். அவள் சொல்லச் சொல்ல கார் பானெட்டைத் திறந்து 'பேன் பெல்ட்'டை மாட்டிவிட்டிருந்தான், அரவிந்தன்.

"அந்த ஆளுக்கு நம்ம மேலே சந்தேகம் ஒண்ணும் வரலையேம்மா?"

"ஊகூம்..."

காரின் 'பானெட்'டை மூடிவிட்டு, இருவரும் காருக்குள் ஏறினார்கள். இக்னீஷியனை உசுப்பிக்கொண்டே கார்த்திகா கேட்டாள்.

"கார் சாவி சுலபத்துலே கிடைச்சுதா?"

"இல்லீங்கம்மா. 'கரண்ட்' வேற இல்லாமே ரொம்பவும் திணறிப்போயிட்டேன். பிணம் கிடக்கிற பங்களாவிலே, தார் பூசின மாதிரியான இருட்டில கார் சாவியைத் தேடுறது அவ்வளவு லகுவாத் தெரியலை. ஹால் பக்கமா வர்றப்ப கால்ல தட்டுப்பட்டுச்சு. சாவி கைக்குக் கிடைச்ச நிமிடம் கரெண்டும் வந்துடுச்சு."

கார் வேகம் பிடித்து மழை பெய்து ஈரமாயிருந்த சாலைகளை அரைத்தது. அரவிந்தன் தொடர்ந்து சொன்னான்: ஒரு ரெண்டு நிமிடம் தாமதமாயிருந்தாலும் நான் வேற ஒரு சிக்கல்ல மாட்டி இருப்பேன்ம்மா."

"என்னாச்சு?" பதற்றக் குரலில் கேட்டாள், கார்த்திகா.

"மின்சாரம் வந்து விளக்கு எரிஞ்ச நிமிடம்,'பங்களா வாசல்ல ஒரு ஆட்டோ வந்து நிக்கிற சத்தம்... எனக்கு என்ன பண்ணுறதுன்னே தெரியலை. முன்பக்கமாப் போகமுடியாது. வேற வழி இல்லாமே– நான் உடைச்ச கண்ணாடி ஜன்னல் வழியாவே வெளியே வந்து, பின்பக்கச் சுவத்தைத் தாண்டிக் குதிச்சேன்."

"ஆட்டோவில் வந்தது யார்?"

"நான் பார்க்கலைம்மா. பார்க்கவும் அவகாசம் இல்லே."

"அப்போ– நீங்க சொல்றதைப் பார்த்தால் போலீசுக்கு இந்நேரம் தகவல் போயிருக்கும்."

"இருக்கலாம்."

"இனிமேதான் நீங்களும், நானும் ஜாக்கிரதையா இருக்கணும். எந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, விஷயம் வெளியே வரவே கூடாது."

"வராதும்மா."

"நன்றி. நான் உங்களை எங்கே இறக்கிவிடட்டும்?"

"இந்த ரோட்டு கடைசியில் எறக்கிவிடுங்கம்மா, போதும்."

"நாளைக்குக் காலையில எத்தனை மணிக்கு விமான நிலை... போகணும்?"

"ஆறு மணி."

"நீங்க காரைவிட்டு இறங்கினதுமே அந்தக் கோபிநாத்... மறந்துடணும். குழந்தை ராணியோட ஞாபகமு... அமெரிக்காவுக்குப் போய் சிகிச்சை எடுக்கிற ஏற்பாடும்தா... உங்க மனசுல இருக்கணும். நீங்க ஒரு மனுஷனைக் கொல்ல... மிருகத்தைத்தான் கொன்னிருக்கீங்க."

பதில் பேசமுடியாமல் அரவிந்தன் தலையாட்டினான்.

கார் தெரு முனையில் போய் நின்றது.

"நான் சாலிக்கிராமம் கோவில் விழாவுல நடனம் ஆடிவி... வீட்டுக்குத் திரும்ப எப்படியும் ராத்திரி ஒரு மணியாயிடு... அரவிந்தன். என்னோட கடைசி நிகழ்ச்சி இதுதான். ஒருவே... விடிய விடிய ஆடினாலும் ஆடுவேன். கால்ல கட்டியிருக்... சலங்கையோட ஒவ்வொரு மணியும்- தெறிச்சு சிதர்கிற அளவுக்... ஆடணும்ங்கிற வெறி எம்மனசுல இருக்கு."

"அம்மா..." அவனுடைய குரல் தழுதழுத்தது.

"அரவிந்தன், நாளைக்குக் காலை விமான நிலையத்துக்... என்னால் வரமுடியாது. குழந்தை ராணிக்கு இந்த ஆன்ட்டியோ... இனிய முத்தங்கள். போயிட்டுப் பத்திரமா வாங்க. அமெரிக்காவி... சிகிச்சை முடிஞ்சதும் என்கூட போனில் பேசுங்க."

"பேசுறேன்மா."

அரவிந்தன் இறங்கிக்கொள்ள, கார் வேகமாய் நகர்ந்தது- சாலிக்கிராமத்தை நோக்கி.

**கோ**பிநாத்தின் பங்களா, ராத்திரி ஒன்பது மணி.

போலீஸ் 'ஜீப்'பொன்று போர்டிகோவில் சாதுவாய் நின்றிருக்க... மாளிகை பூராவும் காக்கி சீருடைகள் பரவி இருந்தார்கள். இருந்த... இடத்திலிருந்து கோபிநாத்தை ஓர் அங்குலம்கூட நகர்த்திப்... போடாமல் புகைப்படக் கலைஞர் ஒருவர் எட்டுத் திசையிலும் சுற்றி... சுற்றி வந்து 'பிளாஷ்' அடித்து பிலிமைத் தின்றுகொண்டிருந்தார். ஒருவர் ரசாயனப்பொடியைத் தூவிக்கொண்டிருந்தார்.

பங்களாவின் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிய, போலீஸ் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் ஒவ்வொரு அறையாய் புகுந்தார். சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷ், அவருக்குப் பின்னால் தொடர்ந்தார்.



"அவினாஷ்..."

"சார்..."

"பிடிச்சு வைச்சிருக்கிற அந்த ஆள் பேரென்ன?"

"புவனேஷ்."

"விசாரிச்சீங்களா?"

"இன்னும் இல்லை சார்."

"ஆள் எங்கே இருக்கான்?"

"பக்கத்து அறையில உட்கார்த்தி வைச்சு இருக்கேன் சார்."

"வாங்க, ஆளைத் தட்டிப் பார்க்கலாம்."

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் பக்கத்து அறைக்குள் நுழைய, ஏராளமாய்க் கலைந்துபோய் உட்கார்ந்திருந்த புவனேஷ் எழுந்து நின்றான். கண்களில் கனமாய் நீர் பளபளத்தது.

"உம் பேரென்ன?" நவநீதகிருஷ்ணன் குரலில் ஒரு கடுமை தெரிந்தது.

"புவனேஷ்" அவன் குரல் கம்மி இருந்தது.

"இதே ஊரா?"

"ஆமா."

"கோபிநாத்தை இப்படிக் குத்திக் கொன்னிருக்கியே... எதாலே குத்திக் கொன்னே? அந்த ஆயுதத்தை எங்கே மறைச்சு வைச்சிருக்கே?"

புவனேஷ் பொடிப் பொடியாய் இடிந்தான்.

## 13

**மு**த்து முத்தாய் வியர்த்துப்போயிருந்த முகத்தில்- பயம் தேங்கியிருந்த கண்களில்- புவனேஷ் மிரண்டான். பொறிக்குள் மாட்டிக்கொண்ட எலியின் தவிப்பு உடம்பு பூராவும் தொற்றியிருந்தது. எதிரே நின்று தன்னுடைய 'லேசர்' பார்வையால் அவனையே ஊடுருவிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனைப் பலவீனமாய் ஏறிட்டான். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டு பிடிவாதம் பிடித்தது. குரல் ஏகப்பட்ட பிசிர்களோடு தெறித்தது.

"கோ...கோபிநாத்தை- நா...நான்... கொ...கொலை செய்யலை சார்! எங்க தொழிற்சாலைகள் அமைப்பு தலைவர் பதவி சம்பந்தமா

அவரைப் பார்த்துப் பேச வந்தேன்."

ஆள் கொஞ்சம் பெரிய இடம் என்று தெரிந்ததும் இன்ஸ்பெ ஒருமையிலிருந்து பன்மைக்குத் தாவினார்.

"நீங்க கொலை செய்யலைன்னா வேற யார் செஞ்சாங்க

"எனக்குத் தெரியலை."

"இதோ பாருங்க புவனேஷ்... போலீஸ்கிட்டே பொய் பே பிரயோஜனமில்லை. நீங்க குளியலறையில் புகுந்து, உங்க மே பட்டிருந்த ரத்தக் கறையைக் கழுவிச் சுத்தம் பண்ணிட்டிருந்தீங்க இல்லையா?"

"ஆமா."

"நீங்க கொலை செய்யலைன்னா உங்க மேலே எப்படி ரத்தக்க படியும்?"

"கீழே விழுந்து கிடந்த கோபிநாத்தைப் புரட்டிப் பார்த்தேன் அந்த நேரத்துலே அவர் உடம்பிலிருந்த ரத்தம் எம்மேல பட்டு

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். "கோபிநாத் கொலையான தெரிஞ்சதுமே உடனடியா போலீசுக்கு ஏன் நீங்க தகவ சொல்லலை? அதைவிட முக்கியமான காரியமா நினைச் குளியலறைக்குப் போய் ரத்தக் கறையைக் கழுவி இருக்கீங்க?"

புவனேஷ் பேசத் திணறினான்.

நவநீதகிருஷ்ணன் தொடர்ந்து கேட்டார்:

"கோபிநாத் உங்களுக்கு நண்பரா?"

"ஆமா."

"எந்த வகையில?"

"தொழில்ரீதியா."

"ரெண்டு பேருக்குமே ஒரே தொழிலா?"

"ஆமா."

"இந்த வீட்டுக்கு அடிக்கடி வருவீங்களா?"

"ஊகூம்... இதான் முதல் தடவை."

"இந்த மழை பெய்யற ராத்திரியில அவரை எதுக்காகப் பார்க்க வந்தீங்கன்னு சொல்ல முடியுமா?"

புவனேஷ் உதட்டை ஈரப்படுத்திக்கொண்டு திக்கித்திணறுகிற குரலில் சொன்னான்: "தலைவர் பதவிக்கு ஓட்டு சேகரிக்கிறதுக்காக சில உறுப்பினர்களைப் பார்க்க போகலாம்னு கோபிநாத் என்கிட்டே சொல்லி இருந்தார். அந்த விஷயமாத்தான் அவரைப் பார்க்க



வந்தேன். கதவு திறந்து கிடந்தது. குரல் கொடுத்துக்கிட்டே உள்ளே வந்தேன். வரவேற்பு அறையிலேயும், ஹாலிலேயும் யாரும் இல்லை. கடைசியா படுக்கையறைக்கு வந்தேன். கோபிநாத் கீழே கிடந்தார். பக்கத்துல போய் அவரைப் புரட்டிப் பார்த்தேன்... ரத்தத்துலே மிதந்துட்டிருந்த அவரைப் பார்த்ததும் பயந்துட்டேன்.

போலீசுக்குப் போன் பண்ணினா நான் யாருங்கிற விபரத்தைச் சொல்லணும்... போலீஸ் வரவரைக்கும் சம்பவ இடத்தில் இருக்கணும்... நாளைக்குப் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுன்னு தொழிலை விட்டுட்டு அலையணும்னு நினைச்சு... ரத்தக் கறையைக் கழுவிக்கிட்டுப் புறப்பட நினைச்சேன். அப்பத்தான் வேலைக்கு வந்த கூர்க்கா என்னைப் பார்த்துட்டு– நான்தான் கொலை பண்ணி இருப்பேன்னு நினைச்சு– கதவைச் சாத்திச் சத்தம் போட்டு, கூட்டத்தைக் கூட்டிட்டான்."

"கூர்க்கா சொன்னது தப்புன்னு சொல்ல வர்றீங்களா?"

"ஆமா."

"கொலை செஞ்சு மாட்டிக்கிட்ட பின்னாடி நீங்க சொல்ற புதுக்கதையா நான் ஏன் இதை எடுத்துக்கக்கூடாது?"

"இல்லை இன்ஸ்பெக்டர்... நான் கோபிநாத்தைக் கொலை செய்யலை" புவனேஷ் கத்தலாய்ச் சொல்ல– நவநீதகிருஷ்ணன் புன்னகைத்தார்.

"உங்ககிட்டே இருந்து உண்மையை எப்படி வரவழைக்கணும்னு எங்களுக்குத் தெரியும் புவனேஷ். இப்போ ஸ்டேஷனுக்குப் போகலாம், வர்றீங்களா?"

"என்னை புரிஞ்சுக்கோங்க இன்ஸ்பெக்டர். சத்தியமா நான் செய்யலை."

"இதை நீங்க சொல்லவேண்டிய இடம் நீதிமன்றம். இந்த நிமிடம் போகவேண்டிய இடம் லாக்கப்... வர்றீங்களா?"

"இல்லை."

தலையாட்டிக்கொண்டே– புவனேஷ் பின்வாங்க– நவநீதகிருஷ்ணன் சொன்னார்:

"ஒரு தொழிற்சாலைக்கு இயக்குநரா இருக்கீங்களேங்கிற ஒரேயொரு காரணத்துக்காக உங்ககிட்டே கொஞ்சம் மரியாதை காட்டிப் பேசிட்டிருக்கேன். அந்த மரியாதை கெடுறதுக்கு முன்னாடி நீங்களாவே போய்ப் போலீஸ் ஜீப்புலே ஏறிக்கிறது நல்லது."

கன்னத்தில் அறை விழுந்த மாதிரியான உணர்ச்சியில் தத்தளித்துப்போன புவனேஷ், கலங்கின விழிகளோடு வாசலை

நோக்கி நடந்தான். அவனுக்கு இரு பக்கமும் இரண்டு காவலர்க வர– ஜீப்பைச் சமீபித்தான். ஏறி உள்ளே போனான்.

அந்த நேரத்திலும்– வாசலிலும்– சாலையிலும் பரவியிருந் கும்பல் குபீரென்று ஜீப்பை மொய்த்துக்கொண்டு புவனேஷை வேடிக்கைப் பார்க்க தொடங்கியது.

"கூர்க்கா பார்க்காம இருந்திருந்தா தப்பிச்சு ஓடியிருப்பான்"

"கூர்க்காவையும் குத்தப் பார்த்தானாம்."

"ஒரு அடி நீள பிச்சுவா வைச்சிருந்தானாம்."

"சட்டையைப் பாரு... எத்தினி ரத்தம்?"

நாலா பக்கங்களிலும் பேச்சுக் குரல் கிளம்ப– இன்ஸ்பெக்ட நவநீதகிருஷ்ணன் வேகவேகமாய் வந்தார்.

கூட்டம் கலைந்தது.

நவநீதகிருஷ்ணன் ஜீப்பில் ஏறிக்கொண்டதும், டிரைவர் ஜீப்பை நகர்த்தினார்.

நடன நிகழ்ச்சி முடிந்தபோது– நேரம், இரண்டு மணியைத் தாண்டியிருந்தது. கார்த்திகாவின் நிகழ்ச்சிக்குக் கட்டுப்பட்டு வாய் பொத்தியிருந்த வானம், நிகழ்ச்சி முடிந்ததும் மறுபடியும் வாயைத் திறந்து கொட்டத் தொடங்கியது.

கார்த்திகாவிடம் வந்தார், கோவில் தர்மகர்த்தா.

"காட்டுத்தனமா மழையடிக்குது... எப்படிம்மா காரை ஓட்டிட்டுப் போவீங்க? நம்ம வீட்டுலே தங்கிட்டு, பொழுது விடிஞ்சதுமே போயிடலாம்மா."

அவர் சொல்லச் சொல்ல– கோவில் பிரகாரத்தில் சாடிக்கொண்டிருந்த மழையைப் பார்த்தாள், கார்த்திகா. ஊரில் இருக்கிற ஏறி– குளங்களை நிரப்பாமல் ஓயமாட்டேன் என்பது போல் பிடிவாதமான மழை. சீக்கிரம் நிற்கும் என்று தோன்றவில்லை.

தர்மகர்த்தாவை ஏறிட்டாள்.

"இங்கே எங்கேயாவது போன் இருக்குமா?"

"உங்க வீட்டுக்காரருக்கு விஷயத்தைச் சொல்லணும். அவ்வளவுதானே?"

"ஆமா."

"வாங்க. நம்ம வீட்டுக்கு எதிர்த்தாப்புல ஒரு சலூன் கடை வாசல்ல காசு போட்டு பேசற 'போன்' இருக்கு. அங்கே பேசிக்கலாம்."

தலையாட்டினாள் கார்த்திகா.



ஒருவர் பெட்டியை எடுத்துக்கொள்ள– இன்னொருவர் நாசூக்காய் அவள் மேல் மழைச்சாரல் படாமல் குடையைப் பிடிக்க– கோவில் வாசலில் நின்றிருந்த தன் காருக்குள் போனாள். தர்மகர்த்தா பின் இருக்கையில் ஏறிக்கொண்டார்.

"வீடு ரொம்பத் தூரமா?" கார்த்திகா கேட்டாள்.

"இல்லேம்மா. அடுத்தத் தெருதான். கடைசியில நம்ம வீடு."

வைப்பரை இயக்கிக் காரை நகர்த்தினாள், கார்த்திகா.

தர்மகர்த்தா சொன்னார்: "இன்னிக்கு உங்க நடனம் அற்புதமா அமைஞ்சுடுச்சிம்மா. உட்கார்ந்து பார்த்துட்டிருந்த ஜனத்துல ஒரு ஜனம் அசையணுமே..."

"அடுத்த ரோட்லதானே திரும்பணும்?"

"ஆமாம்மா."

சாலையில் தேங்கியிருந்த சாலையில் அந்த மழைநீரை வகுந்துகொண்டு சீறி அடுத்த சாலையில் திரும்பியது கார்.

"அதுவும் அந்தக் கடைசி நடனம் சக்தி தாண்டவம். ஆடுறப்ப சாட்சாத் அந்தப் பார்வதி தேவியே ஆடுற மாதிரி என்ன தத்ரூபம்? அந்த ஊழிக்கால ஆவேசம்.. உடம்பே புல்லரிச்சு போச்சும்மா. அந்த விளக்குக் கம்பத்துக்குப் பக்கத்துல தெரியுதே ஒரு மெத்தை வீடு– அந்த வீடுதாம்மா. மெதுவா போய் காரை நிப்பாட்டுங்கம்மா."

அவர் சொன்னபடியே காரை நிறுத்தினாள், கார்த்திகா.

வீட்டுக்கு நேர் எதிரே சலூன் தொலைபேசி தெரிந்தது.

ஒரு ரூபாய் நாணயமொன்றை பர்சிலிருந்து எடுத்துக்கொண்டு– மழையில் நனைந்துகொண்டே தொலைபேசியை நோக்கிப் போனாள், கார்த்திகா.

ரிசீவரைக் கையிலெடுத்து காதுக்குக் கொடுத்தாள். தன் வீட்டு தொலைபேசி எண்ணைச் சுழற்றினாள். இணைப்பு கிடைக்கவில்லை. மறுபடியும் சுழற்றினாள்.

மீண்டும் முயன்றாள்.

கரகரவென்று கல்லை யாரோ மென்று சாப்பிடுவது போன்ற 'கரகர' சத்தம்.

ஏறக்குறையப் பதினைந்து நிமிடம். டயலைச் சுழற்றிச் சுழற்றி ஆட்காட்டி விரலே மரத்துப்போயிற்று, கார்த்திகாவுக்கு.

தர்மகர்த்தா அருகே வந்து நின்றார். "வெயில் அடிக்கிற நேரத்திலேயே போன் சரியா வேலை செய்யாது. மழை நேரத்திலாம்மா வேலை செய்யும்?"

ரிசீவரை எரிச்சலோடு தொங்கவிட்டாள், கார்த்திகா. "பெய்யற

மழையைப் பத்தி உங்க வீட்டுக்காரருக்கும் தெரியுமேம்மா... வீணா அவர் கவலைப்பட்டு இருக்கமாட்டார். நீங்க வந்து ஓய்வு எடுங்கம்மா. பொழுது விடியப் போகலாம்."

அவரைப் பின்தொடர்ந்து போனாள், கார்த்திகா.

**உ**திக்கப்போகிற சூரியனுக்குப் பயந்து மேகங்கள் ஓட்டம்பிடிக்க வானம் சிவப்பாகி இருந்தது.

சாலிக்கிராமத்தைவிட்டு வீட்டை நோக்கி காரை விரட்டிக் கொண்டிருந்தாள், கார்த்திகா.

திடீரென்று கார்த்திகாவுக்கு அந்தச் சந்தேகம் வந்தது.

"அரவிந்தன், குழந்தை ராணியோடு அமெரிக்கா புறப்பட்டுப் போயிருப்பாரா?'

'மாட்டாரா?'

'எதற்கும் பார்த்துவிட்டே வீட்டுக்குப் போவோம்."

காரை எழும்பூர் நெடுஞ்சாலையை நோக்கித் திருப்பினாள். பத்தாவது நிமிடம்– மார்ஷல் சாலையும் அரவிந்தனின் குடியிருப்பும் வந்தன.

காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினாள். குடியிருப்பின் வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த அந்த நடுத்தர வயது பெண்மணி கார்த்திகாவை ஏறிட்டாள்.

"எங்கேம்மா போறே... அந்தக் குழந்தை ராணியைப் பார்க்கவா?"

"ம்..." தலையாட்டினாள்.

"காலையில அஞ்சு மணிக்கெல்லாம் ராணியும், அரவிந்தனும் விமான நிலையத்துக்குப் போயிட்டாங்கம்மா. இந்நேரம் விமானத்துல பறந்துட்டிருப்பாங்க."

மனசுக்கு நிம்மதியாய் இருந்தது, கார்த்திகாவுக்கு. அந்த அம்மாளுக்கு ஒரு புன்னகையைப் பதிலாகக் கொடுத்துவிட்டு காருக்குள் ஏறினாள்.

'இனிமேல் பிரச்சினையில்லை.'

காருக்குக் கீழே சாலையை வேகமாய் நழுவவிட்டு– வீட்டின் சுற்றுச்சுவர் வாசல் அருகே வந்தபோது நேரம் 6.15. காரைச் செலுத்தினவள் ஒரு 'குபீர்' அதிர்ச்சிக்குப் போனாள்.

போர்டிகோவில் போலீஸ் ஜீப்பின் முகம் தெரிந்தது. மாளிகையின் ஹாலில் காக்கி சீருடைகளின் அசைவு தெரிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாய், குடும்ப வக்கீல் பார்த்தசாரதியின் கவலையான முகம். போர்டிகோவில் நின்றிருந்தவர்– கார்த்திகாவின் காரைப் பார்த்ததும் வேகவேகமாய்ப் போர்டிகோ படியிறங்கி வந்தார்.



"புவனேஷை போலீஸ் கைது பண்ணி இருக்காங்கம்மா."

"எ..எதுக்கு வக்கில்?" குரல் குளறியது.

"கோபிநாத்தை புவனேஷ் கொலை பண்ணிட்டதாய் கைது பண்ணி இருக்காங்கம்மா. புவனேஷ் இப்போ 'லாக்–அப்'பில் இருக்கார். போலீஸ் அவரோட அறையை சோதனை போட்டிட்டிருக்காங்க."

திகில் ஒரு தீர்க்கமான கத்திக்குத்து மாதிரி இதயத்தின் மையத்தில் இறங்கியது. கார்த்திகா சுவாசிக்கத் திணறினாள்.

## 14

**த**ளர்ந்துபோய் காரின் கைப்பிடியைப் பற்றிக்கொண்ட கார்த்திகாவை ஏறிட்டபடி மெல்லிய குரலில் சொன்னார் வக்கீல் பார்த்தசாரதி. "இதோ பாரும்மா... போலீஸ் இன்ஸ்பெக்டர் கிட்டேயும், புவ்னேஷ்கிட்டேயும் நான் பேசிப் பார்த்து சேகரித்த விஷயங்களிலிருந்து– புவனேஷ் நிச்சயமா கோபிநாத்தைக் கொலை செஞ்சிருக்க முடியாதுங்கிற முடிவுக்கு வந்துட்டேன். வழக்கு நீதிமன்ற வாசற்படி ஏறுவதுக்கு முன்னாடியே அதை உடைச்சுடலாம்... நீ பயப்படாமே இரு."

வக்கீல் பார்த்தசாரதி சொன்ன வார்த்தைகள், கார்த்திகாவின் மனசுக்குக் கொஞ்சம் தெம்பை வார்த்தன. "போலீஸ் அவரை விட்டுடுவாங்களா சார்?"

அவர் புன்னகைத்தார்.

"விடும்படியா நான் பண்ணுறேம்மா. என்னோட ஜூனியர் ஒருத்தன் எம்.எல்.ஏ.வா இருக்கான். அவன்கிட்ட விஷயத்தைச் சொன்னா போதும்... வழக்கு கோர்ட்டுக்குப் போறதுக்கு முன்னாடியே சுத்தமாயிடும்."

"நி...ஜ...மா...வா... சார்?"

"தைரியமா நீ உள்ளே வாம்மா. உன்னை விசாரிப்பதற்காக இன்ஸ்பெக்டர் வராந்தாவிலே காத்திட்டிருக்கார். அவர்கிட்டே துணிச்சலாப் பேசு."

தலையாட்டிக்கொண்டே பார்த்தசாரதியோடு போர்ட்டிகோ படியேறி ஹாலுக்குள் நுழைந்தாள். காவலர்களுக்கு ஏதோ உத்தரவு கொடுத்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன், கார்த்திகாவைப் பார்த்ததும் அவளை நோக்கி வந்தார்.

வக்கீல் பார்த்தசாரதி குறுக்கிட்டுச் சொன்னார்: "இவர் மிஸஸ் கார்த்திகா. புவனேஷின் மனைவி."

நவநீதகிருஷ்ணன் ஒரு போலீஸ் பார்வையை அவள் மேல் போட்டபடி கேட்டார்: "ராத்திரி முழுக்க நீங்க எங்கேம்மா போயிருந்தீங்க?"

"சா... சாலிக்கிராமத்துல ஒரு நடன நிகழ்ச்சிக்கு. நிகழ்ச்சி முடிஞ்சதுமே பலமா மழை பெய்ய ஆரம்பிச்சிடுச்சு. கோவில் தர்மகர்த்தா வீட்டுலே தங்கி, பொழுது விடிஞ்சதும் உடனடியா புறப்பட்டு வர்றேன்" என்றவள், குரல் தழுதழுக்கச் சொன்னாள்: "அவர் கொலை பண்ணியிருக்கமாட்டார் இன்ஸ்பெக்டர்."

நவநீதகிருஷ்ணன் புன்னகைத்தார். "நாங்களும் உங்க கணவர்தான் கொலையைப் பண்ணினவர்ன்னு சொல்லலையேம்மா. சந்தேகத்தின் பேரில் அவரை கைது பண்ணி இருக்கோம். அவ்வளவுதான்."

"அந்த கோபிநாத் ரொம்ப மோசமானவன் இன்ஸ்பெக்டர். அவனுக்கு நிறைய பேர் வேண்டாதவங்க இருக்காங்க. அவங்கள்ல யாராவது ஒருத்தர்தான் அவனைக் கொன்னு இருப்பாங்க."

"கோபிநாத் மோசமானவன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்னோட கணவர் சொல்லி இருக்கார்."

"வெளியில் விசாரிச்சுப் பார்த்த அளவுல கோபிநாத்துக்கு ரொம்பவும் வேண்டாத ஒருத்தர்ன்னா அது புவனேஷ்தான்னு சொல்றாங்களே, உண்மையா?"

பதில் சொல்லத் திணறினாள், கார்த்திகா. நவநீதகிருஷ்ணன் தொடர்ந்து கேட்டார்: தொழிற்சாலையின் அமைப்பு தலைவர் பதவிக்கு புவனேசும், கோபிநாத்தும்தான் போட்டியிடப் போறதா இருந்தாங்களாமே... உண்மையா?"

"ஆமா. அப்புறம், போட்டியில் இருந்து கோபிநாத் விலகிட்டார்.

"யார் சொன்னது?" நவநீதகிருஷ்ணன் சிரித்தார்.

"கோபிநாத் இந்தத் தலைவர் தேர்தல்ல ஜெயிச்சுடணும்னு மும்முரமா இருந்திருக்கார். அமைப்புச்செயலர் ராமகிருஷ்ணன் வீட்டுக்குப் போய் எல்லாத்தையும் விசாரிச்சுக்கிட்டுதான்



வந்திருக்கேன் மிஸஸ் கார்த்திகா. உங்க கணவரைச் சிண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறதுக்காகக் கோபிநாத் போட்டியிலிருந்து விலகிக்கிற மாதிரி பாவ்லா பண்ணினாராம்.

இந்தப் பாவ்லா விஷயம் நேத்தைக்கு ஞாயிற்றுக்கிழமை ராத்திரி எட்டு மணிக்கு மேலே உங்க கணவருக்கு யார் மூலமாவோ தெரிஞ்சு அவர் ஆத்திரமாயிட்டாராம்- அதே ஆத்திரத்துல ஒரு ஆட்டோவைப் பிடிச்சு கோபிநாத் வீட்டுக்குப் போயிருக்கார். ரெண்டு பேருக்கும் அங்கே வாக்குவாதம் நடந்திருக்கு. வாக்குவாதம் முற்றிப்போக- புவனேஷ் கோபத்துல கோபிநாத்தைக் கொன்றிருக்கலாம்."

அவர் சொல்லச் சொல்ல உறைந்துபோனாள், கார்த்திகா. கத்தினாள்.

"இல்ல இன்ஸ்பெக்டர்... நீங்க சொல்றது தப்பு."

நவநீதகிருஷ்ணன் ஏதோ சொல்ல வாயெடுத்த நேரம்- உள்ளே புவனேஷின் அறையை கிளறிப் பார்த்துக்கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷ் வேகவேகமாய் வந்தார். கையில் ஒரு குறிப்பேடு.

"சார், இந்த டைரியைக் கொஞ்சம் பார்க்கிறீங்களா?"

"என்ன அவினாஷ்... ஏதாவது முக்கியமா?"

"ரொம்ப ரொம்ப முக்கியமானது சார்."

"இந்த டைரி புவனேஷோடது. மூணு நாளைக்கு முந்தின தேதியிலே அவர் கோபிநாத்தைப் பத்தி எழுதியிருக்கார் சார்."

நவநீதகிருஷ்ணன் அதை வாங்கிப் பார்த்தார். கிறுக்கலான எழுத்துகளில் நான்கைந்து வரிகள் தெரிந்தன.

**'அதிசயமாய் இன்று காலை கோபிநாத் என் வீட்டுக்கு வந்தான். கையில் ஒரு பெரிய பொக்கே... அவனுடைய பேச்சும், பார்வையும் சரியான குள்ளநரித்தனம். கார்த்திகாவைப் பாராட்ட வந்தவன் மாதிரித் தெரியவில்லை. அவளை மோப்பம் பிடிக்க வந்தவன் மாதிரித் தெரிந்தது. கன்னத்தில் பளார் பளாரென்று நான்கு அறைவிட்டு- கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள என் கை பரபரத்ததை அடக்கிக்கொண்டேன்.**

**அவன் போன பிறகு- இன்று மத்தியானத்துக்குமேல் எனக்கும், கார்த்திகாவுக்கும் அரவிந்தன் குழந்தை விஷயமாய்ச் சண்டை. கார்த்திகா இன்று பூராவும் என்னோடு பேசவில்லை.**

டைரியின் தாள்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்,

நவநீதகிருஷ்ணன். டைரியின் எல்லாத் தேதிகளிலும் விஷயங் இருந்தன. பெரும்பாலும் தொழில் சம்பந்தப்பட்ட விஷயங் நடுநடுவே கார்த்திகாவின் பெயர். தேர்தல் மனுத்தாக் விவரங்கள். ஆதரவு கேட்கப் போகவேண்டிய பகுதிகள். டைரி மூடிக்கொண்டே கார்த்திகாவிடம் கேட்டார் நவநீதகிருஷ்ண

"அரவிந்தன்ங்கிறது யாரு? டைரியில் ரெண்டு மூணு இடத் பேர் வருது..."

"அவரோட குழந்தை ராணிக்கு வர்ற புதன்கிழமை அமெரிக்கா இதய 'ஆபரேஷன்' நடக்கப்போகுது. அந்தக் குழந்தையோட சிகிச் செலவுக்காகத்தான் நடன நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தேன். நா அப்படிச் செஞ்சது என் கணவருக்குப் பிடிக்கலை... அதனா எங்களுக்குள்ளே அடிக்கடி சண்டை வரும்.. அரவிந்தன் இன்னிக் காலையிலதான் அமெரிக்கா புறப்பட்டுப் போனார்..."

"கோபிநாத் உங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாரா?"

"ரெண்டு தடவைதான் வந்திருக்கார்..."

நவநீதகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷி திரும்பினார். "அறையை நல்லா அலசினீங்களா? டைரி நமக் கிடைச்ச ஒரு நல்ல தடயம்.. கோபிநாத்மேலே புவனேஷ் வைச்சிருக் கோபம், ஆத்திரம் எல்லாம் அதுல நல்லாவே தெரியுது. அறை இன்னும் கிளறிப் பாருங்க. ஏதாவது மாட்டும்."

"சரி சார்."

அவினாஷ் மறுபடியும் உள்ளே போனார்.

**போ**லீஸ் நிலையத்துக்கு முன்னால் காரை நிசப்தமாக்கினா கார்த்திகா. காலை எட்டு மணி.

வயிற்றை இனம்புரியாத ஒரு சங்கடம் பிசைந்தது. எந் நிமிடமும் வாந்தி வருகிற மாதிரியான உணர்வு. காரினின்று இறங்கி- ஸ்டேஷன் வாசற்படிகளில் ஏறி உள்ளே போனா காவலர் ஒருவர் அவளை எதிர்கொண்டார்.

"'லாக்-அப்' அந்தப் பக்கமாக இருக்கும்மா. சீக்கிரமா பார்த்து பேசிட்டு வந்துடுங்க. தாமதம் பண்ணிடாதீங்க..."

கார்த்திகா தலையாட்டிவிட்டு உள்ளே போனாள். ஈரமாய் மக்கிப்போன வாசனையோடு 'லாக்-அப்' அறை வந்தத கம்பிகளுக்கு அருகே போய் நின்றாள்..

சிறைக்கு உள்ளே இருந்த சிமெண்டு திட்டுக்குச் சாய்ந்தபடி தெரிந்த புவனேஷ், கார்த்திகாவைப் பார்த்ததும்- கண்களில் ததும்பிப்



பளபளத்த நீரோடு வேகமாய் எழுந்து வந்தான். ஒரே ராத்திரியில் ஏகமாய்க் கசங்கிப் போயிருந்தான். தவிப்பாய்க் கூப்பிட்டான்.

"கா...ர்...த்...தி..."

கார்த்திகாவின் உதடுகள் மெலிதாய்த் துடித்தன. கண்களுக்குள் நீர் சுறுசுறுவென்று ஊறியது. செய்யாத குற்றத்திற்காக வந்து உட்கார்ந்திருக்கும் கணவனைப் பார்க்கப் பார்க்க அடிவயிற்றில் அக்கினி பரவியது. மனசில் சிந்தனை ஓடியது.

'நடந்த உண்மையைப் போலீசில் சொல்லிவிடலாமா?'

ஒருகணம்தான் இந்த எண்ணம். மறுகணமே மனசுக்குள் அரவிந்தனும், குழந்தை ராணியும் வந்து நின்றார்கள். கோபிநாத்தைக் கொன்றது அரவிந்தன்தான் என்று சொன்னால்- அடுத்த இருபத்துநாலு மணி நேரத்திற்குள் போலீஸ் அரவிந்தனை அமெரிக்காவில் இருந்து வரவழைத்துவிடுவார்கள். அப்பாவைப் பிரிந்து குழந்தை ராணி அதற்குப்பின் உயிரோடு இருப்பாளா? குழந்தைக்கு சிகிச்சை நல்லபடியாய் நடந்து, அவள் பிழைக்க வேண்டும் என்பதற்காகத்தானே இவ்வளவு பாடுபட்டது?

'கொலைப் பழியை நானே ஏற்றுக்கொண்டால்?'

'நேற்றைக்கு ராத்திரி மார்ஷல் சாலையில்- சந்தித்த அந்த கிரைம்பிராஞ்சு போலீஸ் ஆள்- என்னையும், அரவிந்தனையும் ஒருசேரப் பார்த்திருக்கிறார். நாளைக்குச் செய்தி வெளியே வரும்போது, அந்தப் போலீஸ் ஆள்- அரவிந்தனையும் இதில் சம்பந்தப்படுத்துவார். அமெரிக்காவில் இருக்கும் அரவிந்தனிடம் விவரம் கேட்பார்கள். கொலைப் பழியை நான் ஏற்றுக்கொண்டிருப்பது தெரிந்தால்- அரவிந்தன், குழந்தை ராணியை விட்டுட்டு இங்கே வரத் தயங்கமாட்டார். ஊகூம்.. வேண்டாம்."

"கார்த்திகா..."

கம்பிகளைப் பற்றி இருந்த கார்த்திகாவின் கைகளின் மேல் தன் கைகளைப் பதித்தான், புவனேஷ். மெலிதாகக் கேவினான்: "நான்... கோ...கோபிநாத்தைக் கொலை செய்யலை கார்த்தி..." குரல் கம்மினான் அவன்.

"எனக்குத் தெரியுங்க... நான் உங்களை நம்பறேன். நம்ம குடும்ப வக்கீல் பார்த்தசாரதி உங்களை வெளியே கொண்டுட்டுவர்றதுக்காக முயற்சி பண்ணிட்டிருக்கார்."

"கார்த்தி..."

புவனேஷின் கண்களில் நீர் சிதறியது.

"அ... அழாதீங்க..." அவளும் விம்மினாள்.

புவனேஷ் தழுதழுத்தான். "நிகழ்ச்சி முடிஞ்சு வர்றப்போ உன்னோட கால் சலங்கை ரெண்டையும் வழியிலேயே எறிஞ்சுட்டுவரச் சொன்னேன். நான் அப்படிச் சொன்ன நிமிடம் மோசமான நிமிடமா இருக்கணும். இல்லேன்னா கால் சலங்கையை கேவலப்படுத்தின எனக்கு இந்தக் கை காப்பு ஏறி இருக்குமா?"

அவள் ஒன்றும் பேசத் தோன்றாமல் மவுனமாய் இருந்தாள். ஏதோ பேச வாயெடுத்த விநாடி, இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் 'பூட்ஸ்' சத்தம் ஒலிக்க அருகே வந்தார்.

"என்னம்மா... என்ன சொல்றார் உங்க கணவர்?"

"அவர் அந்தக் கொலையைப் பண்ணலை இன்ஸ்பெக்டர். உண்மையான குற்றவாளியைத் தப்பவிட்டுட்டு, இவரைப் பிடிச்சிட்டீங்க."

"கையும் களவுமா உங்கக் கணவரைப் பிடிச்சிருக்கோம். விதண்டாவாதம் பண்ணாமல் குற்றத்தை ஒப்புக்கிட்டா, கொலைக்கான காரணத்தை அனுசரிச்சு தண்டனையைக் குறைக்க நான் ஏற்பாடு பண்ணுறேன்."

"அவர் அந்தக் கொலையைச் செய்யலை."

நவநீதகிருஷ்ணன் புன்னகைத்தார். "மிஸஸ் கார்த்திகா! இன்னும் ரெண்டு நாள் கழிச்சு, இதே 'லாக்கப்'புக்கு வந்து உங்கக் கணவர்கிட்டே கோபிநாத்தை கொலை செஞ்சது யாருன்னு கேட்டுப் பாருங்க. 'நான்தான்' என்று சொல்லி குற்றத்தை ஒப்புக்குவார். போலீஸ் சிகிச்சையோட முதல் பாடத்தை இன்னிக்கு ராத்திரிக்குத்தான் உங்கக் கணவருக்குச் சொல்லித் தரப்போறோம். அந்த முதல் சிகிச்சையிலேயே உங்கக் கணவர் குற்றத்தை ஒப்புக்கப்போறார்."

புவனேசும், கார்த்திகாவும் வியர்த்த முகம் மாறினார்கள். கார்த்திகா சொன்னாள்: "இன்னிக்கு சாயந்தரத்துக்குள்ளே நான் இவரை ஜாமீன்ல எடுக்கப்போறேன்."

"இவரை நீங்க ஜாமீன்ல எடுக்க முடியாது."

"ஏன்?"

"சம்பவ இடத்திலேயே கைது பண்ணி இருக்கோம். இந்த மாதிரி வழக்கெல்லாம் பொதுவா ஜாமீனில் எடுக்க முடியாது."

அவள் புவனேஷின் பக்கமாய்த் திரும்பினாள். "நீங்க தைரியமா இருங்க. நான் போய் நம்ம வக்கீலைப் பார்த்துட்டு வர்றேன். சாயந்தரத்துக்குள்ளே உங்களை ஜாமீன்ல வெளியே கொண்டுவர ஏற்பாடு பண்ணுறேன்."

சொல்லிவிட்டு, அழுகை தத்தளிக்கும் கண்களோடு விருட்டென



நகர்ந்து ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்த காரை நோக்கிப் போனாள், கார்த்திகா.

**உ**யர்நீதிமன்ற சேம்பரில் மூன்றாவது அறை.

தன் முன்புற வழுக்கையை அவதியாய் தேய்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த வக்கீல் பார்த்தசாரதியிடம் ஆத்திரமும், அழுகையுமாய் பொருமினாள், கார்த்திகா.

பார்த்தசாரதி அவளை ஏறிட்டார். "நான் எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்துட்டேன்மா. போலீஸ் தரப்பிலே ரொம்பவும் உறுதியா இருக்காங்க. புவனேஷை ஜாமீன்ல எடுக்கிறது கஷ்டம்மா."

முகம் மாறினாள் கார்த்திகா. "வக்கீல் சார்! நீங்க காலையில என்கிட்டே பேசறப்போ, எப்படியும் அவரை வெளியே கொண்டுவந்துடலாம்னு சொன்னீங்க. இப்போ முடியாதுன்னு சொல்றீங்களே?"

"நான் என்னம்மா பண்ணட்டும்? உதவி செய்வார்னு எதிர்பார்த்த அந்த ஆளுங்கட்சி எம்எல்ஏ, கடைசி நேரத்திலே பின்வாங்கிட்டார். நாம எதுவுமே பண்ண முடியாது. இது, உணர்ச்சிவசப்பட்டதால் நிகழ்ந்த கொலையா, திட்டமிட்ட கொலையான்னு தெரியணும்."

அவர் பேசப் பேச–

ஆத்திரமாய்க் குறுக்கிட்டாள், கார்த்திகா. "அவர் கொலை செய்யலை வக்கீல் சார்!"

பார்த்தசாரதி புன்னகைத்தார். "அவர் கொலை செய்யலேன்னு நீ எப்படியம்மா அவ்வளவு உறுதியா சொல்றே? உனக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா?"

கார்த்திகா பதில் சொல்லத் திணறினாள். மனசுக்குள் மறுபடியும் ஒரு மவுனப் பிரளயம் நிகழத் தொடங்கியது. 'அரவிந்தனைப் பற்றி சொல்லிவிடலாமா?'

## 15

**வ**க்கில் பார்த்தசாரதி மேசையின் மேல் கிடந்த தன்னுடைய மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கண்களுக்குக் கொடுத்தபடி, ஒரு

லேசர் பார்வையை எதிரே தவிப்பாய் உட்கார்ந்திருந்த கார்த்திகாவின் மேல் போட்டார். மெலிதான குரலில் கேட்டார்:

"என்னம்மா, என்னமோ சொல்ல வர்றே? அப்புறம் சட்டுன்னு பேச்சை நிறுத்திக்கிறே. என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லே வக்கீல் சார்."

"இல்லே... உன்கிட்டே என்னமோ விஷயம் இருக்கு. அந்தக் கோபிநாத் கொலை விஷயமா நீ என்னமோ சொல்ல வர்றே. ஏதாவது இருந்தால் சொல்லிடும்மா. வழக்குக்கு அது உபயோகமான தகவலாகவும் இருக்கலாம்."

"வக்கீல் சார்..."

"சொல்லும்மா."

"கோபிநாத்தை என் கணவர் கொலை செஞ்சிருப்பாருன்னு நீங்க நினைக்கிறீங்களா?"

"இல்லேம்மா. சுத்தமா நான் நினைக்கலை."

"கோபிநாத்துக்கு வியாபார ரீதியிலே நிறைய நண்பர்கள். அதேமாதிரி நிறைய எதிரிகள். அவங்களிலே யாராவது ஒருத்தர்தான் அவரைத் தீர்த்துக்கட்டியிருக்கணும். அப்படித் தீர்த்துக்கட்டினவங்க யாராவது வெளிநாட்டுக்கு தப்பி ஓடிட்டா அவங்களை உடனடியா கைது செய்து இந்த இடத்துக்குக் கொண்டுவர முடியுமா வக்கீல் சார்?"

பார்த்தசாரதி தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, மறுபடியும் மேசையின் மேல் போட்டுவிட்டு மோவாயை தடவிக்கொண்டார். "ஓடினவன் எந்தத் தேசத்துக்குப் போயிருக்கான்னு கண்டுபிடிச்சிட்டா, இங்கே கொண்டுவர்றது சுலபம். அதுக்காகவே சர்வதேசப் போலீஸ் இருக்கு."

பார்த்தசாரதி சொல்லச் சொல்ல, கார்த்திகா வெறித்த பார்வையோடு எங்கோ பார்த்தாள். மனசுக்குள் எண்ணம் பரபரவென்று அலைந்தது. 'வேண்டாம். அரவிந்தனைக் கைகாட்டிவிட்டால் அடுத்து இருபத்துநாலு மணி நேரத்தில் அவரை இங்கே கொண்டுவந்துவிடுவார்கள். அப்புறம்... அப்புறம்... அந்தக் குழந்தையின் கதி? அவளுக்கு நடைபெறவேண்டிய ஆபரேஷன்?'

"என்னம்மா?" காதில் வந்து மோதின வக்கீல் பார்த்தசாரதியின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

அவர் கேட்டார்: "அப்படி வெளிநாடு போயிருக்கிற யார் மேலாவது உனக்குச் சந்தேகம் இருக்காம்மா?"



"இ-இ- இல்லே வக்கீல் சார்... அது ஒரு ஊகம்தான்."

"நீ ரொம்பவும் தடுமாற்றமா இருக்கேம்மா. மனசு குழம்பிப் போயிருக்கே."

"நான் புறப்படுறேன் சார். நாளைக்குக் காலையிலே மறுபடியும் வர்றேன்" சொல்லிக்கொண்டே கார்த்திகா எழுந்தாள்.

"நீ தைரியமா வீட்டுக்குப் போம்மா. நாளைக்குக் காலையிலே நான் ஏதாவது ஏற்பாடு பண்ணி, புவனேஷை ஜாமீன்ல கொண்டுவந்துடுறேன்."

கைகளைக் குவித்துவிட்டு, வெளியே நின்றிருந்த தன்னுடைய காரை நோக்கிப் போனாள், கார்த்திகா.

**வி**டியற்காலை நேரம்.

சிறைக் கதவு 'கிரீச்'சென்று பின்னால் சத்தமிட்டுக்கொண்டு போக, புவனேஷ் உள்ளே இருந்து வெளியே வந்தான். அரைக்கை வெள்ளைச் சட்டை, வெள்ளை கால்சட்டையில் தெரிந்தான்.

வெளியே காத்திருந்த ஜெயிலர், டாக்டர், மாஜிஸ்திரேட்டு, இரண்டு வார்டன்கள் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். டாக்டர் பரிசோதித்துவிட்டு, "ஆரோக்கியம்" என்றார்.

மாஜிஸ்திரேட்டு ஏதோ ஒரு பாரத்தை நீட்டி அவரிடம் கையெழுத்து வாங்கிக்கொள்ள, சிறைச்சாலை வராந்தாவில் நடந்தார்கள். கனமான பூட்சுகளுக்குக் கீழே கருங்கல் தரை 'க்க்க்ர்ர்ர்ர்க்க்க்க்க்ர்ர்ர்ர்ர்க்' என்று கதறியது.

வராந்தா முடிந்து வெட்டவெளிக்கு வர, சுற்றுச்சுவருக்கு வெளியே கிழக்கு திசையின் சிவப்பான பின்னணியில் தூக்குமேடையும், சுருக்குக் கயிறும் நிழலாய்த் தெரிந்தன. எல்லோரும் அதற்கு முன்பாகப் போய் நின்றார்கள்.

புவனேஷ் அருகே மாஜிஸ்திரேட் வந்தார். "உனக்குன்னு கடைசி ஆசை ஏதாவது இருக்கா? இருந்தால் சொல்லு. நிறைவேத்திடலாம்" மெல்லிய குரலில் கேட்டார்.

புவனேஷின் கண்களில் நீர் தெரிந்தது. "ஐயா! என்னோட மனைவி கார்த்திகா காலிலே நான் என் கையாலே சலங்கையைக் கட்டணும். அவள் மறுபடியும் ஆடணும்."

புவனேஷ் பெருங்குரலெடுத்து வீறிட்டுக் கத்த—

திடுமென படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்தாள், கார்த்திகா. கண்ட கனவில் உடம்பு வியர்த்திருந்தது. இதயம்

துடித்துக்கொண்டிருந்தது. கனவின் பயங்கரம் மனதில் தைக்க, கண்களில் நீர் பிரவாகம் எடுத்தது. நாளைக்கு நடக்கப்போகிறதுதானா இந்தக் கனவு?

தன் மணிக்கட்டில் இருந்த கடிகாரம் பார்த்தாள். அது 2.30 என்றது. தொண்டையும், உதடுகளும் காகிதமாய் வறண்டுபோயிருக்க டீபாயின் மேலிருந்த தண்ணீர் கோப்பையை எடுத்து வாயில் கவிழ்த்து, ஒரு மிடறு விழுங்கினாள்.

'நான் இப்படி இருப்பது சரிதானா?'

'என்னுடைய தாலிக் கயிற்றைப் பணயம் வைத்து, நான் ஆடிக்கொண்டிருக்கிற இந்த நாடகம் முறைதானா?'

அரவிந்தன் செய்த கொலையைப் போலீசில் சொன்னால் என்ன ஆகும்? அவனை உடனே சர்வதேச போலீஸ் மூலமா வரவழைப்பார்கள். அவ்வளவுதானே? ராணியின் 'ஆபரேஷன்' தடைபடாதபடி நான் அவளருகே இருந்து கவனித்துக்கொண்டால் சரியாய்போயிற்று? ராணி முதலில் அழுவாள். மெல்ல மெல்ல அவளைச் சமாதானப்படுத்திக்கொண்டால் பிரச்சினை தீர்ந்தது.' 'கோர்ட்டு படி ஏறிவிட்டால் அப்புறம் போலீஸ் கை ஓங்கிவிடும். பிறகு, இவரை என்னால் காப்பாற்ற முடி[illegible]து.'

'சாரி அரவிந்தன்! என்னோட சுயந[illegible]துக்காக உங்களைக் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம், எ[illegible]க்கு. நான் காண்கிற கனவுகள் எல்லாமே நிஜங்களாயிட்டு வர்ற[illegible]ரம், இது. என்னோட ரெண்டு கால்களையும் யாரோ கத்தியாலே வெட்டுற மாதிரியும், சலங்கை அணிந்து அந்த ரெண்டு காலும் தெறிச்சு விழுற மாதிரியும் பத்து நாளைக்கு முன்னாடி கனவு கண்டேன்.

அந்தக் கனவு வேறொரு வகையிலே நி[illegible]ாயிடுச்சு. என்னைக் கைப்பிடிச்சவரே வாய்விட்டு, நான் [illegible]ாவிலே சலங்கைக் கட்டக்கூடாதுன்னு சொன்னார். நான் [illegible]கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கண்ட அந்தப் பயங்கர கனவு என்னோட வாழ்க்கையிலே நடந்துடக்கூடாது [illegible]கிறதுக்காகத்தான் உங்களைப் பத்தி போலீசில் சொல்லப்போறேன். சொல்லிட்டு நான் இங்கேயே உட்கார்ந்திருக்கமாட்டேன். ராணியை உங்க சார்பா கவனிச்சுக்கிறதுக்காக நான் அமெரிக்கா புறப்பட்டு வரப்போறேன்."

பரவியிருந்த இருட்டில் நடந்துபோய், தொலைபேசியை நெருங்கினாள், கார்த்திகா. ரிசீவரை எடுத்து, காதுக்குக் கொடுத்து– எண்களை அழுத்த நினைத்தவள் ஒரு விநாடி நிதானித்தாள்.



'இந்த விஷயத்தை 'போன்' மூலமா சொல்வது சரியா? நேரில் போய் விலாவாரியாகச் சொல்ல வேண்டாமா?'

அந்த எண்ணம் மனசுக்குப் பட்டதுமே வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து கண்ணாடி முன் நின்று– கூந்தலையும், சேலையையும் சரிப்படுத்திக்கொண்டு மேசை மேலிருந்த கார் சாவியை எடுத்துக்கொண்டாள்.

விளக்கை அணைத்துவிட்டு வராந்தாவுக்கு வந்தவள், அங்கே தூங்கிக்கொண்டிருந்த வேலைக்காரியை எழுப்பி, வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் 'போர்டிகோ'வில் நின்றிருந்த கார் அருகே வந்தாள். அரை நிமிட நேரத்துக்குப் பின்–

வெளிச்சப் பிழம்புகளோடு இருட்டைக் கரைத்துக்கொண்டு கார் புறப்பட்டது.

**ஊ**மைச் சாமியார் மவுன விரதம் இருந்த மாதிரி அந்த ராத்திரி நேர சாலை பூராவும் கனமான நிசப்தம். சென்னை தூங்கிக்கொண்டிருக்க, காரைப் பறத்திக்கொண்டு போனாள், கார்த்திகா.

மனசுக்குள் எண்ணக் குமிழ்கள் 'பட்பட்'டென்று ஒவ்வொன்றாய் வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தன.


'விஷயத்தைச் சொன்னால் இன்ஸ்பெக்டர் முதலில் நம்பமாட்டார். வழக்கை திசை திருப்புவதற்காக நான் ஏதோ சொல்வதாக நினைப்பார். அப்படி அவர் நினைக்கிறபட்சத்தில்– அன்றைக்கு மழை பெய்த ராத்திரி என்னைச் சந்தித்துப் பேசிய கிரைம்பிராஞ்சு போலீசைக் கூப்பிட்டு உண்மையைச் சொல்ல வைக்கணும்."

கார் சிந்தாதிரிப்பேட்டையைக் கடந்து, அண்ணா சாலையை சாய்வாய் வெட்டிக்கொண்டு போயிற்று.

மனசும், உடம்பும் படபடத்தன.

அரவிந்தனைக் காட்டிக் கொடுக்கப்போகிற துரோகம் நெஞ்சில் பச்சைப் புண்ணாய் வலித்தது. சாலையின் அகலமான பிரதேசத்தில் காரை 'ஜிவ்'வென்று பறத்தினாள். அரை கிலோமீட்டர் போனதும், போலீஸ் நிலையம் போகும் அந்தத் திருப்பம் வந்தது.

காரின் நான்கு டயர்களும் கிறீச்சிட்டுத் திரும்ப– பாதி வளைவில் அந்த சைக்கிள்காரன்– ஒரு சினிமாப் பாட்டோடு அதிகபட்ச வேகமாய்– 'டைனமோ' இல்லாமல் சட்டென்று எதிர்ப்பட– அவனைத் தவிர்ப்பதற்காக இடப்புறமாய் 'ஸ்டீரியங்'கை முழு வேகத்தோடு திருப்பினாள். அடுத்த விநாடி, காரின் முகத்துக்கு



நேரே மாநகராட்சியின் குப்பைத்தொட்டி எதிர்ப்பட–

'டொம்ம்ம்ம்ம்ம்...' என்ற மிகப்பெரிய சத்தத்தோடு கார் உருண்டது. கார்த்திகா காருக்குள் பல தடவை மொத்தப்பட்டு ரத்தமானாள்.

அரசு ஆஸ்பத்திரி. ஐ.சி. யூனிட்.

ரத்தத்தில் நனைந்து– மல்லாக்கப் படுக்க வைக்கப்பட்டிருந்த கார்த்திகாவின் உடம்பை ஒரு டாக்டர் குழு மொய்த்திருந்தது. உடம்பிலிருந்த காயங்களைத் தேடி, அவற்றின் ரத்தப் பெருக்கை நிறுத்தி– தையலிட்டு, 'பாண்டேஜ்' போட்டார்கள்.

ரத்தம் செலுத்தினார்கள். கார்த்திகா ஒரு தடவை சுவாசிக்கத் திணறியபோது, பிராணவாயுவைப் புகட்டினார்கள். விடியற்காலை ஐந்து மணிக்கு அவளுடைய தலையின் பின்பக்கத்தில் மிகப்பெரிதான ஒரு ரத்தக் காயத்தை 'ஆபரேஷன்' மூலம் சரிசெய்தார்கள்.

ஐ.சி. யூனிட்டிலிருந்து காலை ஆறு மணிக்குத்தான் தலைமை டாக்டர் செண்பகராமன்– தூக்கம் கெட்டுப்போன கண்களோடும், பிரகாசம் இழந்த முகத்தோடும் வெளியில் வந்தார். அங்கு காத்திருந்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், வக்கீல் பார்த்தசாரதியும் டாக்டரை நெருங்கினார்கள்.

"டாக்டர்..."

"கவலைப்படாதீங்க. சிகிச்சை கொடுத்திட்டிருக்கோம்."

"உயிருக்கொண்ணும் ஆபத்தில்லையே டாக்டர்?"

"இல்ல... ரத்தம் அதிகமாய்ச் சேதமாகிறதுக்கு முன்னாடி ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்ததினாலே காப்பாத்தியாச்சு. அபாயகட்டத்தைத் தாண்டியாச்சு. ஆனா!!!"

"ஆனா... என்ன? நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

"தலையிலே மூளைப் பாகம் செமத்தியா அடிபட்டிருக்கு. அதனால ஞாபகம் எப்போ திரும்பும்னு சொல்ல முடியாது."

"டாக்டர்! என்ன சொல்றீங்க?" வக்கீல் பார்த்தசாரதி அதிர்ந்துபோய் கேட்டார்.

"மயக்க நிலை."

நவநீதகிருஷ்ணன் திடுக்கிட்டார். மருத்துவரீதியா ஏதாவது செஞ்சு அவங்களை ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியாதா டாக்டர்? அந்த ராத்திரி நேரத்திலே அவங்க எங்கே போயிட்டு வந்தாங்கன்னு போலீசுக்குத் தெரியணும். ஒரு வாக்குமூலம் வாங்கணும்."

"மன்னிக்கணும் இன்ஸ்பெக்டர். கார்த்திகா இப்போ இருக்கிற நிலைமையிலே உயிரோடு இருக்கிறதே அதிசயம்தான்" -சொல்லிக்கொண்டே டாக்டர் செண்பகராமன் நகர்ந்தார்.

"ஒரு நிமிடம் டாக்டர்" வக்கீல் பார்த்தசாரதி குறுக்கிட்டார்.

"என்ன?"

"கார்த்திகாவோட கால்களுக்கு எந்தச் சேதமும் இல்லையே டாக்டர்?"

"இல்ல... தலையிலே மட்டும்தான் பலத்த காயம்."

"நாங்க பார்க்கலாமா டாக்டர்?"

"இப்போ வேண்டாம். ஒரு மணி நேரம் கழிச்சுப் பாருங்க."

"நன்றி டாக்டர்."

இருவரும் நீளமான பெஞ்சில் வந்து உட்கார்ந்தார்கள். நவநீதகிருஷ்ணன் தொப்பியை கழற்றி மடியில் வைத்தபடி கேட்டார்: "ஒரு பிரபலமான நடனப் பெண் ராத்திரி ரெண்டு மணிக்கு மேலே காரை எடுத்துகிட்டு எங்கே போயிருக்கணும்? உங்களாலே ஏதும் யூகம் பண்ண முடியுதா வக்கீல் சார்?"

"நானும் அதைத்தான் யோசிச்சிட்டிருக்கேன்."

"கணவர், கொலை வழக்குல கைதாகி லாக்-அப்ல இருக்கிறார். அவரோட மனைவி யாரைப் பார்க்கிறதுக்காக அந்நேரத்துக்குப் போயிருக்கணும்?"

நவநீதகிருஷ்ணன் நெற்றியைத் தேய்த்துக்கொண்டு, தீவிரமாய் யோசிக்கத் தொடங்கினார்.

'லாக்-அப்' கம்பிகளுக்குப் பின்னால் சுவருக்குச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான், புவனேஷ். ராத்திரி நடந்த முதல்கட்ட போலீஸ் சிகிச்சையில் முகம் வீங்கி இருந்தது. உதட்டோரம் ஒரு சின்ன ரத்தக் காயம் தெரிந்தது. தலை கலைந்திருந்தது. கண்கள் கலங்கிச் சிவந்து, எந்த நேரத்திலும் அழுகைக்குத் தயாராக மாறியது.

'பூட்ஸ்' சத்தம் கேட்டுத் தலைநிமிர்ந்தான், புவனேஷ்.

சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷோடு, போலீஸ் சூப்பிரண்டு ஆஜானுபாகுவாய் நின்றிருந்தார். காவலர் ஒருவர் 'லாக்-அப்' பூட்டைத் திறந்துவிட-

அவர்கள் உள்ளே வந்தார்கள்.

புவனேஷ் தன்னிச்சையாய் எழுந்து நின்றான். சூப்பிரண்டு தன் வலுவான கையை அவனுடைய புஜத்தின் மேல் வைத்து அழுத்தினார், கரகரத்தார்.



"என்னடா, செஞ்ச கொலையை ஒப்புக்கமாட்டேங்கிறியாமே?"

"நான் கொலை செய்யலை சார்."

"பொய் சொல்லாதே!"

"இல்லே சார்... நிஜமாகத்தான் சொல்றேன்."

சூப்பிரண்டு திரும்பினார்.

"அவினாஷ்..."

"சார்!" விறைப்பாய் நின்றார், அவினாஷ்.

"இன்னிக்கு ராத்திரி இவனுக்குச் சிகிச்சை கொடுக்க நான் வர்றேன். இவனை உண்மையைச் சொல்லவைக்கப் போறேன்."

## 16

அரசு வக்கீல் கமலநாதன் தன் நரையோடிய கிராப்பை ஒருமுறை கோதிவிட்டபடி எதிரே உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனையும், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷையும் ஏறிட்டார். வழக்கு தெளிவா இருக்கு. நம்ம தரப்பு சாட்சியங்கள்ல அந்த கூர்க்கா ரொம்ப முக்கியமானவன். நடுவுல அவன் ஏதும் குழப்படி பண்ணிடமாட்டானே?"

"அதெல்லாம் பண்ணமாட்டான் சார். அவனோட வாக்குமூலம் ரொம்பவும் தெளிவா இருக்கு" நவநீதகிருஷ்ணன் சொன்னார்.

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர், இந்த அஞ்சு வருடத்திலே எத்தனையோ வழக்குகளுக்கு ஆஜராகி இருக்கிறேன். அதுல ஆறு தூக்கு, பத்து ஆயுள் தண்டனை. வழக்குகூடத் தோற்றதே கிடையாது."

"தெரியும் சார்."

"கொல பண்ணினதா சொல்லப்படும் அந்த புவனேஷ், கொலையை ஒத்துகிட்டானா?"

"இல்லே சார். இந்தப் பதினைஞ்சு நாளா அவனை செமத்தியா விசாரிச்சிட்டோம். அந்தக் கொலையைப் பண்ணலேன்னு பிடிவாதமா சொல்றான். எஸ்.பி. நேர்ல வந்து விசாரிச்சிட்டுப் போனார். அப்படியும் ஆள் ஒத்துக்கலை."

"அவனோட மனைவி கார்த்திகாவுக்கு அந்த விபத்துல போன ஞாபகம், திரும்பி வந்துடுச்சா?"

"இன்னும் வரலை சார். எந்த நிமிடமும் ஞாபகம் வரலாம்னு டாக்டர் செண்பகராமன் சொல்லி இருக்கார்."

"கணவனோட வழக்கு கோர்ட்டுல நடக்கப்போகிற நேரம், அந்தப் பொண்ணுக்குச் சுயநினைவில்லை" என்றவர், "இன்ஸ்பெக்டர், இந்த வழக்குல நமக்குப் பாதகமான விஷயம் ஒண்ணு இருக்கே, கவனிச்சீங்களா?" என்று கேட்டார்.

"எது சார்?"

"கோபிநாத்தோட குளியலறையில புவனேஷோட கைரேகை தவிர, வேறு சில கைரேகையும் கிடைச்சிருக்கிறதா தகவல் சொல்லுது. அதேமாதிரி தண்ணீர் குழாயிலேயும் புவனேஷோட கைரேகைக்கு ஒத்துப்போகாத சில கைரேகைங்க இருக்கிறதா தெரிகிறது. இதுக்கு நாம என்ன சமாதானம் சொல்லப்போகிறோம்?"

"கோபிநாத்தோட கொலை நடக்கிறதுக்கு முன்னாடி அந்த வீட்டுக்கு- அவரோட விருந்தினர் யாராவது வந்திருக்கலாம். அவங்க, குளியலறையை பயன்படுத்தி இருக்கலாம். அவங்க கைரேகையா இருக்கலாம்."

"அதை கோர்ட்டுல நிரூபிக்கணுமே?"

"நிரூபிக்கலாம் சார்."

"எப்படி நிரூபிப்பீங்க?"

நவநீதகிருஷ்ணன் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்த நேரம்- அரசு வக்கீலுக்குப் பக்கத்தில் இருந்த தொலைபேசி ஒலித்தது.

ரிசீவரை எடுத்தார் கமலநாதன். டாக்டர் செண்பகராமன் பேசுறார். ரிசீவரை வாங்கிக் காதுக்குக் கொடுத்த நவநீதகிருஷ்ணன், "குட்மார்னிங் டாக்டர்" என்றார்.

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர். ஆஸ்பத்திரிக்கு ஒரு அஞ்சு நிமிடம் வந்துட்டுப் போக முடியுமா?"

"என்ன விஷயம் டாக்டர்?"

"கார்த்திகா நினைவு திரும்பிக்கிட்டிருக்காங்க. வலதுகால் பெருவிரல் லேசா அசையுது. கண்ணிமைகளில் ஒரு துடிப்பு தெரியுது! வர்றீங்களா? அவங்களுக்கு நினைவு திரும்பிட்டா, நீங்க வாக்குமூலம் வாங்கிக்கலாம். ஸ்டேஷனுக்குப் போன் பண்ணி இருந்தேன். நீங்க அரசு வக்கீல் வீட்டுக்குப் போய் இருக்கிறதா தகவல் சொல்லி- போன் நம்பரையும் கொடுத்தாங்க."

"இதோ இப்ப வந்துடறேன் டாக்டர்" ரிசீவரைச் சாத்திவிட்டு வேகவேகமாய் எழுந்தார், நவநீதகிருஷ்ணன். கமலநாதனிடம்



விஷயத்தைச் சொல்லிவிட்டு- அவினாஷோடு புறப்பட்டார்.

அரசு ஆஸ்பத்திரியின் 'ஆஸ்பெஸ்டாஸ்' வேய்ந்த கூரைக்குக்கீழ் ஜீப்பை நிசப்தமாக்கிவிட்டு "டக்... டக்..." என்ற பூட்ஸ் சத்தத்தோடு வராந்தாவில் நடந்து- டாக்டர் செண்பகராமனின் அறையைத் தொட்டார்கள்- நவநீதகிருஷ்ணனும், அவினாசும்.

"வாங்க இன்ஸ்பெக்டர்" எதிர்கொண்ட டாக்டர் செண்பகராமன், கார்த்திகா இருந்த அறையை நோக்கிக் கூட்டிப்போனார்.

"கார்த்திகாவுக்கு ஞாபகம் வந்துடுச்சா டாக்டர்?"

"எந்த நிமிடமும் வரலாம்."

"ஞாபகம் வந்தா அவங்களாலே பேசமுடியுமா டாக்டர்?"

"பேசுவாங்கன்னு நினைக்கிறேன்."

அறைக்குள் நுழைந்தார்கள். கட்டில் அருகே நின்றிருந்த நர்சு நகர்ந்துகொள்ள- மூன்று பேரும் கட்டிலைச் சுற்றிப் பரவினார்கள்.

பதினைந்து நாட்களுக்கு முன்னால் எப்படி இருந்தாளோ, அதே கோணத்தில் இந்த நிமிடமும் படுத்திருந்தாள், கார்த்திகா. உடம்பின் நிறம் மங்கி இருந்தது. முகத்திலும், கை- கால்களிலும் ஒருவித வறட்சித்தனம் தெரிந்தது.

டாக்டர், பெருவிரலைச் சுட்டிக்காட்டினார். நவநீதகிருஷ்ணனும், அவினாசும் குனிந்து பார்த்தார்கள். கார்த்திகாவின் பெருவிரலில் லேசான அசைவு இருந்தது. முகத்தருகே குனிந்து கண் இமைகளைப் பார்த்தார்கள். இமைகளில் மெலிதான துடிப்பு தெரிந்தது.

"எந்த நிமிடத்திலும் ஞாபகம் வரலாம். இன்ஸ்பெக்டர், அந்த ஞாபகமும் சில நிமிட நேரந்தான் இருக்கும். அதுக்குள்ளே, நீங்க பேசவேண்டியதைப் பேசிடணும். மறுபடியும் ஞாபகம் வர இன்னொரு பதினைஞ்சு நாள் ஆகும்."

"நாங்க இங்கேயே இருக்கலாமா டாக்டர்?"

"ம்..."

இருவரும் நாற்காலியில், உட்கார்ந்து, காத்திருக்கத் தொடங்கினார்கள்.

நேரம்- விநாடிகளைச் சாப்பிடத் தொடங்கியது.

போலீஸ் நிலையம்.

'லாக்கப்' கம்பிகளில் நெற்றியைப் பதித்து வெடித்து கதறிக்கொண்டிருந்த புவனேஷைச் சமாதானப்படுத்துவ

இணைறிப்போனார், வக்கீல் பார்த்தசாரதி.

"இதோ பார் புவனேஷ்... நீ இந்த நேரத்துலதான் தைரியமா இருக்கணும். இன்னும் இரண்டு நாள்ல வழக்கு கோர்ட்டுக்கு வரப்போகுது. உனக்குப் பாதகமா வழக்கு இருந்தாலும்– ரெண்டு, மூணு தகவல் எனக்கு வலுவா கிடைச்சிருக்கு. இதை, வெச்சுத்தான் உன்னை இந்த வழக்கிலிருந்து கழட்டப் போறேன்."

புவனேஷ் விம்மினான்.

"இனிமே என்னைப்பத்தி நான் கவலைப்படலை சார். தலைக்கு மேலே வெள்ளம் போயிடுச்சு. கார்த்திகாவை நினைக்கும்போதுதான் எனக்கு பயமா இருக்கு. அவளுக்கு ஒண்ணும் ஆயிடாதே?"

"கார்த்திகாவோட உயிருக்கு ஆபத்தில்லேன்னுதான் டாக்டர் சொல்லிட்டாரே, புவனேஷ். வெறும் மயக்கந்தான். இன்னிக்கு இல்லே நாளைக்கு ஞாபகம் வந்துடும். டாக்டர் செண்பகராமன் ரொம்பவும் நம்பிக்கையோடு இருக்கார்."

"வக்கீல் சார்..." கண்களில் நீர் வழிய எறிட்டான் புவனேஷ்.

"என்ன புவனேஷ்?"

"நான் இன்னொருதடவை கார்த்திகாவைப் பார்க்க ஏற்பாடு பண்ண முடியுமா?"

தன் தாடையைத் தடவிக்கொண்டே பார்த்தசாரதி, புவனேஷைப் பார்த்தார். "போலீஸ் உன்னை வெளியேவிடக் கூடாதுங்கிறதுலே ரொம்பவும் பிடிவாதமா இருக்காங்க, புவனேஷ். கோர்ட்டு மூலமா உத்தரவு வாங்கி உன்னை ஒரு மணி நேரம் வெளியே கொண்டு வர்றத்துக்காக எவ்வளவு சிரமப்பட்டோம்? அந்தச் சிரமத்தை மறுபடியும் படணுமா? நான்தான் தினமும் கார்த்திகாவைப் பார்த்துட்டு வர்றேனே. நீ பத்து நாளைக்கு முன்னாடி எப்படிப் பார்த்தியோ அதே மாதிரித்தான் கார்த்திகா படுத்துக்கிடக்கா."

புவனேஷின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்தது. "அவளைக் கொஞ்ச நாளாவே வார்த்தைகளாலே ரொம்பவும் இம்சை பண்ணிட்டேன் வக்கீல் சார். அவகிட்டே இருக்கிற பரதத்தைப் பழிச்சேன். அவ செஞ்ச நல்ல காரியங்களுக்கு நஞ்சு பூசிவிட்டேன். அவளோட உணர்ச்சிகளை மதிக்காமே, எரிஞ்சு விழுந்தேன். என்னோட தொழிலுக்கு நான் கொடுத்த முக்கியத்துவத்துல பத்துல ஒரு பங்கு முக்கியத்துவத்தை அவகிட்ட காட்டியிருந்தாகூட அவ ரொம்பவும் சந்தோஷப்பட்டிருப்பா. ஆனா, நான்... நான்..." ஆத்திரம் தாங்காமல் தன் முஷ்டியைக் குவித்துக் கம்பிகளைக் குத்தினான், புவனேஷ்.



"போனதையே நினைச்சுட்டிருக்காதே, புவனேஷ். நீ கொலை செய்யலைன்னு எனக்குத் தெரியும். நிச்சயமா உன்னைக் காப்பாத்த என்னால முடியும். நம்பிக்கையோடு இரு."

"எனக்கு நம்பிக்கையில்லை வக்கீல் சார்" புவனேஷ் அழுகையில் குரல் வெடித்துச் சிதறியது.

**டா**க்டர் செண்பகராமன் சின்னதாய் ஓர் உற்சாகச் சத்தம் போட்டார்.

"இன்ஸ்பெக்டர், வாங்க. கார்த்திகாவுக்கு ஞாபகம் வந்துக்கிட்டிருக்கு. உதடு அசைவுல இருக்கு."

நவநீதகிருஷ்ணனும், அவினாசும் உட்கார்ந்திருந்த நாற்காலிகளை விட்டு எழுந்து– வேக வேகமாய் கார்த்திகாவை நெருங்கினார்கள்.

கார்த்திகாவின் உடம்பில் சின்னச் சின்ன மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. இரண்டு கைகளும் மேலே மெல்ல உயர்ந்து தாழ– நீட்டி இருந்த கால்களை மடக்கி– புரண்டு படுத்தாள். உதடுகள் மெல்லப் பிளந்து, பல்வரிசை தெரிந்தது.

"மிஸஸ் கார்த்திகா..." கூப்பிட்டுக்கொண்டே இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் அவளருகே குனிந்தார்.

கார்த்திகாவின் கண்ணிமைகள் சிரமமாய்ப் பிரிந்தன. கண்களை மெல்லக் கொட்டினாள். உதடுகள் வேகமான துடிப்பில் இருந்தன. கண்ணின் கருவிழிகள் நிதானமாய் ஒரு அரைவட்டம் அடித்து, நவநீதகிருஷ்ணனின் மேல் நிலைத்தன. அவரையே பார்த்தாள். வெறித்த மாதிரியான பார்வை.

"மிஸஸ் கார்த்திகா... எங்களை அடையாளம் தெரியுதா?" நவநீதகிருஷ்ணன் அவளுக்கு அருகாக இன்னமும் குனிந்தார். 'இவர் இன்ஸ்பெக்டர்' என்கிற தகவல் அவளுடைய மூளைப் பிரதேசத்துக்கு அஞ்சலானதும், உடம்பு பூராவும் பரபரத்தாள். வேகவேகமாய் வாயசைத்தாள். உதட்டோடு பற்களும்– காற்றும் ஒத்துழைக்காமல் போகவே, பேச்சுக் கோர்வையில்லாமல், "ழி...ன்...ஸ்... பெ... ழ்க்...டர்..." என்று குழறியது. தொண்டையின் நரம்பு புடைத்தது.

"என்னம்மா... சொல்லுங்க?"

கார்த்திகா பிரயாசைப்பட்டு கண்களை மலர்த்தி, நவநீத கிருஷ்ணனை சோர்வாய்ப் பார்த்தாள். 'ழி...ழி...ழி...' என்று எதையோ சொன்னாள். அரை நிமிட நேரம் பேசியும், அவள் பேசியது எதுவும் புரியாமல் போகவே, நவநீதகிருஷ்ணன்

திரும்பி- டாக்டரைப் பார்த்தார்.

"என்னமோ சொல்ல வர்றாங்க. ஆனா, அவங்களாலே சொல்ல முடியலை."

"கட்டாயப்படுத்தாதிங்க இன்ஸ்பெக்டர்."

"அவங்களாலே பேசத்தான் முடியலை. கையிலே காகிதமும், பேனாவும் குடுப்போம். எழுத முடிஞ்சா எழுதட்டுமே" அவினாஷ் சொன்னார்.

நர்ஸ் ஒருத்தி காகிதத்துக்காக வெளியே ஓடிய அதே நிமிடம்-

கார்த்திகாவின் உடம்பு ஒரு மாதிரியாய் முறுக்கிக்கொண்டது. பெரிது பெரிதாய் மூச்சிரைத்தாள். விநாடிக்கு விநாடி மூச்சிரைப்பு குறைந்துகொண்டே போக, நர்ஸ் காகிதத்தோடு வந்தபோது கார்த்தகா மறுபடியும் நினைவு தப்பிப் போயிருந்தாள்.

"மறுபடியும் மயக்கம் ஆயிருக்கு" –டாக்டர் செண்பகராமன் சொல்ல, நவநீதகிருஷ்ணனும், அவினாசும் கவலையானார்கள்.

"டாக்டர் மறுபடியும் இவங்களுக்கு எப்போ ஞாபகம் வரும்?"

"நான்தான் சொன்னேன்ல்ல... இன்ஸ்பெக்டர். விபத்து நடந்து பதினைஞ்சு நாள் கழிச்சுதான் முதல்தடவையா ஞாபகம் வந்தது. அதே மாதிரி இன்னொரு பத்துப் பதினைஞ்சு நாள் கழிச்ச பின்னாடிதான் மீண்டும் ஞர்பகம் வரும். அதையும் உறுதியா சொல்ல முடியாது. ஆனா, காத்திருப்போம்.

நவநீதகிருஷ்ணன், கார்த்திகாவைப் பார்த்தார்.

'என்ன சொல்ல வந்தாள் இந்தப் பெண்?'

மல்லார்ந்து மரக்கட்டை மாதிரி படுத்திருந்த கார்த்திகாவைப் பார்த்து. 'பெருமூச்சொன்றைவிட்டபடி –அறையிலிருந்து வெளியேறினார், நவநீதகிருஷ்ணன்.

அவினாஷ் தலைக்குத் தொப்பியைக் கொடுத்துக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து-

காலை பத்து மணி.

கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போக- போர்டிகோவில் நின்றிருந்த கார் அருகே வந்தார் வக்கீல் பார்த்தசாரதி. உடம்பில் தளர்ச்சியும், கண்களில் கவலையும் விரவியிருந்தன. காருக்குள் ஏறப்போனவரைப் பின்பக்கமிருந்து வந்த குரல் ஈர்த்தது.

"அய்யா..."



திரும்பினார்.

புவனேஷ் வீட்டு சமையல் ஆள் மருது- கையில் ஒரு உறையோடு நின்றிருந்தான். வக்கீல் அவனை நோக்கி வந்தார்.

"என்ன மருது?"

"அம்மா பேருக்கு இந்தக் கடுதாசி வந்திருக்குங்க?" சொல்லிக்கொண்டே நீலமும், சிவப்புமாய் வரியிட்ட அந்த வெளிநாட்டு கடிதத்தை நீட்டினான்.

பார்த்தசாரதி வாங்கினார். மூக்குகண்ணாடியைச் சரியாய்ப் பொருத்திக்கொண்டு, பார்த்தார். கார்த்திகாவின் முகவரி தெளிவாய் இருக்க, அனுப்பியவர் முகவரியைப் பார்த்தார். 'அரவிந்தன், செல் எண்: 00568320, மயோ கிளினிக், மின்னேசோடா, அமெரிக்கா.'

குடும்ப வக்கீல் என்ற உரிமையோடு- உறையின் வாயைக் கிழித்து, உள்ளே இருந்த கடிதத்தை உருவினார். பார்வை, வார்த்தைகளில் ஓடியது.

**'என் தாயின் ஸ்தானத்திலிருக்கும் கார்த்தி அம்மா அவர்களுக்கு,**

**அரவிந்தன் வணக்கத்துடன் எழுதிக்கொண்டது.**

**நானும், குழந்தை ராணியும் மின்னேசோடா வந்து சுகமாய்ச் சேர்ந்தோம். சேர்ந்ததுமே உங்களுக்கு போனில் தொடர்புகொள்ள முயன்றேன். இணைப்பு சரியாக இல்லாத காரணத்தினால், உங்களோடு பேச முடியவில்லை. ஆகவே இந்தக் கடிதம்.**

**அம்மா! ராணிக்கு 'ஆபரேஷன்' நல்லபடியாய் முடிந்தது. தற்போது ஆரோக்கியமாய் இருக்கிறாள். டாக்டர்கள் இங்கு நல்லமுறையில் கவனித்துக்கொள்கிறார்கள். நீங்கள் சொன்னா ஆச்சரியப்படுவீர்கள். ராணி இப்போது 'ஸ்கிப்பிங்' ஆடுகிறா ஊருக்கு வந்ததும் 'ஆன்ட்டி'யிடம் நடனம் கற்றுக்கொள் போகிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்.**

**அம்மா! நான் இங்கு எவ்வளவுதான் சந்தோஷமாய் இருந்தா அந்த 'ஞாயிற்றுக்கிழமை இரவு' சம்பவத்தை என்னால் மறக் முடியவில்லை. தொண்டைக்குள் எசகு பிசகாய் மாட்டிக்கொ முள்மாதிரி- அந்தச் சம்பவம் மனசுக்குள் நெருடிக்கொண்டிருக் போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிந்து ஆசைப்படுகிறேன். கடிதத்தைப் படித்ததும் கிழித்துவி உங்கள் கணவரின் பார்வையில் இது பட்டுவிடப் போகிற**

சட்டென்று கடிதத்தைப் படிப்பதை நிறுத்தினார், பார்த்தசாரதி. கண்களுக்கு முன்னால் தொங்கிக்கொண்டிருந்த திரை விலகின மாதிரியான ஒரு உணர்வு.

# 17

போலீஸ் நிலையம். நேரம், காலை பத்தரை மணி.

வக்கீல் பார்த்தசாரதி மோவாயைத் தாங்கியபடி எதிரே உட்கார்ந்திருக்க– கடிதத்தைப் படித்து முடித்த இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்–இன்ஸ்பெக்டர் அவினாசும் பரஸ்பரம் பதற்றத்தைப் பூசிக்கொண்டார்கள். அவசரக் குரலில் கேட்டார்கள்.

"எப்ப சார் இந்த கடிதம் வந்தது?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி."

"யார் இந்த அரவிந்தன்?"

"எனக்கும் சரியா விவரம் தெரியலை இன்ஸ்பெக்டர். சமையல் ஆள் மருதுவை விசாரிச்சேன். அவனோட குழந்தையோட இதய அறுவைச் சிகிச்சைக்காக கார்த்திகா நடன நிகழ்ச்சி நடத்தி, நிதி உதவி பண்ணி இருக்காளாம். அரவிந்தனும் அடிக்கடி வீட்டுக்கு வருவானாம்."

நவநீதகிருஷ்ணன் சொன்னார். "கடிதத்துல இருக்கிற ஒரு வாசகம் நாம சந்தேகப்படுற அளவுக்கு உறுதியா இருக்கு. 'ஞாயிற்றுகிழமை இரவு சம்பவத்தை என்னால மறக்கவே முடியலை'ன்னு எழுதி இருக்கான். அதனால கார்த்திகாவும், அரவிந்தனும் அந்தச் சம்பவத்துல சம்பந்தப்பட்டு இருக்காங்க. அந்தச் சம்பவமா ஏன் இருக்கக்கூடாது?"

"இருக்கலாம் இன்ஸ்பெக்டர்" வக்கீல் சொல்ல– அவினாஷ் குறுக்கிட்டார். அரவிந்தன் குறிப்பிடுற சம்பவம் வேற சம்பவமா இருந்துட்டா?"

அவினாஷிடம் வக்கீல் திரும்பினார். "இருக்க வாய்ப்பே இல்லை மிஸ்டர் அவினாஷ். கார்த்திகா ஏற்கெனவே ஒருமுறை என்கிட்டே சந்தேகம் கேட்டா..."

"என்ன சந்தேகம்?"

"கொலையைப் பண்ணிட்டு யாராவது ஒருத்தர் வெளிநாடு



போயிட்டா அவரைக் கண்டுபிடிக்கிறபட்சத்துல வெளிநாட்டிலிருந்து உடனடியா நம்ம ஊருக்குக் கொண்டு வந்துடலாமான்னு கேட்டா. அவ அப்படிக் கேட்ட நேரத்துல அந்தக் கேள்வி எனக்கு அவ்வளவு முக்கியமாப்படலை. ஆனா, இப்போ அந்தக் கேள்வி அதி முக்கியமானதா படுது."

"அந்த அரவிந்தனோட வீடு எங்கேன்னு உங்களுக்குத் தெரியுமா வக்கீல் சார்?"

"எனக்குத் தெரியலை."

"சமையல்காரன் மருதுவைக் கேட்டீங்களா?"

"கேட்டேன். அவனும் தெரியலைன்னு சொன்னான்."

"புவனேசுக்குத் தெரியுமா?"

"தெரிஞ்சிருக்கலாம்."

"வாங்க, கேட்டுப் பார்ப்போம்."

'லாக்–அப்'பை நோக்கி மூவரும் போனார்கள். கலைந்த தலையும், குழி விழுந்த கண்களுமாய்– சுவரோடு ஒட்டிப்போய் உட்கார்ந்திருந்த புவனேஷை நவநீதகிருஷ்ணன் கூப்பிட்டார்.

"புவனேஷ்!"

அவன் எழுந்துவந்து கம்பிகளைப் பற்றிக்கொண்டான்.

"உனக்கு அரவிந்தனைத் தெரியுமா?"

"தெரியும்" குழப்பமாய்த் தலையாட்டினான், புவனேஷ்.

"அவன் வீடு எங்கேன்னு தெரியுமா?"

"தெரியும்."

"எங்கே?"

"மார்ஷல் ரோட்ல ராஜரத்தினம் ஸ்டேடியத்துக்கு எதிர்ல ஒ[illegible] அடுக்குமாடி குடியிருப்புல இருக்கு. அவனைப்பத்தி எதுக்கா[illegible] கேக்கிறீங்க இன்ஸ்பெக்டர்?"

"வந்து சொல்றோம்."

பார்த்தசாரதியின் காரிலேயே மூன்று பேரும் மார்[illegible] ரோட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஒரு குடியிருப்புக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு– அரவி[illegible] வீட்டை விசாரித்துக்கொண்டு– மேலே ஏறிப்போனார்கள். அ[illegible] இருந்த மொத்தக் குடித்தனமும் வேடிக்கை பார்க்க– க[illegible] முன்னே நின்றார்கள்.

பக்கத்து வீட்டில் இருந்த ஒரு அம்மாள் பயமாய் [illegible] பார்க்க– அவளிடம் நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

"அரவிந்தனோட வீடு இதுதானேம்மா?"

"ஆமா" என்றபடி தலையை உள்ளே இழுத்துக்கொண்டாள், அந்த அம்மாள்.

"அவினாஷ்..."

"சார்..."

"நாம கொண்டுவந்த- அந்த மாஸ்டர் சாவிக்கொத்தை எடுத்து, பூட்டைத் திறங்க. உள்ளே புகுந்து பார்த்துடலாம்."

அவினாஷ் சாவிக்கொத்துடன் பூட்டை நெருங்கினார். பூட்டின் சாவி துவாரத்தை பார்த்துக்கொண்டு- ஒரு சாவியை உருவிப் பொருத்தினார். அது வழி கொடுக்காமல் போகவே- இன்னொரு சாவியைக் கூப்பிட்டார். அதுவும் "ஊகூம்" சொல்ல- மூன்றாவது சாவியில் பூட்டு கைகளைத் தூக்கிக்கொண்டது. 'கிளிக்.'

மூன்று பேரும்- கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனார்கள்.

வீடு இருபது நாள் பூட்டி இருந்ததால்- லேசாய்த் தூசி படிந்தது தெரிந்தது. சிலந்திகள் சுவரின் மூலையோரங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு- குறுக்கும் நெடுக்குமாய் கோடுகள் போட்டிருந்தன. வீட்டில் இருந்த சாமான்களில் ஓர் ஒழுங்கின்மை தெரிந்தது. கையால் நூலாம்படைகளை விலக்கிக்கொண்டு- அந்தச் [illegible]றிய வீட்டை மெல்லச் சுற்றி வந்தார்கள்.

ஐந்து நிமிட அலசல்.

நவநீதகிருஷ்ணன் திரும்பினார்.

கதவுக்குப் பின்னே- சுவரில் மாட்டி இருந்த அந்தக் குடை கண்ணுக்குச் சிக்கியது. கண்களில் ஒரு சின்ன அதிர்ச்சி அலை அடிக்க- அதை நெருங்கினார்.

குடையின் உள்ளும் புறமும்- 'மொலு மொலு'வென்று ஏராளமான சிகப்பு எறும்புகள். குடைத் துணியைப் பொத்தல் பொத்தலாய் அரித்திருந்தது.

"அவினாஷ்."

"சார்..." டிரங்க் பெட்டியைக் குடைந்துகொண்டிருந்த அவினாஷ், வேகவேகமாய் நவநீதகிருஷ்ணனை நோக்கி வந்தார். அருகே வந்து [illegible]ன்றார். "எஸ்... சார்."

"அந்தக் குடையைப் பார்த்திங்களா?"

பார்த்தார் அவினாஷ். ஆச்சரியப்பட்டார்.

"என்ன சார், இவ்வளவு எறும்பு?"

"எறும்பு மட்டுந்தானா உங்க கண்ணுக்குத் தெரியுது? இன்னும் கொஞ்சம் பக்கத்தில் நெருங்கிப் பாருங்க அவினாஷ்."

அவினாஷ் பக்கத்தில் போனார். பார்வையைக் கூர்மையாக்கியதும்- அதிர்ந்தார்.

குடைக்கம்பியின் முனை இடுக்குகளிலும்- குடைத்துணியின் மேற்பரப்பிலும்- காய்ந்து போன ரத்தப் பொருக்குகள்.

நவநீதகிருஷ்ணன் புன்னகைத்து சொன்னார்.

"கோபிநாத்தைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் எதுவா இருக்கும்னு மண்டையைப் போட்டு உடைச்சிக்கிட்டோமே அவினாஷ்... அது இப்போ இங்கே இருக்கு."

அரசு ஆஸ்பத்திரி. 'ஐ.சி.' யூனிட் பூராவும் அசாத்திய பரபரப்பில் இருந்தது. டாக்டர் குழாம் ஒன்று கார்த்திகாவை மொய்த்திருக்க- டாக்டர் செண்பகராமன் 'பொல்'லென்று வியர்த்துவிட்ட வழுக்கைத் தலையோடு- அறையில் இருந்து வெளிப்பட்டு, தொலைபேசியை நோக்கி ஓடினார்.

ரிசீவரை எடுத்து, எண்களைப் பதிவு செய்தார். மறுமுனையில் ரிசீவர் எடுக்கப்பட்டதும் கேட்டார். "அலோ, போலீஸ் நிலையமா?"

"எஸ்..."

"மிஸ்டர் நவநீதகிருஷ்ணன்."

"எஸ்... நான்தான் பேசுறேன்."

"நான் டாக்டர் செண்பகராமன் பேசுறேன் இன்ஸ்பெக்டர்."

"என்ன டாக்டர், என்ன விஷயம்?",

"கார்த்திகா ரொம்பவும் அபாயகட்டத்துல இருக்காங்க."

நவநீதகிருஷ்ணன் அதிர்ந்தார். "என்னாச்சு டாக்டர்?"

"திடீர்னு மூளையில் ரத்தக் கசிவு. நான் இதை எதிர்பார்க்கல்லை இன்ஸ்பெக்டர். சீக்கிரமா ஆஸ்பத்திரிக்கு வர்றீங்களா?"

"இதோ புறப்பட்டுட்டேன் டாக்டர். ஆனா, நீங்க ஒரு மோசமான விஷயத்தைச் சொன்னீங்க. நான் ஒரு மகிழ்ச்சியான விஷயத்தைச் சொல்லலாமா?"

"சொல்லுங்க."

"கார்த்திகாவோட கணவரை கோபிநாத் கொலை சம்பந்தமா கைது பண்ணி இருந்தோம். கொலையாளி அவர் இல்லைன்னு இப்போ தெரிஞ்சுடுச்சு. உண்மையான கொலையாளியைக் கண்டுபிடிச்சுட்டோம்."

"அப்படியா? வாழ்த்துகள்."

"புவனேஷைக் கூட்டிட்டு தான் இப்போ ஆஸ்பத்திரிக்கு வர்றேன் டாக்டர்."

"சீக்கிரமா வாங்க."

“**கா**ர்த்தி–ஈஈஈ–ஈ...”

ஜீப், ஆஸ்பத்திரி வாசலில் நிற்பதற்கு முன்பே– தாவிக் குதித்து வராந்தாவில் ஓடினான், புவனேஷ். வெள்ளைநிறம் அடிக்கப்பட்ட 'ஐ.சி. யூனிட்'டின் கதவைத் தட்டப்போனவனை– டாக்டர் செண்பகராமன் அழுத்திப் பிடித்து– சுவரோர பெஞ்சுக்குத் தள்ளிக்கொண்டு வந்தார்.

“அமைதியா இருங்க புவனேஷ்...”

புவனேஷ் கைகூப்பினான். “டாக்டர், என்னோட கார்த்திகாவைக் காப்பாத்துங்க டாக்டர். எனக்கு இந்தத் தொழில் வேண்டாம். தொழிற்சாலை வேண்டாம். எனக்கு கார்த்திகா வேணும். என்னோட கார்த்திகா வேணும்.”

நவநீதிகிருஷ்ணனும், வக்கீல் பார்த்தசாரதியும் அவனை நெருங்கினார்கள். “கொஞ்சம் பொறுமையா இருங்க, புவனேஷ். கார்த்திகாவுக்கு ஒண்ணும் ஆகாது. பயப்படாதீங்க.”

டாக்டர் செண்பகராமன், புவனேஷின் தோளைத் தட்டினார். “மூணு முக்கியமான டாக்டர்கள் கார்த்திகாவைக் காப்பாத்துற முயற்சியில் ஈடுபட்டிருக்காங்க. உங்களுக்கு அவங்க மனைவி. எங்களுக்கெல்லாம் அவங்க ஒரு அற்புதமான நடனப் பெண்மணி. அவங்களை நாங்க காப்பாத்தியே தீருவோம்.”

“நன்றி டாக்டர்” புவனேஷ் நாக்கு தழுதழுப்போடு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே– ஆஸ்பத்திரி வாசலில் அந்த கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

நான்கு பேரும் திரும்பினார்கள்.

காரின் டிரைவர் இருக்கையில் இருந்து டாக்டர்– நடராஜன் இறங்கிக்கொண்டிருக்க, பின் இருக்கையிலிருந்து– அரவிந்தன் தயக்கமாய் வெளிப்பட–

அவனைத் தொடர்ந்து ரப்பர் பந்தாய்த் துள்ளி இறங்கும் ராணி. இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்–இன்ஸ்பெக்டர் அவினாசும் போலீஸ் பார்வைகளோடு உஷாரானார்கள். சர்வதேச போலீசின் உதவியை நாடி– அரவிந்தனை எப்படி சென்னைக்குக் கொண்டுவருவது என்கிற யோசிப்பில் இருக்கும் இருவருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தபடி– டாக்டர் நடராஜனுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தான், அரவிந்தன்.

டாக்டர் நடராஜன், நவநீதகிருஷ்ணனை நெருங்கித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டதும்– மெல்லிய குரலில் சொல்லத் தொடங்கினார். “இன்ஸ்பெக்டர்! நானும், அரவிந்தனும் போலீஸ் நிலையத்துக்குப் போயிட்டு– விபரம் தெரிஞ்சுக்கிட்டு நேரே இங்கே வர்றோம். நேத்தைக்கு விடிகாலையில அரவிந்தன் மின்னேசோடாவிலிருந்து எனக்கு போன் பண்ணிப் பேசினார். குழந்தை ராணியோட 'ஆபரேஷன்' நல்லபடியா முடிஞ்சதாகவும்– அந்த தகவலை கார்த்திகாவுக்குச் சொல்லும்படியாகவும் என்கிட்டே கேட்டுகிட்டார். நான் கார்த்திகாவுக்கு விபத்து நடந்த விபரத்தையும்– அவங்க கணவர் புவனேஷ், கோபிநாத் கொலை வழக்கில் கைது ஆகியிருக்கிற விபரத்தையும் சொன்னேன்.

சொன்னதுமே அரவிந்தன் அதிர்ச்சியாயிட்டார். 'டாக்டர்! நான் உடனே ராணியைக் கூட்டிக்கிட்டுப் புறப்பட்டு வர்றேன்'னு சொல்லிவிட்டு, ரிசிவரை வெச்சுட்டார். இன்னிக்கு அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் சென்னை வந்து சேர்ந்தார். என்னைச் சந்திச்சார். நடந்த எல்லா விபரத்தையும் என்கிட்டே சொன்னார். போலீசில் சரணடையறதுக்கு முன்னாடி– கார்த்திகாவைப் பார்க்கணும்'ன்னு ஆசைப்பட்டார். கூட்டிட்டு வந்தேன்.”

அரவிந்தன் கண்களில் மின்னும் நீரோடு நவநீதகிருஷ்ணனைப் பார்த்துக் கைகூப்பினான். “இன்ஸ்பெக்டர், என்னோட குழந்தை ராணிக்கு 'ஆபரேஷன்' பண்ணவேண்டிய அவசியமில்லைன்னா– கோபிநாத்தைக் கொலை செஞ்ச மறுநிமிடமே போலீசில் சரண் அடைஞ்சிருப்பேன். உங்ககிட்டே இருந்து தப்பிக்கணும்ங்கிற எண்ணம் எனக்கில்லை.

ராணிக்கு 'ஆபரேஷன்' நல்லபடியா முடிஞ்சு– ஊர் திரும்பினதும் ஒரு அநாதை விடுதியில் அவளைச் சேர்த்துட்டு,போலீசில் சரணடைய நினைச்சேன். இப்ப நான் அந்த 'அம்மா'வைப் பார்த்ததும் நீங்க என்னை ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டு போலாம் இன்ஸ்பெக்டர்.”

அரவிந்தன் பேசிக்கொண்டிருந்தபோதே– மெல்ல மெல்ல 'ஐசி. யூனிட்' கதவு திறந்தது.

டாக்டர்கள் பயந்த முகங்களோடு வெளிப்பட்டார்க... திசைக்கு ஒருவராய்க் கழன்றுகொள்ள– நடுவில் வந்த நரைத்த தலை டாக்டரை– எல்லோருமாய் சூழ்ந்துகொண்டார்கள்.

“நம்பிக்கையில்லை. அவங்களின் கடைசி நொடி... எண்ணிக்கிட்டு இருக்கோம்.”

நவநீதகிருஷ்ணனும், அவினாசும் திடுக்கிட்டுப்போய் அப்படி... நின்றுகொள்ள– மற்றவர்கள் உள்ளே போனார்கள். பரபரவெ... கட்டிலைச் சூழ்ந்துகொண்டார்கள்.

படுத்திருந்த கார்த்திகாவுக்கு மூச்சு இரைத்தது. ெ... வியர்த்திருந்தது. அரை விழி செருகிய நிலையில்– பலவீன...

பார்வையைப் போட்டு எல்லோருடைய முகங்களையும் தேடினாள். புவனேஷ் கட்டில் அருகே மண்டியிட்டு உட்கார்ந்தான். கண்களில் நீர் சிதறக் கதறினான்.

"கார்த்தி... என்னை விட்டுட்டுப் போயிடாதே..."

அழுகையில் விம்மிக்கொண்டே– குழந்தை ராணி கட்டிலின் மேல் தவழ்ந்து ஏறினாள். "ஆன்ட்டி... ஆன்ட்டி... நான் உங்ககிட்டே நடனம் கத்துக்கணும். எனக்கு இப்போ உடம்பு குணமாயிடுச்சு ஆன்ட்டி. நான் நல்லா ஓடுறேன். 'ஸ்கிப்பிங்' கூடப் பண்ணுறேன். உங்க மாதிரியே நடனம் ஆடணும்ன்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு ஆன்ட்டி. பார்த்தீங்களா? கால்ல கட்டிக்கிற சலங்கை. வர்றவழியில் அப்பாகிட்டே சொல்லி வாங்கிட்டு வந்தேன்."

கையிலிருந்த சிவப்புநிற 'வெல்வெட்' துணியைப் பிரித்து– கலகலவென்ற சத்தத்தோடு இரண்டு சலங்கைகளையும் உருவினாள், ராணி.

சலங்கைமணி சத்தம் கேட்டு– கார்த்திகாவின் இமைகள் வேகமாய் அசைந்தன. கண்களில் ஒரு மின்னல் சுழன்று சுழன்று ஆடியது. உதடுகள் பரவசித்துச் சிரிக்க முயன்றன.

இரண்டு பாதங்களிலும் ஒரு சின்ன உதறல். வலக்கையை உயர்த்தி– ராணியின் கையிலிருந்த சலங்கையைத் தொட எத்தனித்து, முடியாமல் சோர்ந்தாள்.

"அம்மா!" வெடிக்கிற அழுகையோடு அரவிந்தன் அருகே வந்தான். கார்த்திகா மெதுவாய்– மிக மெதுவாய்த் தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். அடையாளம் கண்டுகொண்ட மகிழ்ச்சியில்– உதட்டில் ஒரு சின்ன அசைவு. கண்களில் சிறு மலர்ச்சி.

"கார்த்தி..." பக்கத்தில் மண்டியிட்டு அழுகின்ற கணவனைச் சலனமில்லாமல் பார்த்தாள், கார்த்திகா.

கட்டிலின் மேல் கிடந்த அவனுடைய வலக்கையை மெல்லப் பற்றி– ராணியைக் கண்களால் காட்டினாள். 'இவளையாவது காப்பாத்துவீங்களா?' என்கிற மாதிரியான பார்வை.

புவனேஷ் தலையாட்டினான்.

அதற்கு அப்புறம்–

சரியாய் இரண்டு நிமிடம் மட்டுமே கார்த்திகா–

உயிரோடு இருந்தாள்.

**(முடிந்தது)**